
# கிறிஸ்தவம்

# 9



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிறிஸ்தவம்

## தரம் ஒன்பது

9

தேசிய கல்வி நிறுவகம்

கல்வி வெளியீட்டுத் திணைக்களம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதலாம் பதிப்பு 1998

எல்லா உரிமையும் இலங்கை அரசினர்க்கே.

இந்நூல் கல்வி, உயர்கல்வி அமைச்சினால் கொழும்பு 10, மாளிகாகந்தை, சமயவர்த்தன அச்சகத்தால் அச்சிட்டு வெளியிடப்பட்டுள்ளது.

98 / ஜ / 168 (5000)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேசிய கீதம்

சிறீ லங்கா தாயே - நம் சிறீ லங்கா
நமோ நமோ நமோ நமோ தாயே

நல்லெழில் பொலி சீரணி
நலங்கள் யாவும் நிறை வான்மணி லங்கா
ஞாலம் புகழ் வள வயல் நதி மலை மலர்
நறுஞ்சோலை கொள் லங்கா
நமதுறு புகலிடம் என ஒளிர்வாய்
நமதுதி ஏல் தாயே
நம தலை நினதடி மேல் வைத்தோமே
நமதுயிரே தாயே - நம் சிறீ லங்கா
நமோ நமோ நமோ நமோ தாயே.

நமதாரருள் ஆனாய்
நவை தவிர் உணர்வானாய்
நமதேர் வலியானாய்
நவில் சுதந்திரம் ஆனாய்
நமதிளமையை நாட்டே
நகு மடி தனையோட்டே
அமைவுறும் அறிவுடனே
அடல்செறி துணிவருளே - நம் சிறீ லங்கா
நமோ நமோ நமோ நமோ தாயே.

நமதார் ஒளி வளமே
நறிய மலர் என நிலவும் தாயே
யாமெலாம் ஒரு கருணை அனைபயந்த
எழில்கொள் சேய்கள் எனவே
இயலுறு பிளவுகள் தமை அறவே
இழிவென நீக்கிடுவோம்
ஈழ சிரோமணி வாழ்வுறு பூமணி
நமோ நமோ தாயே - நம் சிறீ லங்கா
நமோ நமோ நமோ நமோ தாயே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்லறம் அறிவான்ற தலைமுறை
நம் நாட்டிலே தோன்றிட
நம் மரசளிக்கும் கொடையிது
நல்வழி காட்டும் நல்லொளியாம்!

உங்கள் பின்வரும்
உடன்பிறவிகள் பொருட்டும்
உணர்வுடன் இதைப் பேணல்
உங்கள் கடனெனக் கொள்வீர்!

அறிவை வளர்த்திடச் சமவுரிமை
அனைவர்க்கும் வழங்கும் நோக்கில்
அரசு தரும் ஏடிதை
அக மகிழ்ந்து ஏற்றிடுவீர்!

றிச்சட் பதிறண
கல்வி, உயர்கல்வி அமைச்சர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னுரை

"கிறிஸ்தவம் தரம் - 9" என்னும் இந்நூல் புதிய கல்விச் சீர்திருத்த நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ்த் தேசிய கல்வி நிறுவகத்தினால் தயாரிக்கப்பட்டுக் கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தினால் வெளியிடப்படுகின்றது.

இது பாடசாலைகளில் ஒன்பதாந்தரத்துப் பிள்ளைகளுக்காக இவ்வாண்டு முதல் நடைமுறைப்படுத்தப்படும் பாடத்திட்டத்துக் கமைய எழுதப்பட்டுள்ளது.

இந்நூலை வெளியிட உதவிய அனைவருக்கும் எனது நன்றி உரித்தாகட்டும்.

ஈ. டப்லிவ். அபேநாயக்க
பதில் மேலதிகக் கல்வி வெளியீட்டு ஆணையாளர்,
கல்வி வெளியீட்டுத் திணைக்களம்,
"இசுருபாய"
பத்தரமுல்ல.
1998. 03. 05.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முகவுரை

புதிய பாடத்திட்டங்கள், அப்பாடத்திட்டங்களுக்கு அமைவான பாட நூல்கள் ஆகியன தயாரிக்கப்பட்டு பாடசாலைகளுக்கு அனுப்பப்பட வேண்டியது கல்விச் சீர்திருத்தச் செயன்முறையின் முக்கியமான ஓர் அம்சமாகும். அச் செயன் முறைக்கு அமைவாகவே இப்பாடநூல் தயாரிக்கப்பட்டுள்ளது.

தேசிய கல்விக் குறிக்கோள்களையும் அடிப்படைத் தகைமைகளையும் இலக்காகக் கொண்டு தயாரிக்கப்பட்டுள்ள இப்பாடநூல், மாணவர் மையக் கற்றல் - கற்பித்தற் செயன் முறைக்கு மாணவரை இசைவுபடுத்தக் கூடியதாக அமைந்துள்ளது.

மாணவரது விருப்புக்களையும் பிரச்சினைகளையும் இனங்கண்டு, அவர்களைச் செயற்பாடுகளில் ஈடுபடுத்திச் சுயமாகக் கற்க வழிநடாத்துவதன் மூலம் வாழ் நாட் கல்விச் செயன் முறையில் ஊக்கம் பெறக் கூடியவாறாக இப் பாடநூலை மாணவர் பயன்படுத்த வகை செய்ய வேண்டியது ஆசிரியரின் முக்கிய பொறுப்பாகும்.

பெற்றோரும் மூத்தோரும் தமது பிள்ளைகளின் அன்றாடக் கல்விக் கருமங்களில் கவனஞ் செலுத்தி, அவர்களுக்கு உதவி ஒத்தாசை புரிய வேண்டியது அவசியமாகும். அதனூடாக கல்விச் செயன்முறையில் மாணவருக்கும் ஆசிரியருக்கும் துணைபுரியலாம்.

இந்நூலைத் தயாரித்து வெளியிடுவதில் அயராது உழைத்த அனைவருக்கும் எனது நன்றியறிதல் உரித்தாகும்.

**பேராசிரியர் லக்ஷ்மன் ஜயதிலக்க**
பணிப்பாளர் நாயகம்

தேசிய கல்வி நிறுவகம்,
மஹரகம.
1998. 01. 01.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆலோசனைக் குழு :- பேராயர் அதி. வணக். கெனத் பர்னாந்து அவர்கள்

பேராயர் அதி. வணக். அன்ரூ குமாரகே அவர்கள்

அருள்திரு. துலிப் பர்னாந்து அவர்கள்

அருள்திரு. போல் கோரலகே அவர்கள்

அருள்திரு. கே. பியதாச அவர்கள்

அருள்திரு. ஜோசப் சர்வானந்தன் அவர்கள்

வினிதா த சில்வா

பிரியானி பர்னாந்து

பியூலா ரோசா

சாவித்திரி டயஸ்

சித்ரா பர்னாந்து

எழுத்தாளர் குழு :- சித்ரா பர்னாந்து

வினிதா த சில்வா

பிரியானி பர்னாந்து

பியூலா ரோசா

சாவித்திரி டயஸ்

தமிழாக்கம் :- அருள்திரு. டானியேல் கோயில்பிள்ளை அவர்கள்

எம். பி. செல்வநிதி பெரேரா

இணைப்பாளர் :- அருள் சகோதரர். ஜோசப் பீரிஸ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உள்ளடக்கம்


| பாடம் | | | பக்கம் |
|---|---|---|---|
| 1. | திருவிவிலியத்தை அறிந்துகொள்ளுதல் | (i) | 1 |
| 2. | திருவிவிலியத்தை அறிந்துகொள்ளுதல் | (ii) | 9 |
| 3. | வேதாகமமும் வரலாற்றுப் பின்னணியும் | | 13 |
| 4. | வேதாகமம் எமது கைகளில் கிடைத்த விதம் | (i) | 18 |
| 5. | வேதாகமம் எமது கைகளில் கிடைத்த விதம் | (ii) | 23 |
| 6. | வேதாகமம் எமது கைகளில் கிடைத்த விதம் | (iii) | 28 |
| 7. | வேதாகமம் எமது கைகளில் கிடைத்த விதம் | (iv) | 33 |
| 8. | ஆதிப் பிதாக்கள் | | 37 |
| 9. | ஆபிரகாமும் ஈசாக்கும் | | 41 |
| 10. | யாக்கோபு அல்லது இஸ்ரயேல் | | 48 |
| 11. | யோசேப்பு | | 55 |
| 12. | இஸ்ரயேல் மக்கள் தலைவர்களின் பணி - மோசேயின் தலைமைத்துவம் | | 59 |
| 13. | பஸ்கா விழா | | 64 |
| 14. | இறைமக்களை உருவாக்குதல் | | 67 |
| 15. | வாக்குப்பண்ணப்பட்ட நாட்டில் குடியமர்த்தல் | | 70 |
| 16. | சவுல் அரசன் | | 73 |
| 17. | தாவீது அரசன் | (i) | 78 |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| 18. | தாவீது அரசன் (ii) | 82 |
| 19. | சாலமோன் அரசன் | 87 |
| 20. | இஸ்ரயேல் நாடு இரண்டாகப் பிரிதல் | 92 |
| 21. | இறைவாக்கினர் எலியா | 97 |
| 22. | இறைவாக்கினர் எலிசா | 103 |
| 23. | இறைவாக்கினர் ஆமோஸ் | 108 |
| 24. | இறைவாக்கினர் ஒசேயா | 114 |
| 25. | இறைவாக்கினர் எசாயா | 117 |
| 26. | இறைவாக்கினர் மீக்கா | 121 |
| 27. | இறைவாக்கினர் எரேமியா | 124 |
| 28. | இறைவாக்கினர் எசேக்கியேல் | 127 |
| 29. | பாபிலோனியச் சிறையிருப்பு | 130 |
| 30. | இரண்டாம் யாத்திரை | 134 |
| 31. | இயேசுவின் காலத்தில் அரசியல் பின்னணி | 139 |
| 32. | சமாரியரும் யூதரும் | 142 |
| 33. | பரிசேயரும் சதுசேயரும் | 145 |
| 34. | ஏரோதியரும் செலோத்தியரும் | 148 |
| 35. | ஆண்டவர் இயேசு ஆரம்பித்த புதிய சமுதாயம் | 151 |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

36. திருச்சபையின் வளர்ச்சியும் பரவலும் 156

37. இயேசுவின் உடலாகிய திருச்சபை 159

38. உலகெங்கும் பரவியுள்ள கிறிஸ்தவத் திருச்சபை 163

39. பௌத்த சமய விழாக்களும், பழக்கவழக்கங்களும் 167

40. இந்து சமய விழாக்களும், பழக்கவழக்கங்களும் 170

41. இஸ்லாம் சமய விழாக்களும், பழக்கவழக்கங்களும் 174

42. இலங்கைக் கிறிஸ்தவன் 178



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடம் 1.

# திருவிவிலியத்தை அறிந்துகொள்ளுதல் (i)

உனக்கொரு புத்தகம் இல்லை
என்று ஏங்குகின்றாயா நண்பா!
அறுபத்தாறும் நிறை நூலினை
அறிந்திட ஆவல் உனக்குண்டா?

இக் கவிதையானது திருவிவிலியம் எனும் புத்தகத்தை உங்களுக்கு அறிமுகப்படுத்துகின்றது. திருவிவிலியத்தை ஒரே புத்தகமாக உபயோகிக்கக் கிடைத்தமை கிறிஸ்தவர்களாகிய எமக்குக் கிடைத்த அதிட்டம் என்று கூறலாம். பல புத்தகங்களின் ஒன்றிணைப்பே விவிலியம் ஆகும். "பைபிள்" எனும் பதம் "பிப்ளொஸ்" எனும் கிரேக்க சொல்லிலிருந்து சிதைந்து வந்த ஒன்றாகும். "புத்தகம்" என்பது அதன் கருத்து. எனவே விவிலியத்தை நூலகத்துக்கு ஒப்பிடுதல் பொருத்தமானதாகும்.

விவிலிய நூல்கள் யாவும் பழைய ஏற்பாடு, புதிய ஏற்பாடு எனும் இரு பிரிவுகளின் கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ளன. பழைய ஏற்பாட்டில் 39 புத்தகங்களும், புதிய ஏற்பாட்டில் 27 புத்தகங்களும் காணப்படுகின்றன. இவைகள் நூல் களஞ்சிய அமைப்பில் வகைப்படுத்தப்பட்டுள்ளன என்பதை இப்பாடத்திற்கு பொருத்தமான உருவப்படம் காட்டுகின்றது.

பழைய ஏற்பாட்டு நூல்களின் முதற் பிரிவில் ஐந்து சட்ட நூல்கள் காணப்படுகின்றன. பஞ்சாகமங்கள் யூதர்களால் "தோரா" அல்லது "மோசேயின் நீதி சட்டங்கள்" எனவும் அழைக்கப்பட்டன. நியாயப்பிரமாணத்தின் சில பகுதிகள் இஸ்லாமியராலும், சமாரியராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டவை என நினைவில் கொள்ளவும். பஞ்சாகமங்களுள் முதல் நூலாக தொடக்க நூல் காணப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறைவன், உலகில் உள்ள அனைத்தையும் படைத்து, பாதுகாத்து வளர்த்திட வழிவகுப்பவர் என்பதனை தொடக்க நூல் மூலம் அறியலாம். இறைவனுக்கும், மனிதனுக்கும் இடையிலான உறவைக் கட்டி எழுப்பிட விரும்பிய இறைவன் ஆபிரகாமுடன் செய்த விசேட உடன்படிக்கையும், அவனது வம்சத்தினர் எகிப்தில் குடியமர்தப்பட்ட விதமும் இந்நூலில் குறிப்பிடப்பட்டுள்ளன. எகிப்து நாட்டில் அடிமைகளாக வாழ்ந்த மக்களின் விடுதலையும் மோசேயின் தலைமைத்துவ வழிகாட்டலும் "விடுதலைப் பயணம்" எனும் நூலில் விளக்கப்பட்டுள்ளது. மக்கள் வாழ்வதற்குத் தேவையான நீதிமுறைகள் "லேவியர்" "எண்ணிக்கை" "இணைச்சட்டம்" என்பவற்றில் எழுதப்பட்டுள்ளன.

உருவப்படத்தின் இரண்டாவது படியில் முந்திய இறைவாக்கினர்களின் பணிகளை விளக்கிக்காட்டும் நூல்கள் உள்ளன. "ரூத்து" இலக்கிய நூல்களில் ஒன்றாக அமையவேண்டும் என்பதை உருவப் படமானது எமக்குப் புலப்படுத்துகின்றது. "புலம்பல்" இலக்கிய நூல்களுள் ஒன்றாகும். இருப்பினும் இந்நூலானது இறைவாக்கினர் எரேமியாவால் எழுதப்பட்டது என நம்பப்படுவதனால், எரேமியா எனும் நூலுக்கு அடுத்து அமைந்துள்ளது என நினைப்பதற்கு இடமுண்டு. "தானியேல்" இறைவாக்கினர் நூல்களின் வரிசையில் காணப்படினும் குறிப்பிட்ட யுகத்தில் வாழ்ந்த மக்களுக்கு விசேட முறையில் அறிகுறிகளுடனும் சின்னங்களுடனும் அடையாள மொழியில் வெளிபடுத்தப்பட்ட தரிசன நூலாகும்.

பழைய ஏற்பாட்டைச் சேர்ந்த நூல்களுள் நான்கு, வரலாற்று நூல்களாக உருவப்படத்தின் மூலம் காட்டப்பட்டுள்ளன. இவை இஸ்ரயேலரின் வரலாற்றைப் பற்றியே எழுதப்பட்டவையாகும். யூதர்களின் கருத்துக்களை மட்டும் முன்வைப்பது மட்டுமல்லாது வரலாற்றின் மூலம் இறைவன் செயல்பட்ட விதத்தையும் எடுத்துக் காட்டுவதே பழைய ஏற்பாட்டு நூலாசிரியர்களின் பொது நோக்கமாக இருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேதாகமம் எனும் நூலகம்

## பழைய ஏற்பாட்டு நூல்கள்

1. தொடக்கநூல்
2. விடுதலைப் பயணம்
3. லேவியர்
4. எண்ணிக்கை
5. இணைச்சட்டம்

→ பஞ்சாகமங்கள் - தோரா - மோசேயின் நீதிசட்டங்கள்

6. யோசுவா
7. நீதி தலைவர்கள்
8. ரூத்து
9. (i) சாமுவேல்
10. (ii) சாமுவேல்
11. (i) அரசர்கள்
12. (ii) அரசர்கள்

→ முந்திய இறைவாக்கினர்

13. (i) குறிப்பேடு
14. (ii) குறிப்பேடு
15. எஸ்றா
16. நெகேமியா

→ வரலாற்று நூல்கள்

17. எஸ்தர்
18. யோபு
19. திருப்பாடல்கள்
20. நீதிமொழிகள்
21. சபை உரையாளர்கள்
22. இனிமை மிகு பாடல்

→ இலக்கிய நூல்கள்

23. எசாயா
24. எரேமியா
25. புலம்பல்
26. எசேக்கியேல்
27. தானியேல்
28. ஓசேயா
29. யோவேல்
30. ஆமோஸ்
31. ஒபதியா
32. யோனா
33. மீக்கா
34. நாகூம்
35. அபக்கூக்கு
36. செப்பனியா
37. ஆகாய்
38. செக்கரியா
39. மலாக்கி

→ பிந்திய இறைவாக்கினர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதிய ஏற்பாட்டு நூல்கள்

1. மத்தேயு
2. மாற்கு
3. லூக்கா
4. யோவான்
5. இணைச்சட்டம்

→ நற்செய்தி நூல்கள்

5. திருத்தூதர் பணி

→ அப்போஸ்தலர் பணி (திருச்சபை வரலாறு)

6. உரோமர்
7. (i) கொரிந்தியர்
8. (ii) கொரிந்தியர்
9. கலாத்தியர்
10. எபேசியர்
11. பிலிப்பியர்
12. கொலோசயர்
13. (i) தெசலோனிக்கர்
14. (ii) தெசலோனிக்கர்
15. (i) திமொத்தேயு
16. (ii) திமொத்தேயு
17. தீத்து
18. பிலமோன்

→ பவுலின் திருமுகங்கள்

19. எபிரேயர்
20. யாக்கோபு
21. (i) பேதுரு
22. (ii) பேதுரு
23. (i) யோவான்
24. (ii) யோவான்
25. (iii) யோவான்
26. யூதா

→ வேறு கிறிஸ்தவத் தலைவர்களின் திருமுகங்கள்

27. திருவெளிப்பாடு

→ தரிசன இலக்கிய நூல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதிய ஏற்பாட்டில் மத்தேயு, மாற்கு, லூக்கா, யோவான் என்பவர்களால் எழுதப்பட்ட நான்கு நற்செய்தி நூல்கள் காணப் படுகின்றன. மனுமகன் இயேசுவின் பிறப்பு, போதனை, மரணம், உயிர்த்தெழுதல், விண்ணேற்பு போன்ற அம்சங்கள் நற்செய்தி நூல்களில் குறிப்பிடப்பட்டுள்ளன. கிறிஸ்துவின் வழி சென்றவர்க ளின் மத்தியில் தூய ஆவியானவரின் வல்லமை செயல்பட்ட விதத்தை எடுத்துக்காட்டுவதே திருத்தூதர் பணி நூலின் பிரதான நோக்கமாகும். பவுலால் எழுதப்பட்ட 13 திருமுகங்களிலும், ஏனைய தலைவர்களால் எழுதப்பட்ட 8 திருமுகங்களிலும் கிறிஸ்தவ வாழ்வைக்கட்டி எழுப்புவதற்கான அறிவுறுத்தல்கள் குறிப்பிடப் பட்டுள்ளன.

பழைய ஏற்பாட்டில் உள்ள தானியேல் போன்றே திருவெளிப் பாடும் கணிக்கப்படுகின்றது. அக்காலத்தில் துன்புறுத்தல்களின் மத்தியில் வாழ்ந்த கிறிஸ்தவர்களை தைரியப்படுத்தும் வண்ணம் யோவானால் இந்நூல் எழுதப்பட்டது. துன்புறுத்தலை அளித்த உரோம அரசானது "பபிலோன்" என வர்ணிக்கப்டுகின்றது. (திருவெளிப்பாடு 18:10 ஐப் பார்க்கவும்) குறிப்பிட்ட யுகம் தொடர் பான வெளிப்பாடுகளும், அடையாளங்களும் கிறிஸ்தவர்களால் விளங்கிக் கொள்ளும் வண்ணம் காணப்படுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பயிற்சி

1 உருவப்படத்தில், வகைப்படுத்தப்பட்டுள்ள நூல்களை அறி வுறுத்தல்களுக்கேற்ப நிறம் தீட்டுக.

## பழைய ஏற்பாடு

| | | |
|---|---|---|
| பஞ்ச புத்தகங்கள் | - | செம்மஞ்சள் |
| முந்திய பிந்திய இறைவாக்கினர் | - | மஞ்சள் |
| வரலாற்று நூல்கள் | - | நீலம் |
| இலக்கிய நூல்கள் | - | றோஸ் |
| தானியேல் நூல் | - | வெள்ளை |


## புதிய ஏற்பாடு

| | | |
|---|---|---|
| நற்செய்தி நூல்கள் | - | சிவப்பு |
| திருத்தூதர் பணி | - | செம்மஞ்சள் |
| பவுலின் திருமுகங்கள் | - | கருநீலம் |
| ஏனைய திருமுகங்கள் | - | இளநீலம் |
| திருவெளிப்பாடு | - | வெள்ளை |

2. விவிலிய நூல்களின் பெயர்களையும், வகைகளையும் கொடுக்கப்பட்டுள்ள மாதிரி உருவப்படத்தில் எழுதவும்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடம் 2.

# திருவிவிலியத்தை அறிந்துகொள்ளுதல் (ii)

திருவிவிலியத்தின் பிரதிகளை அச்சிட்டு வெளியிடும் வேதாகம சங்கத்தைப் பற்றி நீங்கள் கேள்விப்பட்டிருப்பீர்கள். திருவிவிலியத்தில் பழைய ஏற்பாடு, புதிய ஏற்பாடு என இரு பிரிவுகள் உள்ளன. சில சந்தர்ப்பங்களில் புதிய ஏற்பாடு தனி நூலாகவும் காணப்படுகின்றது. இதில் ஆண்டவர் இயேசுவைக் குறித்து எழுதப் பட்டுள்ளது. பழைய ஏற்பாட்டில் ஆண்டவர் இயேசு மானிடவருகைப் பற்றிய முன்னறிவித்தல் மட்டுமே காணப்படுகின்றது. ஆனால் இயேசுவின் செயல்களைப் பற்றிய சாட்சியைக் கொடுப்பது புதிய ஏற்பாட்டு நூலாகும்.

பழைய ஏற்பாட்டை திருவிவிலியத்தில் சேர்த்துக் கொள்வதற்கு கிறிஸ்தவர்கள் தீர்மானித்தமைக்கான காரணம் என்ன?

யூதர்களின் தூய நூல்களாம்
முதல் முப்பத்தொன்பதின்
புனிதத்தை கற்றறிந்தார் இயேசு
நாமும் தானதைக் கற்றிடுவோமே!

இயேசுவைப் போன்றே முதல் சீடர்களும் யூத இனத்தைச் சேர்ந்தவர்கள் ஆவர். அவர்கள் பழைய ஏற்பாட்டு நூல்களின் ஊடாகவே ஆன்மீகப் போசனையைப் பெற்றனர். தமது விருப்பத்திற் கேற்ப பழைய ஏற்பாட்டின் பகுதிகளைத் தமது கற்றலுக்கு தெரிவு செய்தனர். லூக்கா 4:25-27 இன்படி இயேசு பழைய ஏற்பாட்டின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரு கதைகளைக் கூறி சீடர்களின் அவதானத்தைப் பெற்றார். அவைகள் சாரிபாத் ஊரின் விதவையின் கதையும், சிரியா நாட்டு நாமானின் கதையும் ஆகும், யூதர்கள் இக் கதைகளை நன்கு அறிந்திருந்தமையாலேயே இயேசு இவைகளை எடுத்துக்காட்டுகளாகக் கூறினார். இயேசு தனது போதனையை மக்கள் இலகுவாக புரிந்து கொள்ளும் வண்ணம் தேவையான பின்னணியைப் பழைய ஏற்பாடு நூல்களிலிருந்தே பெற்றுக் கொண்டார். எம்மைப் போன்று யூதரல்லாத கிறிஸ்தவர்களுக்கும், பழைய ஏற்பாட்டைக் கற்றல் மிகப் பொருத்தமானதாகும். "பழைய" எனும் சொல் இடப்பட்டதன், கருத்து காலம் கடந்தது என்ற கருத்தில் அல்ல. பழைய ஏற்பாடானது ஆதியிலிருந்தே ஊற்றெடுத்து வந்த விடுதலைச் செயல்களுக்கு சாட்சி கூறும் நூலாக அமைகின்றது. அச் செயல்களின் தொடர்பு முறியாமல் முன்னோக்கி செல்வதற்கு இயேசு அவற்றை உறுதிப்படுத்தினார். திருச்சட்டத்தையோ இறைவாக்குகளையோ நான் அழிக்க வந்தேன் என நீங்கள் எண்ண வேண்டாம். அவற்றை அழிப்பதற்கல்ல, நிறைவேற்றுவதற்காக வந்தேன். (மத் 5:17)

பழைய புதிய ஏற்பாடுகளுக்கிடையில் பல தொடர்புகள் காணப்படுகின்றன. ஆண்டவர் இயேசுவில் வெளிப்பட்ட குணாதிசயங்கள் பழைய ஏற்பாட்டு உத்தமர்கள் பலரின் வாழ்க்கை குணாதிசயங்களின் முன்னடையாளங்களாக வெளிப்பட்டுள்ளன.

(உ-ம்)

1. யோசேப்பு தனது சகோதரர்களுக்கு மன்னிப்பு வழங்குதல்.

2. ரூத் தமது மாமியாருக்குப் பணிவிடை செய்ய தன் வாழ்வை அர்ப்பணித்தல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. எஸ்தர் தனது வாழ்வைப் பணயம் வைத்து தனது மக்களைக் காப்பாற்ற முன்வருதல்.

பழைய ஏற்பாட்டு இறைவாக்கினர்களால் உரைக்கப்பட்ட இறைவாக்குகள் பல இயேசுவைப் பற்றியன எனக் கிறிஸ்தவர்கள் ஏற்றுக்கொள்கின்றனர். "நீயோ, எப்ராத்தா எனப்படும் பெத்லகேமே! யூதாவின் குடும்பங்களுள் மிகச் சிறியதாய் இருக்கின்றாய். ஆயினும், இஸ்ரயேலை என் சார்பாக ஆளப்போகின்றவர் உன்னிடமிருந்தே தோன்றுவார்" என மீக்கா உரைத்த இறைவாக்கு இயேசுவின் பிறப்புடன் தொடர்புபட்டதாக அமைகின்றது. தாவீதின் வம்சத்தில் இரட்சகர் ஒருவர் தோன்றுவார் என இறைவாக்கினர்கள் இறைவாக்குரைத்தனர். இறைவனால் அபிஷேகம் செய்யப்பட்டவரே "மேசியா" (கிரேக்க மொழியில் கிறிஸ்துஸ்) என அழைக்கப்படுகின்றார். இயேசு கிறிஸ்துவின் சீடர்கள் இயேசுவை மேசியா என நம்பினார்கள்.

எப்படியாயினும் இரு மதங்களினதும் நற்செய்திகள் கிறிஸ்தவர்களின் புனித புத்தகமான திருவிவிலியத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளமை அதன் விசேட தன்மையாகக் கருதலாம். யூதமதத்தினருக்கு விசேடமாக அமைவது பழைய ஏற்பாடு ஆகும். அது யூதர்களின் திருமறையாகும். கிறிஸ்தவர்களின் திருமறையில் யூத, கிறிஸ்தவ நூல்கள் அனைத்தும் ஒரே செய்தியின் அங்கங்களாக ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளன.

திருவிவிலியத்தில் காணப்படும் நூல்கள் அனைத்தும் இயேசு கற்பித்தலுக்கு சமீபமாக அமைவதனாலே அவைகள் கிறிஸ்தவர்களாகிய எமக்கு முக்கியம் வாய்ந்ததாக அமைகின்றது. உயிருள்ளவராக எம்முடன் வாழும் ஆண்டவர் இயேசுவின் செயல்களை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புத்தகத்தில் அல்லது புத்தக கூட்டமைப்பில் விபரிக்க முடியாத ஒன்றாகும். கிறிஸ்தவ நெறிபற்றிய கிறிஸ்தவர்களின் அறிவானது திருமறையை அடித்தளமாகக் கொண்டு அமைந்துள்ளதுடன், அது காலத்துக்குக் காலம் வளர்ச்சி அடைந்து கொண்டும் வருகின்றது.

## செயற்பாடு

1. திருவிவிலியத்தில் பழைய ஏற்பாட்டை ஒரு பகுதியாக நீர் மதிப்பதற்கான காரணங்களைப் பற்றி கட்டுரை வரைக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடம் 3.

# வேதாகமமும் வரலாற்றுப் பின்னணியும்

தூய வேதாகமத்தின் பிரதியை கிறிஸ்தவர்கள் ஒவ்வொரு வரும் தனிப்பட்ட முறையில் பாவிக்கக் கிடைத்தமை எமக்கு கிடைத்த அதிஷ்டமாகும்.

பழைய ஏற்பாட்டில் குறிப்பிடப்பட்டுள்ள நிகழ்வுகள் 3000 ஆண்டு காலங்கள் நீண்ட வரலாற்று அமைப்புக்குள் உள்ளடக்கப் பட்டுள்ளன. எழுத்துக்கலை வளர்ச்சி அடைவதற்கு முன்னர் சமய இலக்கியங்களும், வரலாற்றுச் சம்பவங்களும் மக்களின் நினைவாற் றல் மூலமாகவே பாதுகாக்கப்பட்டு வந்தன. இது நம்பமுடியாத அளவு புதுமை வாய்ந்ததொன்றாகும். இஸ்ரயேல் ஆரம்ப காலத்தில் நடமாடும் மேய்ப்பர் கூட்டமாக அதாவது நாடோடிகளாக வாழ்ந்து வந்தனர். அவர்கள் இரவு காலங்களில் தீக்குவியல்களைச் சுற்றி இருக்கும் வேளைகளில் இவ்வாறான பழைய நிகழ்வுகளை நினை வுப்படுத்தியிருக்கலாம். ஆரம்பத்திலிருந்தே ஒரே கடவுள் கொள்கை அவர்களது விசுவாசத்தின் அடித்தளமாக அமைந்துள்ளமையால் தாவீதின் திருப் பாடல்கள் பாடப்பட்டு நிகழ்வுகள் இயல்பாகவே மக்கள் மனதில் பதிந்திருக்கலாம். சமய விழாக்களின் போது எஸ்தர், ரூத், யோபு போன்ற கதைகளை நடித்தல் காரணமாக அவைகள் மீள உயிர் பெற்றிருக்கக்கூடும். மோசேயின் நீதிச்சட்டங் கள் மக்களது வாழ்வில் சகல அம்சங்களிலும் செல்வாக்குள்ளதாக அமைந்திருந்தன. அவைகள் அனைத்தும் அவர்களால் மறக்க முடியாத ஒன்றாகும். அத்துடன் பழக்க வழக்கங்களும், நடைமுறை செயல்சார்ந்த அனுபவங்களும் நினைவில் நிறுத்தப்பட்டன. இதற் கேற்ப வாய்மொழி பாரம்பரியத்தை பெரிதளவில் ஏற்றுள்ளனர்.

ஏனைய மதங்களுக்குரிய புனித நூல்கள் நீண்டகாலமாக வாய்மொழி சம்பிரதாயத்தினூடாகவே நிலை நாட்டப்பட்டன என்பது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரகசியமானதொன்றல்ல. இலங்கை நாட்டின் ஆரம்பம் பற்றிக் குறிப்பிடும் முக்கிய நூலான மகாவம்சம், மக்களின் வாய்மொழி நாட்டுப் பாடல்கள், வரலாற்றுக் கதைகள் என்பனவற்றை அடிப்படையாகக் கொண்டு எழுதப்பட்ட தொன்றாகும்.

இஸ்ரயேல் மக்கள் நாடோடிக் கூட்டமாகக் கருதப்பட்டனர். யாத்திரைகளில் அதாவது பயணங்களில் ஈடுபடும் அவர்கள் பிற இன மக்களின் பாரம்பரிய கதைகள், பழக்க வழக்கங்கள் சட்ட திட்டங்கள் போன்றவற்றை அவர்கள் இயல்பாகவே அறிந்து கொண்டிருக்கலாம். (உ-ம்) (1) நோவாவும் வெள்ளப் பெருக்கும். (தொ. நூலின் முதற் பகுதியில் குறிப்பிடப்பட்டுள்ளது.) சுவையான கதைக்குச் சமனான விபரங்கள் சுமேரியா குறிப்பேட்டில் குறிப்பிடப்பட்டுள்ளன. (2) "கண்ணுக்குக் கண் பல்லுக்குப் பல் என்பன மோசேயின் நீதிச்சட்டமாக ஏற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. இருப்பினும் கி. மு. 10 நூற்றாண்டுகளுக்கு, அதவாது மோசேயின் காலத்துக்கு முன்னர் அமுராபி வாக்கியம் கண்டெடுக்கப்பட்டது. (3) படைப்பு பற்றிய கதைகள் அனைத்திலும் பாபிலோனிய பின்னணிகளை அறியக் கூடியதாக உள்ளது.

இஸ்ரயேலருடன் தொடர்பு கொண்ட இனங்களையும் அவை பற்றிய விபரங்களும் 'செல்' எனும் கடிதங்களில் குறிப்பிடப்பட்டுள்ளன. இஸ்ரயேலருக்கு விரோதமாகப் போராடிய இனத்தவர்களின் கதைகள் மூலம் கிடைத்த தகவல்களும் வேதாகமத்தில் விபரிக்கப்பட்டுள்ளன. இவ்வாறாக வேதாகம நூல்களில் குறிப்பிடப்பட்டுள்ள நிகழ்வுகள் உலக வரலாற்றுடன் தொடர்பு படுகின்றனவாக அமைகின்றன.

வேதாகம நூல்கள் அனைத்தும் பல வருட கால எல்லைக்குள் எழுதப்பட்டன. அவைகள் எழுதப்பட்ட காலங்களுக்கு ஏற்ப ஒழுங்கு செய்யப்படவில்லை. கி. மு. 13 ஆம் நூற்றாண்டு தொடக்கம் 9 ம் நூற்றாண்டு வரையிலான காலப்பகுதியிலேயே வாய்மொழி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்த பாரம்பரிய கதைகள், கவிதைகள் சட்டதிட்டங்கள் போன்ற வற்றை ஒன்றிணைக்கும் வாய்ப்பு உருவாகியது. முழுமையான எழுத்து வடிவம் கி. மு. 8ஆம் நூற்றாண்டிலேயே தோன்றியது. முதலில் ஆமோஸ் தீர்க்கனின் நூல் எழுத்து வடிவில் எழுதப் பட்டது. ஒசேயா, மீக்கா, எசாயா என்பவர்களது இறைவாக்குகளும் இந்த நூற்றாண்டிலேயே எழுதப்பட்டன. 7 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த யோசியா அரசனின் பக்கபலத்துடன் இணைச்சட்டம் (உபாகமம்) நூல் எழுதப்பட்டது. நாகூம், செப்பனியா எனும் இறைவாக்கு நூல்களும் அக்காலகட்டத்திலேயே தோன்றின. அபக்கூக்கு, நீதித்தலைவர்கள், சாமுவேல், அரசர்கள் என்பன 6வது நூற்றாண்டில் பதிவு செய்யப்பட்டன என்பதற்கான சான்றுகள் உள்ளன. ஆனாலும் எசேக்கியேல், எசாயா, ஆகாய், செக்கரியா எனும் நூல்கள் 586 இல் எருசலேம் வீழ்ச்சியின் பின்னர், யூதர்கள் பாபிலோனியா அடிமைத்தனத்திலிருக்கும் போதே எழுதப்பட்டன. கி. மு. 5ஆம் நூற்றாண்டில் மலாக்கி, யோபு என்பன எழுதப்பட்டன. சிறுகூட்டத்தினருடன் மீண்டும் எருசலேம் நோக்கித் திரும்பிச் சென்ற ஆசாரியர்களே அந்நூல்களைத் தயாரித்தனர். கி. மு. 3வது நூற்றாண்டில் குறிப்பேடும் (நாளாகமம்), சபை உரையாளர் (பிரசங்கி) என்ற நூல்களும் எழுத்துருவில் முன்வைக்கப்பட்டன. 2வது நூற்றாண்டில் தானியேல் நூல் பதிவு செய்யப்பட்டது. இலக்கிய நூல்களும் ஏனைய நூல்களும் கி.மு. 1வது நூற்றாண்டி லேயே தொகுத்தெழுதப்பட்டன.

கிறிஸ்தவர்களுக்கு விசேடமாக அமையும் புதிய ஏற்பாட்டின் நூல்கள் எல்லாம் நூறு ஆண்டு காலகட்டத்துக்குள் எழுதப்பட்டன. இறைமகன் இயேசுவின் மரணத்துக்குப் பின்னர் உயிர்த்தெழுதலின் வெற்றிகரமான செய்தியை கிறிஸ்தவர்கள் விரைவாகப் பரப்ப ஆரம்பித்தனர். 30 வருடங்கள் வரையிலான காலங்கள் வரை அவைகள் எழுதி வைக்கப்பட வேண்டும் என்ற அவசியம் அவர்க ளுள் காணப்படவில்லை. 65 இல் தூய பவுலின் திருமுகங்கள் மட்டுமே எழுதப்பட்டிருந்தன. கி. வ. 65-90 இடைப்பட்ட காலங்களில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான்கு நற்செய்தி நூல்களும், திருத்தூதர் பணி நூலும் உருவாக்கம் பெற்றன. யோவான் நற்செய்தி நூலும், திருவெளிப்பாடும் 1ஆம் நூற்றாண்டின் இறுதியிலேயே எழுதப்பட்டன. ஏனைய தலைவர்களின் திருமுகங்கள் எழுதப்பட்ட காலங்களை உறுதியாகக் கூறமுடியாது. 2ஆம் நூற்றாண்டின் முதல் 10 ஆண்டுகள் செல்லு முன்னரே புதிய ஏற்பாட்டு நூல்கள் அனைத்தும் நூலுருவில் பதிவு செய்யப்பட்டன.

பல்வேறு கால இடைவெளிகளில், பல்வேறு இடங்களில், பல்வேறு நபர்களால் வேதாகம நூல்கள் எழுதப்பட்டன என்பது வெளிப்படையானது. புதிய ஏற்பாட்டின் நூலாசிரியர்களை அறிந்து கொள்வது இலகுவல்ல. பழைய ஏற்பாட்டில் இறைவாக்கினர்களின் பெயர்களால் அவர்களது நூல்கள் அழைக்கப்படுகின்றன. ஆனாலும் புதுயுகத்தில் வேதாகம நூல்களை எழுதும் போது பலர் தொடர்பு கொண்டுள்ளனர் என அறியக்கூடியதாக உண்டு. இறைவாக்கினர்களின் நூல்கள் அவர்களது சீடர்களினாலேயே நிறைவு செய்யப்பட்டன. பஞ்ச புத்தகங்கள் பல நூற்றாண்டு காலங்கள் வாய்மொழிப் பாரம்பரியமாக நிலைத்திருந்தன. வாய்மொழிச் செய்திகளை யூத ஆசிரியர்கள் தொகுத்து எடுத்தார்கள். அவர்களது சமயக் கருத்துக்களும் உள்ளடங்கின. இது அவர்களால் திட்டமிட்டு செய்யப்பட்டதல்ல. வேதாகம எழுத்தாளர்கள் அனைவரும் இறைவிருப்பத்துக்கு ஏற்ப வெளிப்படையாவே செயற்பட்டனர். இறைவனைக் குறித்து உறுதியான விசுவாசம் காட்டினார்கள். இறைவன் மனிதர்களுடன் வைத்துள்ள அர்த்தமுள்ள, ஆழமான உறவைப்பற்றி சாட்சி பகர்ந்தனர். இதன்படி வேதாகமத்தை இறைவார்த்தைகள் என்று கூறுவது பொருத்தமானதாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செயற்பாடு

1. கி. மு. 9ஆம் நூற்றாண்டுக்குள் பழைய ஏற்பாட்டு நூல்களும், கி. வ 1இல் புதிய ஏற்பாட்டு நூல்களும் எழுதப்பட்டுள்ள விதத்தை உமது நினைவில் வைத்துக்கொள்ளும் வண்ணமாக கீழ்வரும் அட்டவணையைத் தயாரிக்க.

கி. மு. 9ஆம் நூற்றாண்டு வரை-

கி. மு. 8ஆம் நூற்றாண்டு வரை-

கி. மு. 7ஆம் நூற்றாண்டு வரை-

கி. மு. 6ஆம் நூற்றாண்டு வரை-

கி. மு. 5ஆம் நூற்றாண்டு வரை-

கி. மு. 4ஆம் நூற்றாண்டு வரை-

கி. மு. 3ஆம் நூற்றாண்டு வரை-

கி. மு. 2ஆம் நூற்றாண்டு வரை-

கி. மு. 1ஆம் நூற்றாண்டு வரை-





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


பாடம் 4.

# வேதாகமம் எமது கைகளில் கிடைத்த விதம் (i)

கடந்த பாடத்தில் குறிப்பிட்ட வண்ணமாக வேதாகமம் தொகுத்து எடுக்கப்பட ஏறக்குறைய 10 நூற்றாண்டுகள் சென்றன. எமது கைகளில் அவைகள் நீண்ட காலங்களுக்குப் பின்னரே கிடைத்தன.

கி. மு. 9ஆம் நூற்றாண்டிலேயே பழைய ஏற்பாடானது எழுத்து வடிவம் பெறுவதற்கான முயற்சிகள் ஆரம்பிக்கப்பட்டன. நூலாக்க முயற்சி கி. வ. 1 இலேயே முடிவடைந்தது. புதிய ஏற்பாடு எழுதத் தொடங்குவதற்கு மேலும் ஒரு நூற்றாண்டு சென்றது. இதன்படி வேதாகமத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள நிகழ்வுகள் யாவும் 10 நூற்றாண்டு கால எல்லைக்குள் எழுதப்பட்டனவாகும்.

ஆதிகாலத்தில் எழுதுவதற்காக உபயோகிக்கப்பட்ட உபகரணங்கள் யாவை? அவைகள் ஆட்டுத்தோலால் அமைக்கப்பட்ட ஒன்றுடனொன்று தொடர்புடைய நீண்ட பாய்போன்ற அமைப்பாகும். ஓரங்கள் இரண்டும் தடிகளால் இணைக்கப்படுவதன் மூலம் தயாரிக்கப்பட்டன. அவைகள் சுருள் புத்தகங்கள் என அழைக்கப்பட்டன.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பசை, கரி, நீர், என்பவற்றைக் கலந்து, கூரான நுனியுடைய தடிக்குச்சி அல்லது இறகுகளினால் எழுத்துக்கள் எழுதப்பட்டன. எபிரேய எழுத்துக்கள் வலமிருந்து, இடமாக எழுதப்பட்டன. மெய்யெழுத்து அட்சரங்கள் மட்டுமே உபயோகித்தல் எபிரேய பழக்கம் ஆகும். சுவரங்களைச் சேர்த்துக் கொள்ளுதல் வாசிப்பவர் களிடம் ஒப்படைக்கப்பட்ட பொறுப்பாகும். கீழ்காணப்படும் எபிரேய அட்சரமானது கடவுள் என்ற பதத்தைக் குறிப்பிடுகின்றது. **YHWH** என ஆங்கில எழுத்துக்களால் மொழி பெயர்க்கப்பட்டுள்ளன. சுவர்கள் ஒன்றிணைந்து "யாவே" என்ற பெயர் உருவாகின்றது. ஆனாலும் அந்தப் பெயரானது பூரணமாக எழுதப்படவில்லை. யூதர்களுக்கு இறைவன் குறித்து காணப்பட்ட பயமானது அதில் மறைந்து காணப்படுகின்றது.



அக்காலத்து மக்கள் பாவித்த அரமேய பதங்கள் பலவும் வேதாகமத்தில் அடங்கியுள்ளது. இயேசுவும் அரமேய மொழியைத் தமது போதனைக்காக உபயோகித்தார். இருப்பினும் புதிய ஏற்பாடானது எழுதப்படும் காலத்தில் உரோம அரசின் கீழ் அமைந்த அனைத்துப் பிரதேசங்களிலும் கிரேக்க மொழியே பாவிக்கப்பட்டது. இயேசுவின் காலத்தில் பலஸ்தீனாவிற்கு வெளியே வாழ்ந்த யூதர்கள் கிரேக்க மொழியைப் பேசினார்கள். "செப்து ஜிவந்து" எனப்பட்ட பழைய ஏற்பாட்டின் கிரேக்க மொழிபெயர்ப்பே அவர்களது வேதாகமமாகக் காணப்பட்டது. கிறிஸ்தவ பக்தர்களில் மிக ஊக்கமானவர்கள் இந்த யூதர்களே. இதனால் பவுலடியாரும் ஏனைய கிறிஸ்தவ தலைவர்களும் புதிய ஏற்பாட்டின் நூல்களை கிரேக்க மொழியில் எழுதியமை புதுமை அல்ல. "இயேசு" என்ற சொல் கிரேக்க மொழியில் பின்வருமாறு எழுதப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Ιησους

இவ்வாறாக முதலாம் நூற்றாண்டு இறுதியில் புதிய ஏற்பாட்டு ஆகமங்கள் கிரேக்க மொழியிலும், பழைய ஏற்பாட்டு ஆகமங்கள் எபிரேய கிரேக்க மொழிகளிலும் எழுதப்பட்டிருந்தன. இருப்பினும் எழுதப்பட்ட ஆவணங்கள் மக்களின் பாவனைக்குக் கிடைக்க வில்லை. அவைகள் சிறிய அளவிலேயே காணப்பட்டன. அவைகள் மிகவும் சிரமத்துடன் கைகளிலேயே எழுதப்பட்டன. வேதாகமத்தில் சேர்த்துக் கொள்ளப்பட வேண்டிய நூல்கள் அனைத்தும் வெவ் வேறான சுருள்களில் எழுதப்பட்டன. நீங்கள் ஏற்கனவே முதலாவது பாடத்தில் அறிந்து கொண்ட 66 ஆகமங்களை விட யூதர்களின் மத்தியில், வேறு பல புத்தகங்களும் உபயோகிக்கப்பட்டு வந்தன. இவைகள் வேதாகமத்துக்குள் உள்ளடக்கப்படமாட்டாது என தீர்மானிக்கப்பட்டது.

1ஆம் நூற்றாண்டின் இறுதியில் ஜேர்மநிஸா எனப்பட்ட இடத்தில் ஒன்றுகூடிய எபிரேய பண்டிதர்களின் கூட்டத்தினர் 39 நூல்களை மட்டுமே எபிரேய வேதாகமத்திற்குத் தெரிவுசெய்தனர். யூதர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்ட இந்த 39 ஆகமங்கள் மட்டுமே கிறிஸ்தவர்களின் வேதாகமத்தில் “பழைய ஏற்பாடு” என்ற பிரிவுக்குள் உள்ளடக்கப்படுவதற்கு உகந்தது என எல்லோராலும் ஏற்றுக் கொள்ளப்பட்டது. (ப. ஏ. குறித்து கிறிஸ்தவர்கள் கொண்ட மனப்பான்மை 2ஆம் பாடத்தில் விரிவாக உள்ளது.)

கி. வ. 397 இல் காதேஜ் மாநாடு மூலம் கிறிஸ்தவர்களுக்கு மேலும் விசேடமான ஆகமங்கள் தெரிவு செய்யப்பட்டன. அவற்றைத் தெரிவு செய்த விதத்தை அறிந்துகொள்ளுதல் மிகப் பயனுள்ள தாகும். இயேசுவுடன் நெருங்கி வாழ்ந்தவர்கள் எழுதிய நூல்களும், சீடர்களுடன் நெருங்கிப் பழகியவர்கள் எழுதிய நூல்களும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(உ-ம் லூக்கா நற்செய்தி நூல்) ஏற்றுக்கொள்ளப்பட்டன. இவைகள் மக்கள் மத்தியில் பிரசித்தம் அடைந்திருந்தன. புதிய ஏற்பாட்டு நூல்கள் 27 உடன் வேறு நூல்களைச் சேர்த்துகொள்வதற்கோ குறைப்பதற்கோ தேவையான காரணங்கள் இருக்கவில்லை. தூய ஆவியானவரின் வழிகாட்டுதலுடனேயே தீர்மானங்கள் எடுக்கப் பட்டன என்பது தெளிவாகும்.

மக்களின் தேவையைக் கருதியே எபிரேய மொழியில் எழுதப்பட்ட ஆகமங்கள் கிரேக்க மொழிக்கு மொழி பெயர்க்கப் பட்டன. (கி.மு. 2ஆம் நூற்றாண்டில் அலெக்சந்திரியாவில் ஒன்றுகூடிய 70 யூத மூப்பர்கள் செயலில் ஈடுபட்ட படியால் செப்துஜிவந்த் எனும் பெயர் உருவாகியது) மக்கள் அனைவரும் வாசித்துப் பயன்பெற வேண்டும் என்ற நோக்கிலேயே ஏனைய மொழிகளிலும் வேதாகமத்தை மொழிபெயர்க்க வேண்டிய நிலை உருவாகியது. சீரிய மொழிபெயர்ப்பானது 1ஆம் நூற்றாண்டிலேயே உருவாகியது எனக் கூறப்படுகின்றது. சிரியா நாட்டு அந்தியோகியா ஆதி கிறிஸ்தவர்களின் முக்கிய நகரமாக அமைந்ததே இதற்குக் காரணமாகும். 4ஆம் நூற்றாண்டில் ஆர்மெனியா, எத்தியோப்பியா, அராபி மொழிகளிலும் படிப்படியாக மொழிபெயர்ப்பு நிறைவேற்றப் பட்டது.

அக்காலத்தில் உரோம அரசின் மொழியாக "இலத்தீன்" மொழி அமைந்தது. பல மொழிபெயர்ப்புகள் தோன்றினாலும் அவற் றில் பல குறைபாடுகள் இருந்தன. கி. வ. 405 இல் "வல்கேட்" எனும் இலத்தின் மொழிபெயர்ப்பானது, அம்மொழியைப் பேசுபவர் களுக்கு மிகப் பெறுமதி வாய்ந்த கொடையாக அமைந்தது. அதில் ஈடுபட்டவர் துறவற குருவான தூய ஜெரோம் என்பவராவார். அவர் ஏறக்குறைய பன்னிரண்டு வருடங்கள் தம்மை அர்ப்பணித் தமை மிகப் புதுமையாகும். பழைய ஏற்பாட்டை விருப்புடன் மொழிபெயர்த்த வஸ் என்பவர் பலஸ்தீனாவில் அதிக காலத்தைச் செலவிட்டார். அங்கு அவர் எபிரேய மொழிகளைக் கற்று அம் மொழியில் எழுதப்பட்ட யூத ஆகமங்களை ஆராய்ந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"வல்கேட்" என்பதன் அர்த்தம் பொது என்பதாகும். மக்களுக்குப் பொருத்தமான "லத்தீன்" மொழியில் வேதாகமத்தை மக்களுக்கு வழங்க வேண்டும் என்பதே புனித ஜெரோம் அவர்களின் நோக்கமாக இருந்தது. வல்கேற் மொழிபெயர்ப்பானது கத்தோலிக்க சபையின் அனுமதியைப் பெற்றிருந்தது. பொதுமக்களின் பாவனைக்கு வேதாகமம் கிடைக்கும் வண்ணமாக பல வழிமுறை கள் வளர்ந்து வந்தன.

செயற்பாடு

சுருக்கமான விடை தருக.

1. வேதாகமம் எழுத்துவடிவம் பெறுவதற்கு எடுத்த காலத்தைக் குறிப்பிடுக.
2. ஆதிகாலத்தில் வேதாகம நூல் பிரதிகள் தயாரிப்பதற்கு உபயோகிக்கப்பட்ட பொருட்கள் யாவை?
3. எபிரேய அட்சரங்கள் எழுதும் முறையில் விசேடம் என்ன?
4. பழைய ஏற்பாட்டின் முதலாவது கிரேக்க மொழிபெயர்ப்பின் பெயரைக் குறிப்பிடுக.
5. புதிய ஏற்பாட்டுக்குப் பொருத்தமான ஆகமங்கள் முதன்முத லாக எழுதப்பட்ட மொழி என்ன?
6. ஜேர்மனியா என்ற இடத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்ட ப.ஏ. நூல்கள் எத்தனை?
7. புதிய ஏற்பாட்டில் அடங்கிய புத்தகங்களின் எண்ணிக்கை எத்தனை?
8. ஏனைய மொழிகளில் வேதாகம நூல்கள் மொழி பெயர்ப்பதற் கான காரணங்கள் யாவை?
9. "வல்கேற்" எனும் பெயரால் அழைக்கப்படுவது என்ன?
10. "வல்கேற்" மொழிபெயர்ப்பின் ஆக்கியோன் யார்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடம் 5.

# வேதாகமம் எமது கைகளில் கிடைத்த விதம் (ii)

மக்களுக்கு வேதாகமத்தை விளக்குவது யூத தலைவர்களின் விசேட செயலாக அமையவில்லை. பொதுமக்களோ அதனை அறிந்து கொள்வதில் புதுமையான ஆவலுடையவர்களாக இருந்தனர்.

கி. வ. 680 இங்கிலாந்தின் விடிபி எனும் நகரில் வாழ்ந்த சீடிமோத் எனும் இடையன் ஒருவகை துறவுமடத்தில் பணி புரிந்து வந்தான். துறவுமடத்தில் நடைபெறும் வழிபாட்டு ஆராதனைகளில் வேதாகமம் லத்தீன் மொழியில் வாசிக்கப்பட்டது. ஆனாலும் கல்வி கற்காத மக்களுக்காக வேதாகமம் அக்காலத்தில் வாழ்ந்த ஏன்ஜலோ ஜெக்சன் என்பவரால் விளக்கப்படுத்துவது பழக்கமாக இருந்து வந்தது. சீடிமோத் எனும் இடையன் அதனைத் தேனிலும் இனிமையாகக் கருதினான். அவன் தனது ஓய்வு நேரங்களில் தான் கேட்ட வேதாகம வாக்கியங்களை நாட்டுப்பாடலாக முன் வைப்பதில் ஈடுபட்டான். கிராமிய மக்களின் இதயங்களைக் கவரக் கூடிய இவ்வகையான பாடல்களினூடாக அவர்களது மொழியில் வேதாகமத்தைக் கேட்கக் கூடியதாக இருந்தது.

இதன் விளைவாக 10ஆம் 11ஆம் நூற்றாண்டுகளில் திருப் பாடல் நூலின் கீதங்களும் ஏனைய சில நற்செய்திப் பாகங்களும் அக்காலத்தில் பாவிப்பதற்கு ஏற்றவண்ணமாக ஆங்கிலத்தில் மொழிபெயர்ப்பு செய்யப்பட்டன.

இதுவரை வேதாகமத்தைப் பிரதி செய்வதற்காக உபயோ கிக்கப்பட்ட எழுத்து உபகரணமாக பபிரஸ் மிக பிரசித்தம் பெற்று இருந்தது. "பேபர்" எனப்படும் ஆங்கிலச் சொல்லானது "பபிரஸ்" என்ற சொல்லிலிருந்து வந்தது. கிரேக்க மொழியில் "புத்தகம்" என்னும் கருத்துடைய "பிப்ளொஸ்" எனும் சொல்லிலிருந்தே "பைபிள்" என்ற சொல் வருகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எகிப்தில் அக்காலத்தில் வளர்க்கப்பட்ட சணல் இன்று நாம் பாவிக்கும் கடதாசியை ஒத்ததாகும். அவைகளைத் தட்டுக ளாக அடுக்கக்கூடியதாக இருந்தமையால் சுருள் புத்தகத்துக்குப் பதிலாக "கோடெக்ஸ்" என்ற பெயரானது புதிய புத்தகத் தொகுப் பின் பெயராகின. ஐரோப்பியா முழுவதும் துறவுமடங்களில் புனித நூல்களைப் பிரதி பண்ணுதல் முறையாக மட்டுமல்ல, மிக அலங் காரமான முறையில் நடைபெற்றது. பலவர்ண சித்திரங்கள் அலங் கார எழுத்துக்கள் மூலமாக மக்களின் மனதைத் கவரும் வண்ண மாக இந்தப் பிரதி தயாரிக்கப்பட்டது.

இவ்வாறாக வேதாகமப் பிரதிகள் உருவாகுவதற்கு பல ஆண்டு காலங்கள் சென்றன. அவைகள் விலை மதிக்க முடியாதன வாக இருந்தன. ஆனாலும் கி. வ 13ஆம் நூற்றாண்டு வரை அவைகள் துறவுமடங்களிலும், ஆலயங்களிலும் மட்டுமே வைக்கப் பட்டிருந்தன.

14ஆம் நூற்றாண்டில் இங்கிலாந்தின் அறிவுத்திறமை வாய்ந்த போதகர் ஜோன்வைக்லிப் பொதுமக்களின் மத்தியில் வேதாகமம் வழங்கப்பட வேண்டும் என்ற ஆழ்ந்த நம்பிக்கையுடன் செயற்பட்டார். இதுவரையில் இங்கிலாந்தின் ஏன்ஜலோ - ஜெக்சன் தொகுப்புக்கு வேறு மொழியிலும் கலப்பு மொழியானது கலந்து ஆங்கில மொழி படிப்படியாக வலுவிழந்து காணப்பட்டது. வைக்லிப், லத்தீன் வேதாகமத்துக்கான ஆங்கில மொழிபெயர்ப்புப் பணி ஆரம்பமாகி யது. அத்துடன் மிகத் தாழ்மையான போதகர்கள் வறிய மக்கள் மத்தியில் அனுப்பப்பட்டனர். எழுத்துக்களை வாசித்து விளங்கிக் கொள்ள முடியாத கிராமிய மக்களுக்கு நற்செய்தியை விளக்கப் படுத்தலும் அவர்களால் நடைபெற்றது.

ஐரோப்பிய நாடு முழுவதும் மிக வல்லமையுடன் திகழ்ந்த றோமன் கத்தோலிக்க திருஅவைக்கு இது பெரிதான எச்சரிக்கை யாக அமைந்திருந்தது. நற்செய்தியின் பேரில் அளவுகோலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைத்துக் கொண்டு வாழ்ந்த சபைத் தலைவர்களின் செயற்பாடு களை அளப்பதற்கு மக்களுக்கு வாய்ப்புக் கிடைத்தமையே இதற் கான காரணம் ஆகும். எந்த வகையிலும் இதற்கு இடமளிப்ப தில்லை என சபைத் தலைவர்கள் தீர்மானம் எடுத்தனர். வைக்லிப் மக்களது கடுமையான எதிர்ப்புக்கு இலக்காகினார். 1384 இல் வைக்லிப் இறையடி எய்தினார். ஆனாலும் அவர் ஆரம்பித்த இலக்கு புகழ் அடைந்தது. 1407 இல் நடைபெற்ற "ஒகஸ்ட்" மாநாட்டில் வேதாகம மொழிபெயர்ப்பானது முழுமையாகத் தடைசெய்யப்பட்டது. வைக்லிப் மரணமடைந்து 44 ஆண்டுகளுக்குப் பின்னர் அவரது கல்லறை அகற்றப்பட்டு எரிக்கப்பட்டது. வேதாகமம் மக்கள் கரங்களில் சென்றடையும் முயற்சி அத்துடன் நிறுத்தப்பட்டு விட்டது என நினைக்கின்றீர்களா?

1450 இல் ஜேர்மன் நாட்டைச் சேர்ந்த ஜோன் கடன்பேக் அச்சு இயந்திரத்தைத் தயாரித்தமையால் தைரியமடைந்த வில்லியம் டிண்டேல் எனும் ஆங்கில போதகர் வேதாகமத்தை ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கவும் அச்சிடப்பட்ட பிரதிகளை மக்களுக்குப் பகிர்ந்தளிக்கவும் தீர்மானித்தார். இதனால் அவர் இங்கிலாந்து பேராயர் அவர்களின் பண உதவியை நாடிநின்றார். எதிர்பார்த்த உதவி கிடைக்காத காரணத்தால் 1524 இல் டிண்டேல் ஜேர்மனி ஹெம்பர்க் நகரத்துக்குச் சென்றார். ஜேர்மனியில் சமய சீர்திருத்த மறுமலர்ச்சியை ஏற்படுத்திய மார்டின் லூதர் என்பவரால் வேதாகமம் ஜேர்மனியில் மொழி பெயர்க்கப்பட்டது. இது டிண்டேலுக்கு தைரியத்தை ஊட்டக்கூடியதாக அமைந்தது. லூதரும், டிண்டேலும் எபிரேய மொழியிலான பழைய ஏற்பாட்டையும், கிரேக்க மொழியி லான புதிய ஏற்பாட்டையும் மொழிபெயர்ப்புக்காக உபயோகித்தனர். வேதாகமம் இம் மொழிகளிலேயே எழுதப்பட்டிருந்தன என ஆரம்பத்திலேயே குறிப்பிடப்பட்டுள்ளது.

1526 இல் டிண்டேலின் ஆங்கில புதிய ஏற்பாடானது ஜேர்மன் மொழியில் அச்சிடப்பட்டது. அதில் பல பிரதிகளை இரகசியமாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இங்கிலாந்துக்கு அனுப்பி வைத்தார்கள். ஆங்கில மக்கள் மத்தியில் இந்தப் புதிய ஏற்பாடானது மிகப் பிரப்பல்யமாகியிருக்க வேண்டும் என்பது ஏற்றுக்கொள்ளக் கூடியதொன்றாகும். ஆனாலும் சபைத் தலைவர்களின் கரங்களில் கிடைத்த பிரதிகள் எரிக்கப்பட்டன.

இதனைக் கேள்விப்பட்ட டிண்டேல் அதைரியம் அடைந்து விடவில்லை. நெதர்லாந்து என்ற நகரத்துக்குச் சென்று பழைய ஏற்பாட்டை ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கும் பணியை ஆரம்பித் தார். இரவு பகலாக இதற்காக அயராது உழைத்த டிண்டேல் சனி, ஞாயிறு தினங்களில் வறியவர்கள் மத்தியில் பணி செய்ததா கவும் குறிப்பிடப்பட்டுள்ளது. ஏன்? எதற்காக? இறைவணக்கத்தில் பங்குபற்றுவதற்கும், என்டவாப் நகரத்து நோயாளர்களுக்கும், வறுமையில் வாடுபவர்களுக்கும் உதவி செய்வதற்காகவும் இவ்விரு தினங்களை ஒதுக்கினார். இவர் செயல்முறை மூலம் நற்செய்தி உண்மைகளை எடுத்துக் காட்டினார். பஞ்ச ஆகமங்களை மொழி பெயர்த்து மிகுதியை அச்சிடுவதற்காகக் கைப்பிரதிகளைத் தயாரித்த வேளையில் அவர் எதிர்பாரா வண்ணமாக எதிரிகளின் கைகளில் அகப்பட்டார். இங்கிலாந்து நாட்டு 8ஆம் ஹென்றியினால் அனுப்பப்பட்ட அரசு இராஜதந்திரியால் 1533 இல் கைது செய்யப் பட்டு மரணத்தைத் தழுவிக்கொண்டார். “இறைவனே, இங்கிலாந்து அரசனின் கண்களைத் திறந்தருளும்” என்பதே அவரது இறுதி விண்ணப்பமாக அமைந்தது.

டிண்டேலின் பிரார்த்தனை அநேக ஆண்டுகளின் பின்னர் நிறைவேறியது. அதே 8வது ஹென்றி அரசனின் தலைமையில் இங்கிலாந்து சமய சீர்த்திருத்தம் உருவாகியது. இங்கிலாந்து சபைமீது ரோமன் கத்தோலிக்கச் சபையானது அதிகாரம் செலுத் தியதன் காரணமாக லத்தின் வேதாகமம் மறுக்கப்பட்டது. டிண்டே லின் நண்பன் மைல்ஸ் கவர்டேல் டிண்டேலின் மொழிபெயர்ப்பை அடித்தளமாகக் கொண்டு அதனைத் தயாரித்து அரசனின் அனுமதி யும் கிடைக்கப் பெற்றார். அதுமட்டுமல்ல 1536 இல் வேதாகமத்தின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆங்கிலப் பிரதி எல்லா ஆலயங்களிலும் வைக்கப்பட வேண்டும் என 8வது ஹென்றி அரசன் உத்தரவிட்டார். கீழே காணப்படும் அட்டவணை மூலம் மீள்பரிசீலனை காலத்தில் காணப்படும் வேதாகம பிரதி வெளிவந்த விதம் விளக்கமாகக் காட்டப்படுகின்றது.

| | |
|---|---|
| ஜெரோம் எழுதிய "வல்கேட்" மொழி பெயர்ப்பை உபபோகித்து வெளியாகிய வேதாகமம். | கிரேக்க எபிரேய பிரதிகளைப் பின்பற்றி வெளியாகிய வேதாகமமாகும். |
| 7வது நூற்றாண்டு சீடிமோனின் என்ஜலோ ஜெக்சன் பாடல். | 1525- டிண்டேல் அச்சிட்ட புதிய ஏற்பாடும். கைப்பிரதியாக எழுதப்பட்ட பஞ்ச ஆகமங்களும். |
| 8வது நூற்றாண்டு - தூய பீட் அவர்களின் யோவான் நற்செய்தி நூல். | 1536 - கவர்டேல் வேதாகமம். |
| 14வது நூற்றாண்டு - வைக்லிப் அவரது சகாக்களும் மொழிபெயர்த்த ஆகமங்கள். | 16வது நூற்றாண்டில் - மத்தேயுவின் வேதாகமம். |
| | பெரிய வேதாகமம் |
| | பேராயர் வேதாகமம் |
| | ஜெனீவா வேதாகமம் |
| 1582 இங்கிலாந்தின் ரோமன் கத்தோலிக்கர்களால் அச்சிடப்பட்ட ரூவே வேதாகமம். | 1611 இங்கிலாந்தின் ஆறாவது ஜெமிஸ் அரசனின் அனுசரணையுடன் 47 பேர் இணைந்து பரிசீலித்துத் தயாரித்து ஏற்றுக் கொள்ளப்பட்ட வேதாகமம். 20வது நூற்றாண்டு வரை அது மக்கள் மத்தியில் பிரபல்யம் அடைந்திருந்தது. |

செயற்பாடு

1. தூய வேதாகமத்தை ஆங்கில மொழியில் மொழிபெயர்த்த விலியம் டிண்டேல் அவர்களின் பணியை ஆராய்க.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடம் 6.

# வேதாகமம் எமது கைகளில் கிடைத்த விதம் (iii)

16ஆம் நூற்றாண்டில் ஐரோப்பிய மொழிகள் பலவற்றில் வேதாகமம் மொழிபெயர்க்கப்பட்டிருந்தது. தமது மொழிகளில் வேதாகமத்தை வாசிக்கும் வாய்ப்புப் பெற்றவர்கள் மகிழ்வு அடைந்தனர்.

ஆனாலும் இங்கிலாந்திற்கு அருகில் வாழ்ந்த வேல்ஸ் மக்களுக்குத் தேவையான பிரதிகள் கிடைக்காமை பிரச்சினைக் குரியதாக அமைந்தது. 16வது நூற்றாண்டிலும் இக்குறைபாடு காணப்பட்டது. இந்த வேளையில் தோமஸ் சார்ள்ஸ் எனும் போதகர் மிகவும் முக்கியம் வாய்ந்த பணியை ஆரம்பித்தார். வேல்ஸ் நாட்டு கிராமிய மக்கள் மத்தியில் பெரும்பான்மையோர் எழுத்துக்






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களை எழுதவும், வாசிக்கவும் முடியாதவர்களாக இருந்தனர். அவர்களுக்குக் கற்பிப்பதற்காக சார்ள்ஸ் போதகர் அவர்கள் நடமாடும் பாடசாலைத் திட்டத்தை ஆரம்பித்தார். இந்தப் பணியில் பெரிதான உதவியைப் பெற்ற வேல்ஸ் மக்கள் வேதாகமத்தை வாசிப்பதற்கு ஆர்வம் காட்டினார்கள்.

இக்காலத்தில் வாழ்ந்த மேரி ஜோன்ஸ் எனும் சிறுமியின் கதையை நீங்கள் கேட்டிருப்பீர்கள். மேரி ஜோன்ஸ் வேல்ஸ் தேசத்தைச் சேர்ந்த ஓர் பெண். அவளுடைய தகப்பன் துணி வியாபாரி. நடமாடும் பாடசாலைப் பணியின் அனுசரணையுடன் அவளது நோக்கத்தை நிறைவேற்றுவதற்காக எழுத்துக்களை கற்றுக் கொண்டாள். வேதாகமம நூல்களை வாசித்தறிந்து கொள்வ தற்காக தனது சிநேகிதியின் வீடு செல்வதற்கான அனுமதியைப் பெற்றிருந்தாள். ஆனாலும் வேதாகமம் ஒன்றைப் பெற்றுக்கொள்ள வேண்டும் என்ற மன உறுதியுடன் காணப்பட்டாள். ஆறு ஆண்டுக ளாக சிறு பணிகள் செய்து பணம் சேகரித்தாள். ஒருநாள் தைரியத் துடனும், விடாமுயற்சியுடனும் சாள்ஸ் என்பவரின் வீட்டை நோக்கி 24 மைல் தூரம் மலைப் பிரதேசத்துக்கூடாக நடந்து சென்றாள். அவள் எதிர்பார்த்துச் சென்ற வேதாகம பிரதி ஒன்றாகிலும் அவரிடம் மிகுதியாக இருக்கவில்லை. அவள் தாங்கமுடியாத துயரத்தால் கண்ணீர் வடித்தாள். சாள்ஸ் போதகர் அதனைக் கண்டு கலக்க மடைந்தார். வேறொருவருக்குக் கொடுப்பதற்காக வைத்திருந்த பிரதியை அவளுக்குக் கொடுத்தார். (மேரி ஜோன்ஸ் படத்தைப் பார்க்கவும்) அவள் அளவில்லா மகிழ்ச்சி அடைந்தாள்.


இந் நிகழ்வானது தோமஸ் சார்ள்ஸ் அவர்களின் மனதில் ஆழமாகப் பதிந்தது. இந்நிகழ்வைக் குறித்து பல நண்பர்களுடன் கலந்துரையாடினார். வேல்ஸ் மக்கள் மட்டுமன்று, உலக மக்கள் அனைவரும் தத்தமது மொழிகளில் வேதாகமத்தை வாசிப்பதற்கு வாய்ப்பு பெற்றுக்கொடுக்க வேண்டும் என்பது அவரது முடிவாக அமைந்தது. மேற்படி தீர்மானங்கள் நிறைவேறும் வண்ணமாக 1804 ம் ஆண்டில் லண்டன் நகரில் வேதாகம சங்கம் நிறுவப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்று 2000 க்கு அதிக மொழிகளில் வேதாகம மொழிபெயர்ப்புகள் காணப்படுகின்றன. இதுவரையில் அதிக மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்ட முதலாவது நூல் வேதாகமம் என்று கூறலாம். அதிக அளவில் விற்பனையாகுவதும் வேதாகமமே ஆகும். வேதாகம சங்கத்தின் பணியானது மிகவும் மதிக்கத்தக்கதொன்றாகும்.

உரு 8 இல் யோவான் 3:16 பல மொழி அட்சரங்களில் எழுதப்பட்டுள்ளதைக் காணலாம்.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1812 இல் வேதாகம சங்கத்தின் கிளை இலங்கையில் ஆரம்பிக்கப்பட்டமை இலங்கைக் கிறிஸ்தவர்களுக்குக் கிடைத்த மகா பெரிய கொடையாகும்.

சிங்களம், தமிழ் வேதாகம மொழிபெயர்ப்புகள் உருவாகிய முறையைப் பின்வரும் அட்டவணை காட்டுகின்றது.

| **தமிழ் மொழி வேதாகமம்** | **சிங்கள மொழி வேதாகமம்** |
|---|---|
| ஒல்லாந்தர் காலத்தில் | ஒல்லாந்தர் காலத்தில் |
| 1759 - புதிய ஏற்பாடு | 1780 - வேதாகமம் அச்சிடப்படல் |
| பிரித்தானியர் காலத்தில் | பிரித்தானியர் காலம் |
| 1927 - புதிய ஏற்பாடு மீளாய்வு | 1850 - திருத்திய சிங்கள மொழிபெயர்ப்பு |
| 1936 - வேதாகமம் | 1938 - ஒன்றிணைந்த சிங்கள மொழிபெயர்ப்பு |
| 1954 - மீளாய்வு | 1983 - பொது புதிய மொழிபெயர்ப்பு |
| 1996 பொது புதிய மொழி பெயர்ப்பு (திருவிவிலியம்) | |

## 1995 – 1996 பொது மொழிபெயர்ப்பு

1983 இல் உருவாக்கப்பட்ட சிங்கள பொது புதிய மொழி பெயர்ப்பின் விசேட தன்மையைக் கூறுவது பொருத்தமானதாகும். ரோமன் கத்தோலிக்க சபை உட்பட இலங்கையின் அனைத்துத் திருச்சபைகளும் இதற்கு அனுமதி அளித்தமை விசேட சிறப்பாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிறிஸ்தவ இயக்கங்கள் அனைத்தும் இணைந்து ஏற்றுக்கொண்ட இவ்வாறான மொழிபெயர்ப்புப் பிரதிகள் மேலும் நான்கு நாடுகளில் மட்டுமே உள்ளன. இலங்கையை சேர்ந்த கிறிஸ்தவர்கள் இதற்காக பெருமைப்படுவது புதினமல்ல. இந்திய வேதாகம சங்கத்தால் "திருவிவிலியம்" எனும் பெயரில் பொது மொழிபெயர்ப்பு தமிழில் வெளியிடப்பட்டது வரவேற்கத்தக்கது ஆகும். அத்துடன் பொது பெயர்ப்பைக் கிறிஸ்தவ சபைகள் அனைத்தும் பாவிப்பதால் சபைகளின் ஒருமைப்பாட்டு இயக்கத்துக்கும் இது மிகப் பெரிய தூண்டுதலாகவும் அமைகின்றது.

தற்போது ஒன்றிணைந்த இயக்கங்களின் கிறிஸ்தவ பிரதிநிதிகள் புதிய மொழிபெயர்ப்பை மேலும் மேம்படுத்த முயற்சித்து வருகின்றனர். முதன் முதலாக எழுதப்பட்ட மொழிகளான கிரேக்க, எபிரேய மொழியை அறிந்தவர்கள் அக்குழுவில் கடமை புரிந்து வருகின்றனர். அவர்கள் அம்மொழியில் எழுதப்பட்ட வேதாகம பிரதிகளை மீளாய்வு செய்வதுடன் சிங்கள மொழியில் திருத்தமான மொழிபெயர்ப்பை ஆக்குவதற்கு வேதாகம சங்கம் துணை செய்கின்றது. இந்த செயலை உரியமுறையில் நிறைவேற்றுவதற்கு கிறிஸ்தவர்களாகிய எமது விண்ணப்பம் எதிர்பார்க்கப்படுகின்றது.

செயற்பாடு

1. 19வது நூற்றாண்டில் வேதாகமத்தை உலக மொழிகளில் மொழிபெயர்ப்பதற்கு உதவிய காரணங்களை விளக்கி கட்டுரை வரைக.

2. மேரி ஜோன்ஸ் இன் கதையை சுயசரிதையாக உமது வசன நடையில் எழுதவும்.
(வேதாகம சங்கத்தில் காணப்படும் மேரி ஜோன்ஸ் எனும் கதைப் புத்தகத்தை வாசிக்கவும்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாடம் 7.

# வேதாகமம் எமது கைகளில் கிடைத்த விதம் (iv)

வேதாகமம் மக்களுக்குக் கிடைக்க வேண்டும் என்ற ஆவலினால் உலக மொழிகள் அனைத்திலும் மொழிபெயர்க்க வேண்டியமை மிகவும் முக்கியம் வாய்ந்த செயலாகும். ஒரே மொழியில் பல மொழிபெயர்ப்புகள் தயாரிப்பதற்கான நோக்கம் என்ன?

உலக மொழிகளுள் சில தற்போது மக்களால் உபயோகிக்கப்பட்டு வருவதில்லை. (உ-ம் இலத்தின், பாளி போன்றன.) ஆனாலும் ஆங்கிலம், சிங்களம், தமிழ் என்பன பாவனை மொழிகளாக விவரிக்கலாம். இம் மொழிகள் தற்போதும் வளர்ந்து வருகின்றன. இன்றைய மக்களின் மொழி நடைகளைக் கருத்தில் கொண்டே புதிய பொது மொழிபெயர்ப்பு விரும்பத்தக்கது ஆகும்.

1611 இல் இங்கிலாந்தில் தோன்றிய ஜேம்ஸ் அரசனின் பதிப்பானது மிகவும் பிரபல்யமாகி இருந்தது. பழைய ஆங்கில நடையானது, தற்போது விளங்கிக் கொள்வது பாவனையாளர்களுக்குக் கடினமாக இருந்தது. அதனால் புதிய பெயர்ப்புகள் பல தோன்றின. 1780 இல் ஒல்லாந்தர்களால் அச்சிடப்பட்ட சிங்கள வேதாகமத்தின் பிரதி அரசு செயலகத்தில் மிகப் பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளது. 20 ஆம் நூற்றாண்டில் வாழும் எம்மால் அவற்றை விளங்கிக்கொள்ள முடியாது. 17 ஆம் நூற்றாண்டில் இந்நாட்டுக்கு வருகை தந்த ஒல்லாந்தர் சிங்கள மொழியைக் கற்றிருக்கலாம். ஆனாலும் இவர்களுக்கு வேதாகமத்தை மொழி பெயர்க்கும் திறமை இல்லையென்றாலும் 1780 இல் அச்சிடப்பட்ட வேதாகமம் அக்காலத்தில் வாழ்ந்த மக்களால் வாசிக்க இயலாமல் இருந்திருக்கலாம். 1850 இல் திருத்திய சிங்களப் பதிப்பானது 1938 இல் புதிய பதிப்பு தோன்றுவதற்கு உதவியாக அமைந்திருந்தது. கடந்த 10 ஆண்டு காலங்கள் எமது கரங்களில் கிடைக்கப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்ற பொதுப் பதிப்பானது 1938 பதிப்பினை மீளாய்வு செய்யப் பட்டதும், மொழிநடைவளர்ச்சி பெற்றதுமாக அமைந்துள்ளமை தெளிவாகின்றது.

புதிய பதிப்புகள் பல தோன்றுவதற்கு மேலும் பல காரணங் கள் உள்ளன. புதிய ஏற்பாடானது முதலாம் நூற்றாண்டிலேயே தொகுக்கப்பட்டுள்ளது. கி. வ. 1ஆம் நூற்றாண்டானது துன்புறும் காலமாக அமைந்தது. புதிய ஏற்பாட்டுப் பிரதிகள் வீணாகியமையே இவற்றின் விளைவு ஆகும். 19ஆம் நூற்றாண்டு வரை கிரேக்க மொழியில் எழுதப்பட்ட பழைய ஏற்பாட்டின் பிரதியானது கிறிஸ்தவ சபைகளின் பாவனையில் இருக்கவில்லை. ஆயினும் 1844 இல் வேதாகம ஆய்வில் ஈடுபட்ட பிரசித்தி பெற்ற பயணியான சோவியத் ரஷ்யாவைச் சேர்ந்த ஆய்வாளர் ஒருவருக்கு எதிர்பாராவண்ணமாக இந்த "புதையல்" கிடைத்தது. அவரது பெயர் கொன்ஸ்தான்தைன் டிசன்டோப் ஆகும்.

ஒருநாள் அவர் குளிரான மலையடிவாரத்தில் அமைந்த துறவுமடத்தில் தங்கி இருந்தார். எரிப்பதற்கு சேர்த்து வைக்கப் பட்டிருந்த கடதாசிக் குவியல் அவ்விடத்திற்குக் கொண்டு வரப் பட்டது. அவற்றை அவதானித்த கொன்ஸ்தான்தைனின் கரங்களில் புராதன பழைய ஏற்பாட்டுப் பிரதிகள் கிடைத்தன.

அத்தருணத்தில் அவற்றை மேலும் பரிசீலனை செய்வதற்கு அனுமதி கிடைக்காமையால் அவர் மீண்டும் நாடு திரும்பினார். 1859 இல் ரஷ்ய ஆளுநரின் மடலுடன் அத்துறவு மடத்துக்கு வருகை தந்தார். அப்போது 3 ஆம் நூற்றாண்டு கிரேக்க புதிய ஏற்பாட்டுப் பிரதி அவர் கரத்தில் கிடைத்தது. அதனை ரஷ்யாவுக்கு எடுத்துச் சென்று பீட்டர்ஸ் பேகில் பாதுகாப்பாக வைத்தார். "கொடெ சைனெடிக்கஸ்" **(CODE SINATICUS)** என அறிமுகப்படுத்தப்பட்ட இந்தக் கைப்பிரதியை 1936 பிரித்தானிய நூதனசாலை விலை கொடுத்து வாங்கியது. இவ்வாறாக இந்தப் பழைய பிரதியானது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேதாகம நிபுணர்களால் ஆழ்ந்த ஆராய்ச்சிக்கு உபயோகிக்கப் பட்டது. அதனை அடிப்படையாகக் கொண்டு 1881 இல் ஆங்கிலத் தில் மறுபரிசீலனை செய்யப்பட்ட புதிய ஏற்பாட்டு பிரதி தயாரிக்கப் பட்டது. ஆனாலும் அந்த கைப்பிரதியின் அடிப்படையில் ஆங்கில பதிப்புகள் இந்நூற்றாண்டில் உருவாகியமை புதுமைக்குரியது அல்ல.

இதுவரையில் பாவனை செய்த பழைய ஏற்பாட்டு பிரதிக்கும் பெரும்பான்மையினரின் எதிர்ப்பு உருவாகியது. 1947 இல் மொகமட் அத் திப் எனும் பெயருள்ள அராபிய இனத்தைச் சேர்ந்த இளை ஞன் சாக்கடலின் அருகில் அமைந்துள்ள கும்ரான் பிரதேசத்தில் ஆட்டு மந்தைகளை மேய்த்துக் கொண்டிருந்தான். ஒரு ஆடு காணாமல் போய்விட்டது. அருகில் இருந்த கற்குகையில் அது விழுந்திருக்கக் கூடும் என எண்ணிய மொகமட் அதனுள் கல்லை எறிந்து விட்டு அவதானத்துடன் காத்திருந்தான். புதினமான ஒலி அவனுக்குக் கேட்டது. களிமண் பாத்திரம் உடைந்த ஓசை என எண்ணினான். வேறு சிலருடன் இணைந்து கற்குகையைப் பரி சீலனை செய்தான். அந்த பழைய ஏற்பாட்டுப் பிரதிகளுடன் கி. மு. 20-70 இல் எழுதப்பட்ட வேறு பல புத்தகங்கள் பலவும் அவனுக்குக் கிடைத்தது.

இக்கால கட்டத்துக்குள் கும்ரானில் காணப்பட்ட துறவுமட நூலகத்துக்குச் சொந்தமான நூல்கள் என வேதநிபுணர்கள் அறிந்து கொண்டனர். (உரு 9) துன்புறுத்தல் காலத்தில் அந்த கற்குகையில் களிமண் பாத்திரங்களில் அவை மறைத்து வைக்கப்பட்டிருக்க லாம் எனக் கருதுவதற்கான வாய்ப்பு உண்டு. 20 ஆம் நூற்றாண்டு வரை அவைகள் மேற்கூறிய முறையில் பாதுகாக்கப்பட்டு வந்த மை மாபெரும் பாக்கிய செயலாகும். இந்நூல்கள் வேதாகம நிபுணர்களால் ஆழ்ந்த பரிசீலனைக்குப் பாத்திரமாக்கப்பட்டன.

மேற்படி ஆய்வினூடாக வெளிப்பட்ட பழைய ஏற்பாட்டுப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரதிகளுக்குரிய கருத்துக்களுக்கும் கி. வ. 10ஆம் நூற்றாண்டு பிரதிகளுக்கும் பெரிதான வித்தியாசங்கள் காணப்படவில்லை. காலத்துக்குக் காலம் கைப்பிரதிகள் எழுதியவர்களின் பக்தியுள்ள முயற்சிக்கு இது நல்லதொரு சான்றாகும். தொல்பொருள் கண்டு பிடித்தல் உட்பட இவ்வாறான கண்டுபிடித்தல்களும் கிறிஸ்தவ சபைக்கு உரித்தானது என எதிர்பார்க்கலாம். ஆனால் வெளிப் படும் கருத்துக்களை உபயோகித்து மேலும் சிறந்த புதிய பதிப்பு களை உருவாக்கலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இப்பெரிதான முயற்சியின் அடித்தளமாக லூக்கா 4,18 இலும் 7:22 இலும் கூறப்படும் இயேசுவின் நோக்கம் நிறைவேறுவதை அறிந்துகொள்ளலாம். அதாவது சாதாரண மக்கள் விளங்கக்கூடிய வண்ணமாக நற்செய்தியை முன்வைத்தல் ஆகும்.

செயற்பாடு

வேதாகமத்தில் புதிய மொழிபெயர்ப்பு உருவாகுவது நன்மை யானதா? தீமையானதா? என்ற தலைப்பில் வகுப்பில் விவாதம் ஒன்றை நடத்தவும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடம் 8.

# ஆதிப் பிதாக்கள்

உலகில் வாழும் அனைத்து இனங்களையும் நோக்கும் போது தமது இனத்தை அல்லது நாட்டைக் கட்டி எழுப்புவதற்கு அரும்பாடுபட்டு உழைத்தவர்களும் வாழ்வை அர்ப்பணித்தவர்களும் பலர் காணப்பட்டனர். இன்றும் கூட அப்படிப்பட்டவர்கள் வீரர்களாக அல்லது உயர்ந்தவர்களாக மதிக்கப்படுகின்றனர். யூதர்கள் தமது இனத்தைச் சேர்ந்த பிதாக்களைப் பழைய ஏற்பாட்டுப் பகுதி விப ரங்களினூடாக அறியக்கூடியதாக உண்டு. ஆபிரகாம், ஈசாக்கு யாக்கோபு, யோசேப்பு போன்றவர்கள் பிதாக்களாகக் கருதப்படு கின்றனர்.

ஆதிப் பிதாக்கள் எனக் கூறும்போது இறையழைப்பின் மூல மாக இறைவனுடன் தொடர்பு கொண்டு வாழ்வை நடத்தியவர் ஆவர். இரு சாரார்களுக்கு இடையிலான உறுதி அல்லது ஏற்பாடு "உடன்படிக்கை" எனப்படும், வேதாகமத்தில் காணப்படும் உடன் படிக்கையானது இறைவனுக்கும், மனிதனுக்கும் இடையில் ஏற்படுத் தப்பட்ட "உறுதி" அல்லது "ஏற்பாடு" என கருதப்படும்.

வேதாகமத்தை நோக்கும் போது ஆதியிலிருந்தே இறைவன் மக்களுடன் உடன்படிக்கை ஏற்படுத்தியதற்கான சான்றுகள் காணப்படுகின்றன. இவற்றில் ஆதாம் ஏவாளின் கதை முதல் நிகழ்வாகக் கருதப்படுகின்றது. இறைவன் மனிதனுக்கு உலகத்தை ஒப்படைத்தார். மனிதன் அதனைப் பாதுகாத்து வர வேண்டும் என்பதே இறைவனின் எதிர்பார்ப்பாகும். "ஆனாலும் ஆதி மனிதர்கள் அந்த அழைப்புக்குத் தகுதியான உத்தரவாதம் காட்டவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடன்படிக்கையானது இறைவனின் சார்பில் மட்டுமே செயல்பட்டது. மனிதன் தனக்குக் கிடைத்த சுதந்திரத்தையும், வல்லமையையும் உபயோகித்தமையால் பாவத்தில் வீழ்ந்த முறை இக்கதை மூலமாக வெளிப்படுகின்றது.

அதன் பின்னர் நோவாவின் கதை வேதாகமத்தில் காணப்படு கின்றது. இறைவன் பாவத்தில் விழ்ந்த மனிதனுக்கு எச்சரிக்கை செய்தார். ஆனாலும் நோவாவைத் தவிர வேறொருவரும் கவனம் கொள்ளவில்லை. இச்சந்தர்ப்பத்தில் இறைவன் வானவில் அடையா ளத்தினூடாக உடன்படிக்கையை உறுதிப்படுத்தினார். உலகப் படைப்புக்கள் அனைத்தையும் பாதுகாக்கும் உடன்படிக்கையாகக் கருதப்படுகின்றது. இனிமேல் வெள்ளப் பெருக்கினூடாக உல கத்தை அழிக்க மாட்டேன் என்பதே அந்த உடன்படிக்கை ஆகும்.


இவற்றுக்குப் பின்னர் இறைவன் தனிநபர்களை அழைத்த தைக் காணக்கூடியதாக உள்ளது. அந்நபர்களுடன் உடன் படிக்கையை மீண்டும் மீண்டும் புதுப்பித்தார். இவ்வாறாக இறை வனின் அழைப்பைப் பெற்ற முதல் நபர் ஆபிரகாம் ஆவார். இறைவனது அழைப்பைப் பெற்று அதனை விருப்புடன் ஏற்று, தகுதியான உத்தரவாதத்தைக் கூறியமை ஆபிரகாமின் விசேடத்தன்மையாக அமைகின்றது. இவ்வாறாக அழைப்பைப் பெற்று வாழ்ந்த தலைவர்களே ஆதிப் பிதாக்கள் என யூதர்கள் கருதினர்.

ஆதிப் பிதாக்கள் நாடோடி இடையர்கள் ஆவர். அவர்கள் குடும்பத் தலைவராகவும், கோத்திரத் தலைவர்களாகவும் கருதப் பட்டு வந்தனர். இறைவனின் எதிர்பார்ப்புக்கு ஏற்ப குறிப்பிட்ட சரியான இலக்கை நோக்கிப் பயணம் செய்ததுடன் மட்டுமல்லாது,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமது கோத்திர வளர்ச்சிக்காகவும் செயற்பட்டனர். அவர்களுக்கு நிரந்தரமான நாடோ அல்லது நிலையான இடமோ இருக்கவில்லை. ஓரிடத்திலிருந்து இன்னுமொரு இடத்துக்குக் கொண்டுசெல்லக் கூடிய கூடாரங்களிலேயே வாழ்ந்து வந்தனர்.



ஆதிகால கூடாரம்

ஆதிப் பிதாக்கள் இறையழைப்புக்குக் கீழ்ப்படிந்து பல இடையூறுகளுக்கும், ஆபத்துக்களுக்கும் பயமின்றி முகம் கொடுத்தனர். இறைவனுடன் ஏற்படுத்தப்பட்டிருந்த உடன்படிக்கையை நிலைப்படுத்திக் கொள்வதற்கு முயற்சித்தனர்.

ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு, யோசேப்பு போன்ற ஆதிப் பிதாக்கள் இறைவனின் விசேட அழைப்பைப் பெற்றிருந்தாலும் கூட மானிடர் என்ற முறையில் ஒரு சில பலவீனங்களும் காணப் பட்டன. அவ்வாறான வேளைகளில் இறைவன் நடுநிலை வகித்து அவர்களது விசுவாசத்தை உறுதிப்படுத்தினார். ஆதிப் பிதாக்கள் இறைவன் ஏற்படுத்திய உடன்படிக்கை மூலமாக ஆரம்பித்த அவர் களது பயணத்தை அதன் பின்னரும் அழைக்கப்பட்டவர் முன்னின்று பயணத்தை மேற்கொண்டனர் என்பதற்கு பழைய ஏற்பாட்டு சான்றுகள் உள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆதிப் பிதாக்கள் காலமானது கி. மு. 1600 வரையிலான காலத்தில் ஆரம்பமானதாகக் கருதப்படுகின்றது. அவர்கள் இஸ்ரயேல் மக்களை இறைமக்களாகக் கட்டி எழுப்புவதற்கு முன்னோடிகளாகத் திகழ்ந்தனர்.

செயற்பாடு

1. வேதாகமத்தில் குறிப்பிட்டுள்ள உடன்படிக்கைகளில் இரு சாரார் எனக் கருதப்படுபவர்கள் யாவர்?

   இவ்விருசாராரும் ஆரம்ப உடன்படிக்கையில் எவ்வாறு தொடர்புபட்டுள்ளனர்?

2. "ஆதிப் பிதாக்கள்" என்ற தலைப்பில் சிறு குறிப்பு எழுதுக.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடம் 9.

# ஆபிரகாமும் ஈசாக்கும்

தொ. நூ. 11: 7-32, 12:1-9, 18:1-3, 21:1-14, 24:26

ஆபிரகாமின் அழைப்பானது ஆதிப் பிதாக்கள் காலத்தின் தொடக்கம் எனக் கருதப்படுகின்றது. ஆபிரகாமின் குடும்பம் ஆரம்பத்தில் ஊர் எனும் இடத்தில் வாழ்ந்து வந்தது. இந்நகரமானது அக்காலத்து வியாபார மத்திய நிலையமாகத் திகழ்ந்தது. அங்கு வாழ்ந்த மக்கள் பல தெய்வங்களை வழிபட்டு வந்தனர். அவர்கள் கல்தேயர் என அழைக்கப்பட்டனர்.




ஆபிரகாமின் பயணப் படம்

ஆரான் நகரமானது பல தேவ கொள்கைகளைக் கொண்ட இடமாகும். ஒரே இறைவனைப் பற்றிய ஆழமான விசுவாசத்துடன் வாழ்ந்த ஆபிரகாமுக்கு இக்கொள்கையானது இடையூறாக அமைந்தது. அத்துடன் அவனது மனைவி சாராளுக்கு குழந்தை இல்லாமல் இருந்தமையால் அவளை இழிவாகக் கருதுவதற்கும் இடமுண்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டாயிற்று. இவ்வாறான சிக்கல்களை எதிர்நோக்க வேண்டி இருந்த வேளையில் இறைவனின் அழைப்பானது ஆபிரகாமுக்குக் கிடைத்தது. "உன் நாட்டிலிருந்தும், உன் இனத்தவரிடமிருந்தும், உன் தந்தை வீட்டிலிருந்தும் புறப்பட்டு நான் உனக்குக் காண் பிக்கும் நாட்டிற்குச் செல், உன்னை நான் பெரிய இனமாக்குவேன். உனக்கு ஆசி வழங்குவேன். உன் பெயரை நான் சிறப்புறச் செய்வேன்." (தொ. நூ. 12:1) என ஆண்டவர் கூறினார். இதுவே அவனுக்கு ஏற்பட்ட அழைப்பாகும். அழைப்பை ஏற்ற ஆபிரகாம் விசுவாசத்துடன் புதுப் பாதையை நோக்கி அடியெடுத்து வைத்தமை வரலாற்றின் முக்கிய நிகழ்வாகும்.

ஆபிரகாமில் மகத்தான இனம் உருவாகுவதற்கும், வாக்கு பண்ணப்பட்ட நாட்டை அளிப்பதற்கும், இறைவன் அளித்த வாக்குறுதியை ஆபிரகாம் வயோதிப வயதிலும் விசுவாசத்துடன் ஏற்றுக்கொண்டான். அதனால் அவனுக்கு "விசுவாசிகளின் தகப்பன்" என்ற நாமம் வழங்கப்பட்டது. இறைவனில் பூரண விசுவாசம் வைத்துச் செயல்படுவதற்கு இந்நிகழ்வானது எமக்கு முன்மாதிரி யானதாக அமைகின்றது.

ஒரு நாள் ஆபிரகாம் கூடாரத்தில் ஓய்வாக இருந்தவேளை மூன்று பேர் அவனைக் காண வந்தனர். நாடோடியான ஆபிரகாம் அவர்களை அன்புடன் வரவேற்று உபசரித்தான். தொ. நூ. 18:3 இல் உள்ளபடி "என் தலைவரே" என அழைத்த முறையிலிருந்து அவர்கள் சாதாரண மனிதர்கள் அல்ல என்பது புலப்படுகின்றது. அவர்களினூடாக இறைவன் தன்னுடன் உரையாடுகின்றார் என உணர்ந்தான். விருந்துபசார வேளையில் சாராளுக்குக் குழந்தை கிடைக்கும் என அறிவித்தனர். ஆனால் வயோதிப வயதான சாராள் நகைத்தாள்.

இறைவன் ஆபிரகாமுக்கு அளித்த உறுதியை நிறைவேற்றும் வண்ணமாக அவனூடாக புதிய பரம்பரையை உருவாக்குவதற்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு மகனைக் கொடுத்தார். வயோதிபர்களான ஆபிரகாமுக்கும், சாராளுக்கும் பிறந்த புத்திரனுக்கு ஈசாக்கு எனப் பெயரிட்டனர். அதன் அர்த்தம் "சிரிப்பு" என்பதாகும். இவ் உடன்படிக்கையின் வெளி அடையாளமாக ஈசாக்கை எட்டாவது நாளில் விருத்தசேதனம் செய்தனர்.

ஆபிரகாம் வாழ்ந்த கானான் நாட்டு மக்கள் பல தெய்வங்களை வழிபட்டு வந்தனர். பலிகள் செலுத்தினர். சில சந்தரப்பங்களில் இறைவனை மகிழ்விப்பதற்காக உயிரபலி செய்தனர். ஆபிரகாமும் இறை எதிர்பார்ப்புக்கு ஏற்ப ஈசாக்கைப் பலியிடத் தீர்மானித்தான்.

இவ்வேளையில் ஈசாக்கு பல வினாக்கள் எழுப்புகின்றான். ஆனாலும் தகப்பனின் கட்டளைக்கு ஏற்ப இறைவனின் சித்தம் நிறைவேறுவதற்குக் கீழ்ப்படிந்தான். இவ்வாறு தன்னைப் பலியாக ஒப்புவிப்பதற்கு விருப்பம் காட்டிய ஈசாக்குவுக்கும், இயேசுவுக்கும் இடையில் இருந்த தொடர்பானது கிறிஸ்தவர்களாகிய எமக்கும் முக்கியமாக அமைகின்றது.

சிறுவனின் மனதில் கிளர்ச்சியை ஏற்படுத்தாமல் மலையுச்சிக்குச் சென்று ஆபிரகாம் அங்கு ஈசாக்கை பலியிடுவதற்காக பலிபீடத்தைக் கட்டினார். அவ்விடத்தில் கேட்ட ஓசை "பையன்மேல் கை வைக்காதே. அவனுக்கு எதுவும் செய்யாதே, உன் ஒரே மகனையும் எனக்குப் பலியிட நீ தயங்கவில்லை என்பதிலிருந்து நீ கடவுளுக்கு அஞ்சுபவன் என்று இப்போது நான் அறிந்து கொண்டேன்." (தொ. நூ. 22:12) என்பது இறைவன் ஆபிரகாமுக்கு அளித்த வார்த்தையாகும். இறைவன் பலியை எதிர்பார்க்கின்றவர் அல்ல என்பது இதனூடாகப் புலப்படுகின்றது. அவர் எம்மிடம் விசுவாசத்துடன் கூடிய நல்வாழ்வையே எதிர்பார்க்கின்றார் என்பதை இக்கதை எமக்கு எடுத்துக் காட்டுகின்றது. அன்று ஆபிரகாமைப் போன்றே இன்று கிறிஸ்தவர்களாகிய எம்மிடமும் இறைவன் அரபணிப்பான நல்வாழ்வையே எதிர்பார்க்கின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஈசாக்கு

ஆபிரகாம் மிகவும் வயதுள்ளவனானான். சாராளும் மரித்தாள். ஆனாலும் அன்பான மகன் ஈசாக்குக்கு ஏற்ற துணையைத் தேடி விவாகம் செய்து வைக்க வேண்டும் என ஆபிரகாம் எண்ணி னான். அவன் குடியிருந்த கானான் தேசத்தில் மக்கள் பாகால் தெய்வங்களை வணங்கி வந்தனர். இறைவனுக்கு விருப்பமான விசுவாசமுள்ள மக்களை ஈசாக்கினூடாகக் கட்டியெழுப்ப வேண்டும் என்பது இறைவனது எண்ணமாக இருந்தமையால், ஈசாக்கிற்குப் பொருத்தமான துணையைத் தேடுவதற்கு அவனது பணியாளனை தனது சொந்த நாட்டுக்கு அனுப்பினான்.

பொருத்தமான துணை கிடைக்க வேண்டும் என அவன் இறைவனிடம் வேண்டினான். இறைவனிடம் அடையாளத்தைக் கேட்டான். நீரூற்றருகில் தண்ணீர் பருகும்படி உன் குடத்தைச் சாய்த்துக் கொடு என்று கேட்கும்போது, "குடியுங்கள் மேலும் உங்கள் ஒட்டகங்களுக்குக் குடிக்கத் தண்ணீர் இறைத்து ஊற்று வேன்" என்று எந்த இளம் பெண் மறுமொழி சொல்வாளோ அவளே தெரிந்து கொள்ளப்பட்டவள் என்ற பதில் கிடைத்தது. அவன் நீரூற்றண்டை நிற்கும்போது ரெபேக்கா எனும் பெயருடைய இளம் பெண் தோள்மீது குடத்தை வைத்துக் கொண்டு வந்தாள். அவள் ஆபிரகாமின் சகோதரர் நாகோருக்கும் அவர் மனைவி மில்காளுக் கும் பிறந்த பெத்துவேலின் மகள். (தொ. நூ. 24:15-16) அவள் அழகான தோற்றமுடையவள். ஆபிரகாமின் பணியாளன் அவளைக் கண்டு அவளிடம் தண்ணீர் கேட்டான். அவள் அவர்களுக்கு மட்டுமல்ல ஒட்டகங்களுக்கும் நீர் இறைத்துக் கொடுத்தாள். தனது விண்ணப்பத்துக்குப் பதிலாகக் கிடைத்த பெண் இவளோ என எண்ணினான். ஆபிரகாமிடம் காணப்பட்ட குணங்கள் அவளிடமும் காணப்படுவதைப் பணியாளன் அறிந்து கொண்டான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ரெபெக்கா வீடு சென்று நடந்த நிகழ்வுகளைக் கூறினாள். இவைகளைக் கேட்ட சகோதரன் லாபான் ஆபிரகாமின் பணியா ளனை வீட்டுக்கு அழைத்து வந்தான். அனைத்து விடயங்களையும் உரையாடினான். ரெபெக்காவும் தனது விருப்பத்தைத் தெரிவித்தாள். அவள் தனது பராமரிப்புத் தாதியுடனும் பணியாளர்களுடனும் கானான் நாடு செல்லப் புறப்பட்டாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆபிரகாம் இறைவனின் கட்டளைக்குக் கீழ்ப்படிந்து ஆரானிலிருந்து அறியாத நாட்டை நோக்கிப் பயணம் செய்தது போன்று, ரெபெக்காவும் விசுவாசத்துடன் அறியாத நாட்டை நோக்கிப் பயணமானாள். ஈசாக்கு அவளைக் கண்டவுடன் அன்பு கொண்டான். அவளை விவாகம் செய்தான்.

ஈசாக்கும், ரெபெக்காவும் பல இடையூறுகளை எதிர்நோக்கினர். ஆபிரகாம் அந்நாட்டில் குடியமர அனுமதி பெற்றிருந்தாலும், ஈசாக்குக்கு எதிர்ப்புகள் பல உருவாகின.

ஈசாக்குவின் இடையர்களால் தோண்டப்பட்ட கிணறுகளைப் பெலிஸ்தியர் மூடினர். நாடோடி இடையர்கள் போராட்டத்தில் ஈடுபடவில்லை. வேறு இடத்தில் கிணறுகளைத் தோன்றுமாறு ஈசாக்கு பணித்தான். அவைகளையும் பெலிஸ்தியர் மூடினர். வெவ்வேறு இடங்களில் கிணறுகளை வெட்டி அத்தேசத்தில் தமக்கும் உரிமை உண்டு எனக் காட்டினர்.

பெலிஸ்தியரின் எதிர்ப்பினால் ஈசாக்கு கலங்கினான். ஆனாலும் இறைவன் அவனைத் தைரியப்படுத்தி ஆபிரகாமுடன் ஏற்படுத்திய உடன்படிக்கையை ஈசாக்குடன் மீண்டும் உறுதிப்படுத்தினார். "உன் தந்தை ஆபிரகாமின் கடவுள் நானே. அஞ்சாதே ஏனெனில் நான் உன்னோடு இருக்கிறேன். உனக்கு ஆசி வழங்கி, என் ஊழியன் ஆபிரகாமின் பொருட்டு உனது வழிமரபைப் பெருகச் செய்வேன்." (தொ. நூ. 26:23) என்றார்.

பல ஆண்டு காலங்களுக்குப் பின்னர் பெலிஸ்தியர் ஈசாக்குடன் சமாதான உடன்படிக்கை ஏற்படுத்த முயற்சி எடுத்தனர். இவைகள் இறைவழி நடத்தலுக்கு ஏற்ப இடம் பெற்றது என எம்மால் அறியக் கூடியதாக உண்டு. சமாதானத்தை தேடிச் சென்று சமாதானம் பெற்ற ஈசாக்கை சமாதானத்தின் மகன் எனக் கூறலாம் அல்லவா? அஹிம்சைவாதியான ஈசாக்கு நீதியான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முறையில் செயல்பட்டமை மிகவும் மதிக்கத்தக்கதாகும். இயேசு கிறிஸ்துவின் வாழ்க்கை இலட்சணங்களில் சில ஈசாக்கின் சமாதான முன்னடையாளங்களாகக் காணப்பட்டன என்பதை நாம் அறிந்து கொள்ளக் கூடியதாக உள்ளது.

செயற்பாடு

1. ஆபிரகாம் "விசுவாசிகளின் தகப்பன்" என அழைக்கப்படுவது ஏன்?

2. ஈசாக்குக்குப் பொருத்தமான மணப்பெண்ணைத் தெரிவு செய்யும் போது ஆபிரகாம் கவனத்தில் கொண்டவைகள் யாவை?

3. பெலிஸ்தியர் ஏன் தமது எதிர்ப்பை ஈசாக்குக்குக் காட்டினார்கள்? அவற்றுக்கு ஈசாக்கின் பதில் என்ன? அவற்றினால் நாம் கற்றுக்கொள்ளும் பாடம் என்ன?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாடம் 10.

# யாக்கோபு அல்லது இஸ்ரயேல்

தொ. நூ. 25:19 - 34, 27; 28: 32:38

ஈசாக்கு, ரெபேக்கா ஆகிய இருவருக்கும் இரட்டைக் குழந்தைகள் பிறந்தன. ஏசா, யாக்கோபு என்பன அவர்களது பெயர்களாகும். இளையவனுக்கு யாக்கோபு என்று பெயரிட்டதன் காரணம் தெரியுமா? சகோதரன் ஏசாவின் குதிகால்களைக் கையால் பற்றிக் கொண்டு வந்தமையால் "யாக்கோபு" என்று பெயரிடப்பட்டது. அவன் தனது சகோதரன் அதாவது மூத்த சகோதரனின் வரப்பிரசாதங்களை சுவீகரித்துக் கொள்வதன் முன்னடையாளமாகக் கருதலாம். ஏசா, யாக்கோபு இரட்டைக் குழந்தைகளாக இருந்தாலும் அவர்கள் தோற்றத்திலும், குணாதிசயங்களிலும், செயல்களிலும் வேறுபட்டவர்களாக வாழ்ந்து வந்தனர்.

ஏசாவின் தோல் முடியினால் நிரம்பி இருந்தது. அவன் வேட்டையில் வல்லவனாய் திறந்தவெளி மனிதனாய் வாழ்ந்து வந்தான். ஆனால் யாக்கோபு பண்புடையவனாய் கூடாரத்தில் உறைபவனாய் வாழ்ந்து வந்தான். அத்துடன் தாயின் விசேட அன்பைப் பெற்றிருந்தான். ஈசாக்கு ஏசாவின் மேல் அன்பு கொண்டிருந்தார். ரெகேப்கோவோ யாக்கோபின் மீது அன்பு கொண்டிருந்தாள்.

ஒருநாள் யாக்கோபு சுவையான கூழ் சமைத்துக் கொண்டிருந்தான். ஏசா வேட்டையாடி களைத்து வீடு திரும்புகின்றான்.

ஏசா : நான் களைப்பாய் இருக்கின்றேன். இந்த செந்நிறச் சுவையான கூழில் எனக்குக் கொஞ்சம் கொடு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாக்கோபு : உனது தலைமகனுரிமையை இப்போதே எனக்கு விற்றுவிடு.

ஏசா : நானோ சாகப்போகிறேன். தலைமகனுரிமையால் எனக்கு என்ன பயன்?

யாக்கோபு : உன்னுடைய தலைமகனுரிமையை இப்போது எனக்கு ஆணையிட்டுக் கொடு.

ஏசா : சரி! சரி!

யாக்கோபு : அப்படியானால் இதோ அப்பமும் சுவையான பயிற்றங்கூழும் உண்டு. எடுத்துக்கொள்.

ஏசா தலைமகனுரிமையைக் குறைவாகக் கருதினான். யூத குடும்பங்களில் மூத்த மகனுக்கே குடும்பத்தின் பிரதானியாகவும், உரிமைகளின் பெரும்பாகத்தை உரித்தாக்கிக் கொள்ளும் சுதந்திரமும் இருந்தது. ஆனால் யாக்கோபு சுவையான கூழைக் கொடுத்து கபடமாக ஏசாவின் தலைமகனுக்குரியவற்றைப் பெற்றுக் கொண்டான்.

இன்னுமொரு சந்தர்ப்பத்தில் யாக்கோபு தனது தகப்பனின் இறுதி ஆசையையும் கபடமான முறையில் பெற்றுக்கொண்டான். ஈசாக்கு முதிர் வயதான போது, மரணத்துக்கு முன்னர் ஏசாவுக்கு ஆசி வழங்க விரும்பினான். இதனை அறிந்த ரெபேக்கா ஆசியை யாக்கோபுக்குப் பெற்றுக்கொடுக்கும் முயற்சியில் ஈடுபட்டாள்.

ஈசாக்கு : என் மகனே!

ஏசா : இதோ வந்து விட்டேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈசாக்கு : மகனே! ஏசா! வேட்டையாடி நான் விரும்பும் முறையில் எனக்கு வேட்டைக் கறி கொண்டு வா. நான் அவற்றை உண்பேன். அதன் பின்னர் உனக்கு மனமார ஆசி வழங்குவேன்.

ஏசா : சரி அப்பா. நீங்கள் கேட்டுக்கொண்டதை இப் போதே போய் நிறைவேற்றுகிறேன்.

ரெபேக்கா : (உரையாடலைக் கேட்டுக் கொண்டு இருந்தாள். சுவையான உணவு சமைக்கிறாள்.) யாக்கோபு இதனை அப்பாவிடம் கொடு. அவரது ஆசியைப் பெற்றுக்கொள்!

யாக்கோபு : நல்லது அம்மா. என், சகோதரன் ஏசா உடலில் அடர்ந்த உரோமம் உடையவன். நானோ மிருது வான உடலுடையவன். என் தந்தை என்னைத் தடவிப்பார்த்தால் என்ன ஆவது?

ரெபேக்கா : மகனே! நான் சொல்வதைச் செய். போ. (ஏசாவின் உடைகளை உடுத்துவிடுதல். கைகளை வெள் ளாட்டுக்குட்டியின் தோலால் போர்த்துதல்.)

ஈசாக்கு : ஆம்! மகனே! நீ எந்த மகன்?

யாக்கோபு : நான் தான் உங்கள் தலைப்பேறான ஏசா. நீங்கள் சொன்னவாறு செய்திருக்கிறேன். எனக்கு மனமார ஆசி வழங்குங்கள்.

ஈசாக்கு : இவ்வளவு சீக்கிரமாய் எப்படி வந்தாய் மகனே! மகனே அருகில் வா. நீ உண்மையிலேயே என் மகன் ஏசா தானா? குரல். யாக்கோபின் குரல் ஆனால் கைகளோ ஏசாவின் கைகள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாக்கோபு : ஆம்!

ஈசாக்கு : நீ உண்மையிலேயே என் மகன் ஏசா தானா?

யாக்கோபு : ஆம்!

ஈசாக்கு : "வானின் பனித்துளியும், மண்ணின் செழுமையும் மிகுந்த தானியமும், திராட்சை இரசமும் கடவுள் உனக்கு வழங்குவாராக! மக்கள் உனக்குப் பணிபுரிந்திடுக! உன்தன் சகோதரருக்குத் தலைவன் நீ ஆகிடுவாய்! உன் அன்னையின் மைந்தர் உன்னடி பணிந்திடுவர்! உன்னைச் சபித்தார் சாபம் பெறுக! உன்னை வாழ்த்துவார் வளமுற வாழ்க!"

இவ்வாறாக யாக்கோபு தனது சகோதரன் ஏசாவுக்கு உரித்தான ஆசிகளைப் பெற்றுக்கொண்டான். இவற்றை அறிந்த ஏசா கலங்கினான். யாக்கோபுவை கோபம் கொண்டு கொலை செய்ய எண்ணினான். யாக்கோபு மறைந்து வாழ வேண்டிய நிலை ஏற்பட்டது. ரெபேக்கா, யாக்கோபுவைப் பாதுகாப்பதற்காக, சகோதரன் லாபானுடைய வீட்டுக்கு அனுப்பி வைத்தாள்.

யாக்கோபு சகோதரனிடமிருந்து தப்பி லாபான் வீட்டை நோக்கிச் செல்லும் போது ஒரு கல்லின் மேல் தலைவைத்து சாய்ந்திருந்தான். அவன் ஒரு கனவு கண்டான். நிலத்தில் ஊன்றியிருந்த ஓர் ஏணியின் நுனி மேலே வானத்தைத் தொட்டுக் கொண்டு இருந்தது. அதில் கடவுளின் தூதர் ஏறுவதும், இறங்குவதுமாய் இருந்தனர். தனது சகோதரனிடமிருந்து தப்பி ஓடினாலும், இறைவனிடமிருந்து தப்பி ஓட முடியாது என அறிந்து கொண்டான். அவன் இறைவனை நோக்கிப் பார்க்காவிட்டாலும், இறைவன் அவனை நோக்கிப் பார்க்கிறார் என யாக்கோபு அறிந்து கொண்டான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆபிரகாம், ஈசாக்குடன் ஏற்படுத்திய உடன்படிக்கையை இறைவன் மீண்டும் யாக்கோபுடன் புதுப்பித்தார். "நீ படுத்திருக்கும் இந்த நிலத்தை உனக்கும் உன் வழி மரபிற்கும் தந்தருள்வேன்" என உறுதிப்படுத்தி அதனைப் புதுப்பித்தார். இவ்வாறாக யாக்கோபுக்கு இறையழைப்பு கிடைத்தது. இதுவே இறைவனின் இல்லம். விண்ணுலகின் வாயில்" என்றான். தூக்கம் தெளிந்த யாக்கோபு அவ்விடத்துக்கு "பெத்தேல்" எனப் பெயரிட்டான். அதன் பின்னர் லாபானுடைய வீட்டை நோக்கிச் சென்றான். அங்கு பணிபுரிந்து வரும் வேளையில் லாபானின் மகள் ராகேலை நேசித்தான். ஆனாலும் ராகேலின் சகோதரி லேயாளை அவனுக்கு விவாகம் செய்து வைத்தனர். மீண்டும் சில ஆண்டுகள் பணிபுரிந்த பின்னர் ராகேலை மணந்தான். இக்காலத்தில் அவன் மாமாவின் வீட்டில் அடிமையாக வாழ்ந்தான் என்பதற்கான ஆதாரங்கள் பல உண்டு. இவ்வாறாக யாக்கோபுவுக்கு இருமனைவிமார்களும் 12 புத்திரர் களும் இருந்தனர். பிற்காலத்தில் இவர்களின் பெயர்களின் அடிப்படையிலேயே 12 கோத்திரங்களின் பெயர்களும் தோன்றின.

பல ஆண்டுகளுக்குப் பின்னர் தனது மனைவிமார்களுடனும் குழந்தைகளுடனும் தனது கிராமத்தை நோக்கிப் புறப்படுவதற்காக இரகசியமாக வெறியேறினான். லாபானின் எதிர்ப்பும், நீதியற்ற தன்மையும் அதற்குக் காரணமாக அமையவில்லை. இறைவன் அவனுக்கு அளித்த உறுதியின்படி வாக்குப் பண்ணப்பட்ட நாட்டை நோக்கிச் செல்ல வேண்டும் என்பதே ஆகும். பின்தொடர்ந்த லாபானுடன் சமாதான உடன்படிக்கையும் செய்திருக்கலாம்.

தனது நாட்டை அண்மித்த யாக்கோபு, சகோதரன் ஏசா தன்னைப் பழிவாங்குவான் எனப் பயந்தான். அவன் ஏசாவுக்கு அன்பளிப்புகளை அனுப்பி வைத்தான். அதன்பின்னர் அவன் ஓரிடத்தில் தனித்திருந்தான். அத்தருணம் அவனுக்கு விசேட அனுபவம் கிடைத்ததாக வேதாகமத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. (தொ.நூ. 32 : 22-32) ஓர் ஆடவருடன் போராடினான். அவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“உன் பெயர் இனி யாக்கோபு எனப்படாமல் “இஸ்ரவேல்” எனப்படும். ஏனெனில் நீ கடவுளோடும் மனிதரோடும் போராடி வெற்றி கொண்டாய்” என்றார். யாக்கோபுவின் வாழ்வில் பெரியதொரு ஆன்மீக திருப்பம் ஏற்பட்டது. சகோதரன் ஏசாவுடன் எவ்வாறு உறவைப் புதுப்பிக்கலாம் என எண்ணினான்.



சகோதரன் ஏசா எதிர்நோக்கி வருவதைக் கண்ட யாக்கோபு அவன் முன்னால் ஏழுமுறை விழுந்து பணிந்தான். யாக்கோபுவினுடைய இந்தச் செயலுக்கு உத்தரவாதமாக ஏசா போராயுதங்களை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அகற்றி யாக்கோபை அணைத்துக்கொண்டான் என திருமறையில் கூறப்பட்டுள்ளது. இச் செயலினூடாக அவர்கள் இருவர்களுக்கிடையேயும் சமாதானமான ஐக்கிய உறவு புதுப்பிக்கப்பட்டமை புலப்படுகின்றது.

யாக்கோபு ஆரம்பத்தில் செல்வத்தையும், பலத்தையும் பெற்றுக்கொள்வதற்காக செயல்பட்டாலும், இறைவனின் அழைப்பைப் பெற்ற பின்னர் வாழ்வில் திருப்பம் ஏற்பட்டது. சமாதானத்தையும், ஒற்றுமையையும் தேடினான். அவற்றை மதித்து வாழ்ந்தான். தவறு செய்பவர்களையும், பாவம் செய்பவர்களையும் இறைவன் அழைத்து அதனூடாகத் தமது திட்டத்தை நிறைவேற்றுகின்றார் என்பது இக்கதையினூடாக வெளிப்படுகின்றது.

செயற்பாடு

1. யாக்கோபு தனது ஆரம்ப காலத்தில் மதித்து வாழ்ந்தது என்ன?

2. ஏசா, யாக்கோபு மீண்டும் உறவை உருவாக்கிய நிகழ்வை சித்திரம் வரைந்து அல்லது கவிதை வடிவில் எழுதிக் காட்டுக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாடம் 11.

# யோசேப்பு

தொ. நூ. 37, 39 - 45 அதிகாரங்கள்

யாக்கோபுவின் பன்னிரு புதல்வர்களுள் ஒருவன் யோசேப்பு ஆகும். யாக்கோபுவின் வயோதிப காலத்தில் ராகேலுக்குக் கிடைத்த மகன் ஆனபடியால் யாக்கோபு அவனை மிக அன்பாக நேசித்தான். அவனுக்கு வர்ண ஆடையை அன்பளிப்பாக வழங்கினான். இதனால் யோசேப்புவின் சகோதர்கள் அவன்மீது பொறாமை கொண்டனர். கனவுகளுக்கு அர்த்தம் கூறும் ஆற்றல் யோசேப்புவிடம் காணப்பட்டது.

இளமைக் காலத்தில் யோசேப்பு கண்ட இரு கனவுகள் வேதாகமத்தில் குறிப்பிடப்பட்டுள்ளன. பதினொரு கதிர்க் கட்டுகள் அவனது கதிர்க்கட்டை வணங்குவதாகவும், சூரியனும், சந்திரனும் பதினொரு நட்சத்திரங்களும் அவனை வணங்குவதாகவும் கண்டான். அதாவது சகோதர்கள் மட்டுமல்ல, பெற்றோரும் தன்னை வணங்குவர் என்பதே அதன் அர்த்தமாகும். அதன் நிமித்தமாக தகப்பனான யாக்கோபுவும் கோபம் கொண்டான் எனக் குறிப்பிடப் பட்டுள்ளது. கோபம் கொண்ட சகோதரர்கள் அவனைக் கொலை செய்யத் தீர்மானித்தனர்.

ஒரு நாள் யோசேப்புவின் சகோதரர் தோத்தான் எனும் இடத்தில் ஆடுகளை மேய்த்துக் கொண்டிருந்தனர். அவர்களைத் தேடுவதற்கு யோசேப்பு அனுப்பப்பட்டான். கோபம் கொண்ட சகோ தர்கள் அவர்களது திட்டத்தை நிறைவேற்ற முயன்றனர். ஆனாலும் அவனைக் கொலை செய்யாது பாழ் குழியில் போட்டனர். அதே வேளையில் அவ்வழியால் பயணம் செய்த மீதியானியரிடம் அவனை 20 வெள்ளிக் காசுக்கு விற்றனர். அவர்கள் யோசேப் புவை எகிப்துவில் உள்ள போத்திபார் என்னும் பிரதானியின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீட்டுக்குக் கொண்டுசென்றனர். யோசேப்பு இறைவனின் பாதுகாப்பில் நம்பிக்கை வைத்திருந்தான். போத்திபாரின் வீட்டில் விசுவாசமுள்ள பணியாளனாகச் செயற்பட்டான். ஆனாலும் போத்திபாரின் மனைவி யின் பொய்யான குற்றச்சாட்டுகளால் சிறை செல்ல வேண்டிய நிலை அவனுக்கு ஏற்பட்டது.

சிறையிலும் கூட இறைவன் தன்னுடன் செயல்பட்டுவருதை உணர்ந்தான். அநீதியைக் குறித்து அவன் கோபம் கொள்ளவில் லை. அவனுடன் அரசனுக்கு மது பரிமாறுபவனும், அப்பம் தயாரிப் பவனும் சிறையில் இருந்தனர். அவர்கள் இருவரும் கண்ட கனவு களுக்குத் தகுந்த பொருள் கூறினான். அவன் கூறியபடியே மது பரிமாறுவோன் விடுதலை பெற்று அரசமாளிகையில் மீண்டும் பணி செய்தான்.

இரு வருடங்களுக்குப் பின்னர் எகிப்திய அரசன் பார்வோன் இரு கனவுகள் கண்டான்.

1. நலிந்து மெலிந்த 7 பசுக்கள் கொழுத்த 7 பசுக்களை விழுங்கின.

2. பதரான 7 கதிர்கள் அழகிய 7 கதிர்களை மறைத்தன.

இவ்விரு கனவுகளுக்கும் பொருள் கூறுவதற்காக அரசன் அநேகரை அழைத்தான். அவன் எதிர்பார்த்த பதில் கிடைக்க வில்லை. அரசனின் மது பரிமாறுவோன் யோசேப்புவை அரசனுக்கு அறிமுகப்படுத்தினான். யோசேப்பு அரசனின் கனவுகளுக்குப் பொருள் கூறினான். வளமான 7 ஆண்டுகள் நாட்டில் உருவாகும். அதன் பின்னர் பஞ்சமான 7 ஆண்டுகள் உருவாகும். முதல் 7 ஆண்டுகள் விளைச்சலை சேமித்து, பஞ்ச காலத்தில் பட்டினியி லிருந்து மீட்பதற்கு மதிநுட்பமும், ஞானமும் நிறைந்த ஒருவன் நியமிக்கப்பட வேண்டும் எனக் கூறினான். அப்போது அரசன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இறையாசி பெற்றுள்ள இவரைப் போல வேறொருவரையும் நாம் காண முடியுமா?" எனக் கூறி யோசேப்புவை அரச அதிகாரியாக நியமித்தான்.

யோசேப்பு பல இடையூறுகளின் மத்தியிலும் விசுவாசத்துடன் செயல்பட்டமையால் இறைவன் அவனை மேலான நிலைக்கு உயர்த்தினார். யோசேப்பு கனவுக்குப் பொருள் கூறியது போல் நாட்டில் பஞ்சம் உருவாகியது. அது அண்மை நாடுகளுக்கும் பரவியது. கானான் தேசத்தில் வாழ்ந்த அவனது சகோதரர்களும் தானியங்களைப் பெற்றுக்கொள்வதற்காக எகிப்து நோக்கி வந்தனர். யோசேப்புவிடம் தானியம் வேண்டி நின்றனர். யோசேப்பு அவர்கள் மீது ஆதிக்கம் செலுத்த விரும்பவில்லை. அவன் அவர்களை மன்னித்தான். தேவையான உணவுப் பொருட்களை வழங்கினான். ஆனாலும் சகோதரர்கள் யோசேப்புவை அடையாளம் கண்டு கொள்ளவில்லை. யோசேப்பு தகப்பனையும், தம்பியையும் பற்றி மறைமுகமான வினாக்கள் மூலமாக விசாரித்தான்.

யோசேப்பு அவர்களுக்குத் தன்னை யாரென வெளிப்படுத்தினான். அதனை அறிந்த சகோதரர் யோசேப்பு ஆளுநராக இருந்தபடியால் பயந்தனர். ஆனாலும் யோசேப்பு அவர்களை நோக்கி "நீங்கள் என்னை விற்று விட்டது குறித்து மனம் கலங்க வேண்டாம். உங்கள் மீதே சினம் கொள்ள வேண்டாம். ஏனெனில் உயிர்களைக் காக்கும் பொருட்டே கடவுள் உங்களுக்கு முன்னே என்னை எகிப்துக்கு அனுப்பியிருந்தார்." என்று ஆறுதலான வார்த்தைகளைக் கூறினான். சகோதரர்களின் செயலை இறைவன் நன்மையாக மாற்றி பலரைக் காப்பாற்றினார் என்பது இதன் மூலமாகப் புலப்படுகின்றது.

யோசேப்புவின் வாழ்வும், நடத்தைப் பண்புகளும் ஆண்டவர் இயேசுவைப் பற்றி எமக்கு முன்னறிவிப்பைத் தருகின்றன. யோசேப்பு தகப்பனின் அன்பான மகனாக இருந்தது போல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயேசுவும் இறைவனின் அன்பான குமாரனாவார். யோசேப்பு இறைவனின் பாதுகாப்பில் நிரந்தரமாக செயல்பட்டது போலவே இயேசுவும் செயல்பட்டார். யோசேப்பு பல இடையூறுகளிலும் அவன் நீதியுடனும், விசுவாசத்துடனும் செயல்பட்டு வாழ்ந்த வண்ணமாகவே இயேசுவும் மனிதர்கள் மத்தியில் மனிதனாகப் பல துன்பங்களின் மத்தியில் நற்செயல் பல புரிந்து வாழ்ந்தார். தனக்கு எதிராக செயல்பட்ட சகோதரருக்கு யோசேப்பு மன்னிப்பு வழங்கியது போலவே, இயேசுவும் சிலுவையில் இருந்த வண்ணம் அனைவருக்கும் மன்னிப்பு வேண்டி நின்றார். யோசேப்பு எகிப்திய மக்களைப் பஞ்சத்திலிருந்து காப்பாற்றினான். இயேசு பாவத்திலிருந்து மனிதர்களை மீட்பதற்கு சிலுவையில் அறையப்பட்டு மரித்து உயிர்த்தார். யோசேப்பு சிறையிலிருந்து அரண்மனை ஆளுநராகப் பதவி பெற்றான். இயேசு சிலுவை மரணத்தினூடாக நித்திய வாழ்வை ஆரம்பித்து வைத்தார். இவ்வாறாக இயேசுவின் வாழ்வுக்கு முன்னடையாளமாக யோசேப்புவின் வாழ்வு அமைந்திருந்தது.

செயற்பாடு

1. யோசேப்புவின் வாழ்வில் ஏற்பட்ட துன்பங்கரமான சம்பவங்களை அட்டவணைப்படுத்துக.

2. "கலங்க வேண்டாம். உங்கள் மீதே சினம் கொள்ள வேண்டாம். ஏனெனில் உயிர்களைக் காக்கும் பொருட்டே கடவுள் உங்களுக்கு முன்னே என்னை எகிப்திலிருந்து அனுப்பி இருக்கின்றார்." இவ்வாக்கியத்திற்கு சந்தர்ப்பம் எழுதுக.

3. யோசேப்புவின் குணாதிசயங்களை, இயேசுவின் குணாதிசயங்களுடன் ஒப்பிடுக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடம் 12.

# இஸ்ரயேல் மக்கள் தலைவர்களின் பணி

## மோசேயின் தலைமைத்துவம்

வி.ப. 1:8-22, 2:, 3:1-15, 4:

யோசேப்புவினால் எகிப்து நாட்டில் மகத்தான சேவை நிறை வேற்றப்பட்டது. பார்வோன் அரசனின் அழைப்புடன் யோசேப்புவின் குடும்பத்தினர் எகிப்தில் குடியேறினர் எனவும் கடந்த பாடத்தில் கற்றோம். இவர்கள் எகிப்தில் ஏறக்குறைய 400 ஆண்டுகள் வாழ்ந்தனர். இஸ்ரயேல் மக்களின் தொகை மிக வேகமாக விருந்தி அடைந்தது. இக்காலகட்டத்தில் அதிகாரத்திலிருந்த பார்வோன் அரசன் யோசேப்பின் பணியின் முக்கியத்துவத்தை அறிந்து கொள் ளவில்லை. இஸ்ரயேல் மக்கள், அவனுக்கும் எகிப்தில் வாழ்பவர்க ளுக்கும் சவாலாக அமைந்துள்ளனர் என பார்வோன் நினைத்தான். இதன் காரணமாக இஸ்ரயேல் மக்களை அடிமைகளாக அரசைக் கட்டியெழுப்பும் பணிகளில் ஈடுபடுத்தினார்.

அக்காலத்தில் அவர்களை மனிதர்கள் போல நடாத்த வில்லை. எஜமானுக்கு அடிமையின் மேல் அதிகாரம் இருந்தமை யால் அவர்களைத் துன்புறுத்தி வேலை வாங்கினர். சில வேளை களில் கொலையும் செய்தனர். அடிமைத்தன மக்களான அவர் களுக்கு சொந்தப் பெயர்கள்கூட உரித்தாகவில்லை. வெளிநாட்டவர் களுக்குப் பொதுவான “ஹபீரு” எனும் மொழியைப் பாவித்தனர். அவர்களைக் கண்டனம் பண்ண இதனை உபயோகித்தனர்.

நீண்ட காலங்கள் இஸ்ரயேல் மக்கள் அடிமைப் பணியில் ஈடுபட்டு வேதனையுடன் வாழ்ந்து வந்தனர். அதுமட்டுமல்ல அரசன் தாதிகள் மூலமாக இஸ்ரயேல் பெண்களுக்கு பிறக்கும் ஆண் குழந்தைகள் அனைவரையும் கொலை செய்யும்படி பணித்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாதிகளால் அவ்வாறு செய்ய முடியாமல் இருந்தமையால் அவனது முயற்சி பயனற்றுப் போனது. எனவே மீண்டும் இன்னுமொரு சந்தர்ப்பத்தில் இஸ்ரயேல் குடும்பத்தில் பிறக்கும் ஆண் பிள்ளைகளை நைல் நதியில் எறிந்து விடுமாறு கட்டளையிட்டான்.

இவ்வாறான சூழ்நிலையிலேயே அடிமைக் குடும்பத்தில் மோசே பிறந்தார். மோசேயின் தாய் குழந்தையை மூன்று மாதங்கள் மறைத்து வைத்திருந்தாள். அதன் பின்னர் கோரைப்புல்லால் பேழை செய்து குழந்தையை அதனுள் வைத்து நைல் நதிக் கரையிலுள்ள நாணல்களுக்கிடையில் வைத்தாள். மீரியம் எனும் குழந்தையின் சகோதரி என்ன ஆகுமோ எனப் பார்த்துக் கொண்டிருந்தாள். நைல் நதியில் நீராடுவதற்காகப் பார்வோனின் மகள் அவ்விடத்துக்கு வந்தாள். அழகான ஆண்குழந்தையைக் கண்டு அதனை அரச மாளிகையில் வளர்க்க விரும்பினாள். "நீரிலிருந்து நான் இவனை எடுத்தேன்" என்று கூறி "மோசே" என்று பெயரிட்டாள். இறைவன் அவனைப் பாதுகாத்து இஸ்ரயேல் மக்களை எகிப்திய அடிமைத் தனத்திலிருந்து மீட்பதற்காக மோசேயைப் பாவித்தார். இஸ்ரயேல் மக்களுக்கு விடுதலையைப் பெற்றுக் கொடுப்பதற்காக மோசேக்கு அரண்மனை வாழ்வு உறுதுணையாக அமைந்தது.

இஸ்ரயேல் மக்களில் கருணையும், பரிவும் மோசேயிடம் காணப்பட்டது. ஒரு நாள் தமது இனத்தவர்களான எபிரேயன் ஒருவனை எகிப்தியன் அடிப்பதைக் கண்டான். அதனைக் கண்டு கோபமுற்ற மோசே தனது இனத்தவர்களிடம் கொண்டுள்ள இரக்கத்தால் எகிப்தியனைக் கொலை செய்தான். இன்னுமொரு தினம் இஸ்ரயேலர் இருவருக்கிடையில் கைகலப்பு நடைபெற்றுக் கொண்டிருந்த வேளை அவர்களைச் சமாதானப்படுத்தும் நடுவராகச் செயல்பட்டான். அவர்களில் ஒருவன், எகிப்தியனைக் கொன்று மணலில் புதைத்ததை வெளிப்படுத்தினான். பார்வோன் அரசன் இந்நிகழ்வை அறிந்தால் கொலை செய்வான் எனக் கருதினான். தனது பலத்தால் அடிமைகளை மீட்க முடியாது என அறிந்தான். அவன் மீதியான் நாட்டை நோக்கிச் சென்றான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மீதியானில் மாமனான எத்திரோவின் வீட்டில் பணி புரிந்தான். அவனது மகள் சிப்பொராளை விவாகம் செய்தான். அங்கு ஆட்டு மந்தைகளை மேய்த்து வந்தான். இறைவனின் அழைப்பானது மோசேக்கு அரசமாளிகையில் அல்ல, தாழ்மை வாழ்வு வாழும்போது கிடைத்தது. ஒரு நாள் அவன் ஒரேப் மலையை அடைந்த போது முட்புதர் நெருப்பால் எரிந்து கொண்டிருப்பதைக் கண்டான். மோசே அருகில் சென்றான். "மோசே மோசே" என்று கடவுள் முட்புதரின் நடுவிலிருந்து அவனை அழைத்தார்.

"இங்கே அணுகிவராதே உன் பாதங்களிலிருந்து பாதணி களை அகற்றி விடு. ஏனெனில் நீ நின்று கொண்டிருக்கிற இந்த இடம் புனிதமான நிலம்" என்றார். அவ்விடத்தில் இறைவனின் தோற்றம் அவனுக்குப் புலப்பட்டது.

இஸ்ரயேல் மக்களைத் துன்பகரமான நிலையிலிருந்து விடு தலை செய்து செழிப்பான கானான் நாட்டுக்கு அவர்களைக் கொண்டு செல்ல வேண்டும் என மோசேக்குக் கூறினார். "எகிப்தில் என் மக்கள் படும் துன்பத்தை என் கண்களால் கண்டேன். எனவே எகிப்தியரின் பிடியிலிருந்து பாலும், தேனும் பொழியும் நல்ல பரந்ததோர் நாட்டிற்கு.......... அவர்களை நடத்திச் செல்லவும் இறங்கி வந்துள்ளேன். என் மக்களை எகிப்திலிருந்து கடத்திச் செல்வதற்காக நான் உன்னைப் பார்வோனிடம் அனுப்புகிறேன்." (வி. ப. 3:7 - 10) என்றார்.

துன்ப துயரங்களால் கலங்குபவர்களின் வேண்டுதல்களை இறைவன் கேட்டுப் பதில் கொடுக்கின்றார். அவற்றை நடைமுறைப் படுத்துவதற்காக இவ்வுலகில் பல்வேறு விதமான நபர்களை, பல்வேறு சந்தர்ப்பங்களில் அழைப்பதாகவும் எமக்கு வெளிப்படு கின்றது.

இஸ்ரயேலை எகிப்திலிருந்து வெளியேற்றி அடிமைத்தனத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திலிருந்து விடுதலையைப் பெற்றுக்கொடுக்கும் செயலை மோசே யிடம் ஒப்படைத்தார். இறைவனில் பரிபூரண நம்பிக்கையில் வாழ வேண்டிய நிலை அவனுக்கு ஏற்பட்டது. மகத்தான பணியைச் செய்வதற்கான ஆற்றல் தனக்கு இல்லையென மோசே மனத்தாழ் மையுடன் ஏற்றுக் கொண்டான். இறைவன் மோசேயின் தலைமைத் 'துவப் பணியில், அவனுக்கு வழிகாட்டுவதாக உறுதியளித்தார்.

எகிப்தில் வாழ்ந்த இஸ்ரயேல் மக்கள் தாம் கூறுவதை ஏற்றுக்கொள்ள மாட்டார்கள் என மோசே சந்தேகம் கொண்டான். அவர்கள் அறிந்துகொள்ளும் வண்ணமாகக் கடவுளின் பெயரை வெளிப்படுத்துமாறு கேட்டான். "இருக்கின்றவராக இருக்கின்றவர் நானே" என்றார். இருக்கின்றவர் நானே என்பதே அதன் அர்த்தமா கும். இறைவன் அன்றும், இன்றும், என்றும் மாறாதவர் என அறிந்து கொள்ளலாம்.

மோசே அவனது நாவன்மைக் குறைபாட்டை உணர்ந்தான். தலைமைத்துவ அழைப்பைப் பெற்றவர் தமது ஆற்றல்களை உரிய முறையில் விளங்கிக்கொள்வது அவசியம். சகோதரனான ஆரோனை மோசேக்கு உதவியாக அனுப்பினார். மோசே கூட்டுத் தலைமைத்துவத்தை அவனுடன் ஏற்படுத்தினான். மோசேயின் சகோதரியான மிரியாம் இஸ்ரயேல் பெண்களை ஒன்றிணைத்துக் கூட்டுத்தலைமைத்துவத்துக்கு ஒத்துழைப்பு வழங்கினாள். வாக்குப் பண்ணப்பட்ட புதிய நாட்டுக்கு மக்களை அழைத்துச் செல்வதற்கு யோசுவாவைப் பயிற்றுவிக்கும் பணியில் மோசே தனது தலைமைத் துவத்தைப் பகிர்ந்து செயலபட்டமை எமக்கு முன்மாதிரியாக அமைகின்றது.

இஸ்ரயேல் மக்கள் எகிப்து தேசத்திலிருந்து வெளியேறி யமை இலகுவான செயல் அல்ல. இஸ்ரயேல் மக்கள் இலவசமாகத் தமது உழைப்பை அரசன் பார்வோனுக்கு வழங்கி வந்தமை யால் அவர்களை விடுதலை செய்ய அரசன் விரும்பவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மோசே பார்வோனை அணுகி அனுமதி கிடைக்காத போது இறைவனிடம் முறையிட்டான். தனது பலத்தில் அல்ல இறைவனின் பலத்தில் பூரண நம்பிக்கைவைத்துச் செயற்பட்டான். அக்கால கட்டத்தில் பல ஆபத்தான துன்பங்கள் எகிப்தை ஆட்கொண்டன. அவைகள் அனைத்தும் தேவ கோபத்தின் அடையாளமாகும். இறுதியாகப் பார்வோன் அரசன் இஸ்ரயேல் மக்களை அழைத்துச் செல்வதற்கு மோசேக்கு அனுமதி வழங்கினான்.

செயற்பாடு

1. இறைவனின் திட்டமானது மோசேயின் பிறப்பிலிருந்து செயற்பட்டதை உதாரணங்களுடன் விளக்குக.

2. கிறிஸ்தவ தலைமைத்துவத்துக்கு மோசேயின் வாழ்விலிருந்து பெற்றுக்கொள்ளக்கூடிய முன்மாதிரிகள் யாவை?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாடம் 13.

# பஸ்கா விழா

வி.ப. 12: 1 - 28

கிறிஸ்தவர்களாகிய எமக்கு "பஸ்கா" என்ற பதமானது மிகப் பழக்கப்பட்ட சொல்லாகும். யூதர்களின் பிரதானமான விழா வாகும். எகிப்திய அடிமைத்தனத்திலிருந்து விடுதலை செய்தமை யை நினைவு கூரும் வண்ணமாக யூதர்கள் அதனைக் கொண்டா டினர். அத்தினத்தில் நன்றி கூறி வந்தனர்.

பஸ்கா நாளன்று யூத குடும்பத்தில் அனைவரும் ஒன்றி ணைந்து உணவு உட்கொள்வர். குடும்பத்தின் இளம் பிள்ளையால் பல வினாக்கள் வினவப்படும். (உ - ம் பாதணிகளைக் கழற்றிய பின்னர் உணவு உட்கொள்வது ஏன்?) ஆரம்ப காலங்களில் மோசேக்கு அளித்த வாக்கின்படி, யூதர்கள் பஸ்கா தினங்களில் பாதணிகளைக் கழற்றிய பின்னரே உணவு உட்கொண்டனர். குடும்பத்தின் மூத்தவர் ஒருவரால் வரலாற்றுக் கதை கூறப்படு கின்றது. இது பஸ்கா திரு விழாவின் விசேடத்தை எடுத்துக் காட்டுகின்றது.

எகிப்திய நாட்டிலிருந்த இஸ்ரயேல் மக்களை விடுதலை செய்வதற்காகப் பார்வோனின் அனுமதியைப் பெறுதல் மிகக் கடினமானதாகும். பல துன்பங்களினூடாகப் பார்வோனின் கடினமான இதயத்தை மாற்ற முடியாமல் இருந்தது. இறுதியாகத் தலைமகன் இறப்பு வழங்கப்பட்டது. ஆட்டுக்குட்டியைத் தேர்ந்தெடுத்து அதன் குருதியைக் கதவு நிலைகளில் பூசுமாறு ஆண்டவர் கட்டளை யிட்டார். அவ்வகையான அடையாளத்தைக் கண்டதும் ஆண்டவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவ்விடத்தைக் கடந்து செல்வார் என்பதே ஆகும். இதனால் இவ்விழாவானது கடந்து செல்லல் விழாவாகவும் கருதப்படுகின்றது. இஸ்ரயேல் தலைப்பிள்ளைகள் காப்பாற்றப்பட்டமையும் பஸ்கா நினைவு தினத்தில் நினைவு கூறப்பட்டுவந்தன. அவர்கள் அன்றைய தினத்தில் கிடாயின் இறைச்சியை நெருப்பில் வாட்டி உட்கொண் டனர்.

அன்று எகிப்திலிருந்து வெளியேறிய போது புளிப்புள்ள அப்பத்தை உட்கொள்ளும் காலமாக அமைய வில்லை. புளிப்ப தற்கு முன்பாகவே அப்பத்தைத் தயாரித்து மிக விரைவாக வெளியேறவேண்டிய நிலை உருவாகியது. இந் நிகழ்வை அர்த்த முள்ளதாகக் கொண்டாடுவதற்கு பஸ்காவுக்கு முதல் நாளன்று யூத வீடுகளில் உள்ளவர்கள் புளித்த மாவை வீடுகளிலிருந்து அகற்றிவிடுவர். அனைவரும் பஸ்கா தினத்தில் புளிப்பில்லா அப்பத்தைப் புசித்தனர்.

எகிப்து நாட்டின் துன்ப காலத்தை நினைவுகூருவதற்காக கசப்பான கீரையையும் உணவுடன் சேர்த்துக்கொள்வர். குடும்பத் தலைவர் பஸ்கா விழாவின் விசேட அம்சங்களைக் கூறுவதினால் பரம்பரை பம்பரையாக பஸ்கா நிகழ்வு இன்றும் நினைவுகூரப் படுகின்றது.

சிலுவையில் அறையப்பட்ட ஆண்டவர் இயேசு இறைவனின் ஆட்டுக்குட்டியாக வெளிப்படுத்தப்பட்டார். அந்தக் காட்சியைப் புதிய ஏற்பாடு முன்வைக்கின்றது. ஆட்டுக்குட்டியின் இரத்தம் சிந்துதலின் காரணமான யூதமக்கள் எகிப்திலிருந்து விடுதலை பெற்றதை இயேசு கிறிஸ்து சிலுவையில் சிந்திய குருதியுனூடாக மனித சமூகம் பாவத்திலிருந்து விடுதலை பெறுவதை ஒப்பிடலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிறிஸ்தவர்கள் இயேசுவின் உயிர்த்தெழுந்த நாளை பஸ்கா தினமாக நினைவுகூர்ந்து வருகின்றனர்.

செயற்பாடு

1. யூதர்கள் எகிப்திய அடிமைத்தனத்திலிருந்து விடுபட்டமையை நினைவு கூரும் வண்ணமாக பஸ்கா விழாவை எவ்வாறு கொண்டாடுகின்றனர்?

2. யூதர்களின் பஸ்கா விழாவானது இன்று நாம் கொண்டாடும் இயேசுவினுடைய உயிர்த்தெழுதலுடன் எவ்வாறு தொடர்பு படுகின்றது?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடம் 14.

# இறைமக்களை உருவாக்குதல்

வி.ப. 14:1-13 , 15: , 16: , 20: 1-17

இஸ்ரயேல் மக்கள் எகிப்திலிருந்து விடுதலை பெற்ற நிகழ்வானது மிகக்கடினமான செயலெனக் கடந்த பாடத்தில் கற்றோம். மோசேயுடன் மக்களை அனுப்புவதற்கு இணங்கிய பார்வோன் மறுகணம் தனது எண்ணத்தை மாற்றினான். எகிப்திய பொருளாதார முன்னேற்றத்துக்கு உழைத்த மக்களை அனுப்புதல் இலாபகரமானதல்ல எனக் கருதி மீண்டும் அவர்களைக் கூட்டிவர முயன்றான்.

பின்னால் தொடர்ந்து வந்த படையினரையும் முன்புறம் கடலையும் கண்ட இஸ்ரயேலர் கலங்கினர். அவர்களுக்கும் எகிப்தியப் படையினருக்கும் இடையே மேகத்தூண் காணப்பட்டது. இது இறைவனின் வழிநடத்தலின் அடையாளமாக அமைந்திருந்தது. இறைவழிகாட்டலுடன் கடலினூடாகக் கடந்து சுதந்திரத்தைப் பெற்றுக் கொள்ளுதல் இலகுவானதல்ல என்பதை இஸ்ரயேல் மக்கள் அறிந்து கொண்டனர்.

வனாந்திரத்தினூடாகப் பயணம் சென்ற இஸ்ரயேல் மக்கள் பல்வேறு பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்தனர். அவர்களுக்கு உணவு, குடிநீர் குறைவு ஏற்பட்டது. எகிப்திய அடிமை வாழ்வு இதனைவிட மேலானது என மோசேக்கு எதிராக முறையிட்டனர். மோசேயின் வேண்டுகோள் இறைவனால் கேட்கப்பட்டது. மக்களுக்கு அன்றாட உணவு வழங்கப்பட்டது. வனாந்தர வாழ்வில் ஏறக்குறைய 40 ஆண்டுகள் அவர்களைப் பராமரித்துப் பாதுகாத்து வந்தார். "மன்னா" எனும் உணவு அளிக்கப்பட்டது. அவைகள் மென்மையான, தட்டையான, மெல்லிய உறைபனி போன்ற சிறு பொருளாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தண்ணீர் கிடைக்காத போது அவர்கள் மீண்டும் மோசேக்கு எதிராக வாதாடி முறுமுறுத்தனர். ஓரேபில் காணப்பட்ட கற்பாறையைக் கோலால் அடித்து நீர் கிடைக்க மோசேக்கு இறைவன் வழிகாட்டினார். மக்கள் நீரைப் பெற்றுக் கொண்டனர். எதிரிகளின் தாக்குதலுக்கு உட்பட்ட வேளைகளில் அவர்களைக் காப்பாற்றினார். 40 ஆண்டு கால வனாந்தரப் பயணத்தின் இறைவனில் நம்பிக்கை வைத்து விசுவாசத்துடன் செயற்பட முற்பட்டனர். அன்றாட ஆகாரத்தால் திருப்தியடையக் கற்றுக்கொண்டனர்.

துன்பங்கள், துயரங்கள் அற்ற வேளைகளில் அவர்கள் இறைவனை மறந்து வாழ்ந்தனர். அவர்கள் எண்ணிய வண்ணம் செயற்பட்டனர். புதிதாகச் சுதந்திரத்தை அனுபவித்த இந்த மக்கள் ஒற்றுமையுடன் இணைந்து வாழ நீதிக்கட்டளைகள் தேவைப்பட்டன. நீதிக்கட்டளைகளாக, பத்துக் கட்டளைகள் வழங்கப்பட்டன. இவைகளை வேதாகமத்தில் வாசித்து நினைவுப்படுத்திக் கொள்ளுங்கள். இஸ்ரயேல் மக்களின் தலைவன் இறைவன். மக்களுக்கு மகத்தான ஆசிகளை வழங்கிய இறைவனை வணங்க வேண்டும் என்பதை முதல் நான்கு கட்டளைகளும் கற்பிக்கின்றன. அடிமை வாழ்வின் போது பல தேவர்களை வணங்கி வந்தனர். அவர்களில் பலர் விக்கிரக வழிபாடுகளையும் நடாத்தி வந்தனர். இவ்வாறான செயல்கள் இஸ்ரயேலிலும் தாக்கத்தை உருவாக்கியிருக்கலாம். சுதந்திர மக்களாக அழைத்துச் செல்லப்பட்ட கானான் நாட்டினரும் பல தேவ கொள்கைகளைப் பின்பற்றி வந்தனர். இறைவன் சீனாய் மலையில் அளித்த முதலாவது கட்டளையில் ஒரே ஆண்டவரை வணங்குமாறு கூறினார். ஒரே தெய்வத்தை வணங்குவதே அவர்களது ஒன்றிணைந்த நோக்கமாகும்.

அதேபோன்று புதிய நாட்டை நோக்கி, புது வழியிற் பயணம் செய்த மக்கள் ஒருவருடனொருவர் உறவு வைக்க வேண்டும் என்பதே இறைவனின் எதிர்பார்ப்பாகும். பார்வோன் போன்ற அரச ஆளுநர்களின் ஆட்சியிலிருந்து வாழ்ந்த மக்களுக்கு மேலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டளைகளைக் கூறினார். இறைவன் மனிதரில் கரிசனை கொள் ளும் கருணையுள்ள இறைவன் என்பதனால் இறைமக்களும் அந் நியர்களை ஆதரித்து வாழ வேண்டும் என 6 - 10 வரையிலான கட்டளைகளினூடாகப் புலப்படுகின்றது.

இறைமக்களை உருவாக்குவதற்குக் கட்டளைகளும், வனாந்தர அனுபவங்களும் உதவியாக அமைந்தன.

செயற்பாடு

1. இறைவன் அளித்த பத்து கட்டளைகளை உமது நடையில் எழுதுக.

2. புதிய நாட்டை நோக்கிச் சென்ற வனாந்தரப் பயணத்தில் இஸ்ரயேல் மக்களுக்கு ஏற்பட்ட துன்ப அனுபவங்களை அட்டவணைப்படுத்துக. அவைகள் இறைமக்களைத் தோற்று விப்பதற்கு அனுகூலமாக அமைந்த விதத்தையும் குறிப்பிடுக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாடம் 15.

# வாக்குப்பண்ணப்பட்ட நாட்டில் குடியமர்த்தல்

இச 31: 1-8 , நீத 6: 11 - 24

புதிய நாட்டை நோக்கிப் பயணம் செய்த மக்களைக் குடிய மர்த்தும் பொறுப்பானது யோசுவாவிடம் ஒப்படைக்கப்பட்டது. தலைவன் மோசே, இஸ்ரயேல் மக்களை எகிப்திய அடிமைத்தனத்திலிருந்து மீட்டு 40 ஆண்டுகாலம் வனாந்தரப் பயணத்தில் இறைவழி நடத்தலுடன் நடத்திச் சென்றான். புதிய சமுதாயத்தினருக்கு இறைவனின் கட்டளைகளை முன்வைத்து ஆன்மீக அத்திவாரம் இட்டவன் மோசே எனக் கடந்த பாடத்தினூடாக அறிந்தோம். வயோதிப வயதை எய்திய மோசே புதிய தலைவனாக யோசுவாவை அறிமுகப்படுத்தினான்.

இறையாசியுடன் தேசத்தை இஸ்ரயேல் மக்களுக்கு உரிமையாக்க வேண்டும் என எடுத்துரைத்தான். "வலிமை பெறு, துணிவு கொள்." இவர்களுக்குக் கொடுப்பதாக அவர்களின் மூதாதையருக்கு ஆண்டவர் ஆணையிட்டுக் கூறிய நாட்டுக்குள் இந்த மக்களோடு நீ செல்ல வேண்டும். அதை இவர்கள் உரிமையாக்கிக் கொள்ளுமாறு செய்ய வேண்டும். ஆண்டவர் உனக்கு முன்பதாகச் செல்வார். அவர் உன்னோடு இருப்பார். அவர் உன்னைக் கைவிடவும் மாட்டார். அஞ்சாதே திகையாதே" எனக் கூறி யோசுவாவைப் பலப்படுத்தினான். (வி.ப. 31:7) மோசேயின் மரணத்துக்குப் பின்னர் யோசுவா தலைமைத்துவத்தை ஏற்றுக்கொண்டான். மக்கள் எதிர்பார்த்திருந்த கானான் நாட்டுக்குள் யோசுவாவின் தலைமைத்துவத்தின் கீழ் பிரவேசித்தனர். அங்கு வாழ்ந்த மக்கள் எதிர்ப்புத் தெரிவித்தனர். எதிரிகளின் தொல்லைகளால் குடியமர்தலை நிலைப்படுத்திக் கொள்ளுதல் சிரமமாக அமைந்தது. பலஸ்தீனாவை வெற்றி கொண்டாலும், ஏனைய நாடுகளை இணைத்துக் கொள்ள முடியாத நிலை ஏற்பட்டது. இதற்காக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்னின்றவர்கள் "நீதித்தலைவர்கள்" என அழைக்கப்பட்டனர்.

இவ்வாறு அழைக்கப்பட்டவர்களுள் கிதியோனும் ஒருவன் ஆவான். பலம் வாய்ந்த மீதியானியருடன் போராட முடியாது எனத் தனது பலவீன நிலையைத் தாழ்மையுடன் எடுத்துரைத்தான். பலமற்ற தன்மைகளை அடையாளம் கண்டு அதனூடாகப் பலத்த செய்கைகளைச் செய்யக் கூடியவர் இறைவன் மட்டுமே "சதாகால மும் நான் உன்னுடன் இருப்பேன்" என இறைவன் தமது வார்த்தைகளால் கிதியோனைப் பலப்படுத்தினார்.

பாகால் தெய்வத்துக்கான பலிபீடத்தை உடைப்பதே அவனது முதற்செயலாகும். அதன் பின்னர் மீதியானியரைத் துரத்தும் பணியைத் தொடர்ந்தான். இதற்குப் படைப்பலம் அதிகம் தேவைப்பட்டது. கிதியோன் புதுமையான வகையில் செயற்பட்டான். இறைவனின் கட்டளைப்படி 300 பேரைத் தெரிவு செய்தான். அவர்கள் போருக்காகப் போராயுதங்களைக் கொண்டு சென்றார்க ளா? இல்லை. கிதியோனின் எக்காளத்தொனி கேட்டவுடன் தமது கைகளிலிருந்த பானைகளை உடைத்தனர். மற்றக்கையில் நெருப் புப் பந்தங்களை ஏந்திய வண்ணமாக எக்காளத்தொனி எழுப்பி ஆர்ப்பாட்டம் செய்தனர்.

இஸ்ரயேல் தமது கூடாரங்களை உடைத்து நொறுக்கி இருப்பார்கள் எனப் பயந்த மீதியானியர் தமது வாள்களாலும், தடிகளாலும், தங்களைத் தாங்களே தாக்கிக் கொண்டனர். தாமாகவே ஒருவரையொருவர் தாக்கியமையால் இஸ்ரயேல் மக்களுக்கு வெற்றி இலகுவாகக் கிடைத்தது. இது போர்செய்து பெற்றுக்கொண்ட வெற்றியல்ல என்பதை நீங்கள் அறிந்திருப்பீர்கள்.

இஸ்ரயேல் மக்களின் வெற்றியானது இறைவனின் பலத்தினா லும், வழிகாட்டுதலினாலும் கிடைக்கப் பெற்றது என ஏற்றுக் கொண்டனர். இன்றும் கூட இறைவனில் விசுவாசம் வைப்பவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களுக்கு மகத்தான செயல்களை செய்யமுடியும் என இதனூடாக அறிந்து கொள்ளலாம்.

செயற்பாடு

1. கிதியோனின் வாழ்வின் முக்கிய நிகழ்வுகளையும் அவற்றி லிருந்து நாம் பின்பற்றக் கூடியவைகள் யாவை எனவும் குறிப் பிடுக.

2. எமது சமுதாயத்தில் வீரர்களாகக் கருதப்படக்கூடிய வர்களின் பெயர்களைக் குறிப்பிடுக.

3. கிதியோனின் வீர குணாதிசயங்களை விபரிக்குக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடம் 16.

# சவுல் அரசன்

1 சாமு 8: - 16, அதிகாரங்கள்

குறிப்பிட்ட ஒரு சமூகத்தினரை ஓரினமாக அறிந்து கொள்வது எவ்வாறு? அவர்களுக்கு உரிமையான நிலம் காணப்படுதல் வேண்டும். அரசியல் நிருவாகமும், அரசியல் தலைவனும் அவசியம். எகிப்திய அடிமைவாழ்வின் போது இஸ்ரயேலுக்கு இவைகள் ஒன்றுமே இல்லை. இருப்பினும் இறைவன் அவர்களைத் தெரிவு செய்தார். அடிமைநிலையில் வாழ்ந்த அவர்கள் வாக்குப்பண்ணப் பட்ட நாட்டுக்குப் பயணம் செய்தமையைக் கடந்த பாடத்தில் கற்றோம். இறைவனின் பாதுகாப்பைப் பெற்ற அவர்கள் தலைமைத் துவத்தை ஏற்றுக்கொண்டிருந்தனர். மோசேயும் ஏனைய தலைவர் களும் இறைவனின் பிரதிநிதிகள் மட்டுமே. (வி.ப. 3:1, 4:16) அவர்களின் அரசன் இறைவனே என ஏற்றுக்கொண்டிருந்தனர். கிதியோன் போன்ற மக்கள் தலைவர்களும் இதனை உறுதியாக ஏற்றுக்கொண்டிருந்தனர். (நீத 8:22,23)

மோசேயின் தலைமையின் கீழ் வாக்குப்ண்ணப்பட்ட நாட்டுக் குள் புகுந்த இஸ்ரயேல் மக்களுக்கு நிரந்தரமான உரிமை இருக்க வில்லை. கானானியர், மீதியானியர், பெலிஸ்தீனியர் போன்றவர்கள் இடையூறுகளை அளித்தனர். தெபோராள், பாருக் கிதியோன், சிமியோன் போன்ற நீதித்தலைவர்களும், இவ்வித இடையூறுகளி லிருந்து மக்களை விடுவிக்க முயன்றனர். தெபோராள், பாருக் ஆகிய இருவரும் கானானியரையும், கிதியோன் மீதியானியரையும் கட்டுப்படுத்தக் கூடியவராக இருந்தனர். ஆனால் சிமியோனுக்கு பெலிஸ்தியரை வெற்றிகொள்ள முடியாதிருந்தது. இஸ்ரயேல் கடவுளின் கட்டளைகள் அடங்கிய உடன்படிக்கைப் பேழையைத் தூக்கிய வண்ணம் போர்க்களத்துக்குப் புறப்பட்டுச் சென்றனர். அவர்கள் எதிர்பார்க்காத விளைவு ஏற்பட்டது. பெலிஸ்தியர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருச்சட்டப் பலகையை பறித்துச் சென்றனர். வயோதிப இஸ்ரயேலின் ஆன்மீகத்தன்மை வெறுமையாகியது. மக்களை ஒன்றிணைக்கும் தலைவன் இல்லை என்ற குறைபாடு அவர்களுக்குத் தோன்றியது. நிரந்தர அதிட்டானத்துடன் மக்கள் இராமாவுக்கு, சாமுவேலை சந்திக்க வந்தனர். (ஆசாரியனாகவும், இறைவாக்கினனாகவும் இறைவனால் ஏற்றுக் கொண்ட பிரதிநிதி சாமுவேல்.) "எங்களுக்கு நீதி வழங்க ஓர் அரசனைத் தாரும்" என சாமுவேலிடம் வேண்டினர். சாமுவேல் வேண்டுகோளை மறுத்தான். அரசனை நியமிப்பின் அவர்கள் மீண்டும் அடிமை வாழ்வுக்கு உட்படுத்தப்படுவர் என எண்ணினான். (1 சாமு 8:) ஆனால் அரசன் ஒருவன் தங்களுக்கு வேண்டும் எனத் தொடர்ந்தும் வேண்டியமையால் அவர்களது வேண்டுகோளை நிறைவேற்றத் தீர்மானம் எடுத்தான்.

பென்யமீன் குலத்தில் கீசு என்ற ஆற்றல் மிகுந்த செல்வந்த வீரருக்கு இளமையும், அழகும் கொண்ட புத்திரன் இருந்தான். (1 சாமு 9-10 அதிகாரங்கள்). சவுலை சாமுவேல் எதிர்பாராவண்ணமாகச் சந்தித்தான். அழகான அந்த இளைஞனைக் கண்டவுடனேயே அவனைப்பற்றி விளக்கமாகப் புரிந்து கொண்டான். மக்கள் அனைவரிலும் அவனைப் போல வேறொருவரும் இருக்கவில்லை. அவன் அனைவரையும் நோக்கி "ஆண்டவர் தேர்ந்தெடுத்தவரைப் பாருங்கள். மக்கள் அனைவரிலும் அவரைப் போல வேறெவரும் உண்டோ" எனக் கூறினான். சாமுவேல் தைலக்குப்பியை எடுத்து, அவர் தலைமீது வார்த்து சவுலை திருப்பொழிவு செய்தார்.

சாமுவேல் மக்களை மிஸ்பாவில் ஆண்டவர் திருமுன் அழைத்தார். சவுல் அரசனை அவர்களுக்கு அறிமுகப்படுத்தினார். அவர்கள் முன்னால் சவுலை அழைத்த போது இளைஞன் சவுல் அங்கு காணப்படவில்லை. அவன் பொருட்குவியலில் ஒளித்திருந்தான். சவுல் ஏன் அவ்வாறு செய்தான்? வேதாகமத்தில் இதற்கான சரியான பதில் இல்லை. ஆனாலும் அவனது மனதில் இவ்வாறான பின்னடைதல் உருவாகியது எனப் புலப்படுகின்றது. தலைமைத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துவப் பணிக்கு அழைக்கப்பட்ட மற்றவர்களைப் போன்று சவுலும் தன்னைப் பெறுமதியற்றவனாக நினைத்திருக்கலாம். இறைபலம், வழி காட்டுதல் பற்றி அவன் விசுவாசம் வைத்திருக்கவில்லையா? இருப்பினும் அவன் ஏனையவர்களிலும் உயர்ந்தவனாகக் காணப் பட்டான். "அரசன் நீடூழி வாழ்க!" என மக்கள் வாழ்த்தினர். அதன் பின்னர் அரசனின் பொறுப்புக்களையும், சட்டத்திட்டங்களை யும் சாமுவேல் எடுத்துரைத்தான். அதுமட்டுமல்ல, அவற்றை ஏட்டில் எழுதியும் வைத்தார். (1 சாமு 10:17 - 25) எந்தவொரு மக்கள் தலைவனும் மக்களுக்குப் பணி செய்வதற்குக் கட்டுப்பட்டு இருந்ததாகவும், அந்தப் பணியானது இறைவனின் விருப்பத்துக்கு அமைய நடத்தப்பட வேண்டும் எனவும் விளக்கப்பட்டது.

சவுலின் ஆட்சியின் ஆரம்ப காலகட்டத்தில் எதிரிகளிடமிருந்து மக்களைப் பாதுகாப்பதற்காக முயற்சித்தான். அம்மோனியரின் முற்றுகையினைத் தவிர்ப்பதற்காக அவனுக்கு வடக்கு, தெற்கு கோத்திரங்களின் உதவி கிடைத்தது. அனைத்து கோத்திரங்களும் கில்கால் நகரில் ஒன்று கூடினார்கள்? சாமுவேல் "நீங்கள் ஆண்டவருக்கு அஞ்சி, அவருக்குப் பணிந்து ..................... நீங்களும் உங்களை ஆளும் அரசரும் உங்கள் கடவுளாகிய ஆண்டவரைப் பின்பற்றுபவராக இருப்பீர்கள்" (1 சாமு. 12:14) என்று கூறினான்.

சவுல் அரசனின் ஆட்சிக்காலத்தைப் பற்றிய சுருக்கமான விபரம் 1 சாமு 14:47-48 இல் எழுதப்பட்டுள்ளது. "சவுல் இஸ்ரயேல் மீது ஆட்சி செய்து ................இஸ்ரயேலை விடுவித்தார்." சவுலை வீரநபராக அறிமுகப்படுத்தலாம். சவுல் பெலிஸ்தியருக்கு எதிராகத் தனது ஆட்சிக்காலத்தைச் செலவிட்டான். காலங்கள் செல்ல, பலமுள்ள சேனையைக் கட்டியெழுப்பினான். வீரனையும் வலியவ னையும் கண்ட போது சவுல் அவர்கள் எல்லோரையும் தம்மோடு சேர்த்துக் கொள்வதுண்டு என 1 சாமு 14:52 இல் குறிப்பிடப்பட் டுள்ளது. சவுலின் மகன் யோனத்தானும் அவனுக்குப் பூரண ஒத்துழைப்பை வழங்கினான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாமுவேல் சவுலைப் பற்றிக்கொண்டிருந்த நம்பிக்கையானது படிப்படியாகக் குறைவுபட்டது. சாமுவேலின் கனவு நனவாகியது. அதற்கான காரணங்களை 1 சாமு 15:10,11 இல் வாசித்தறியலாம். சவுல் தமது மக்களை மகிழ்விப்பதற்காக முதலிடம் அளித்தான். இறைகட்டளையை மறந்து அதற்குக் கீழ்படியாது எதிரிகளிடம் கொள்ளையிடப்பட்டவைகளை மக்கள் அனுபவிப்பதற்காக அனுமதி வழங்கினான். மக்கள் மத்தியில் பிரபலமடைவதற்காக அவன் இவ்வாறு செய்திருக்கலாம். சாமுவேலின் விமரிசனத்துக்கு ஏற்ற பதிலைக் கூறி தனது தவறை ஏற்றுக்கொண்டான். "நான் பாவம் செய்து விட்டேன். வீரர்களுக்கு அஞ்சி அவர்களின் குரலுக் குச் செவி கொடுத்து, ஆண்டவரின் வாய்மொழியையும், உம் வார்த்தைகளையும் மீறிவிட்டேன்" (1 சாமு 15:24-25) எனக் கூறினான். சாமுவேல், சவுலைக் குறித்த தனது புறக்கணிப்பை வெளிப்படுத்தினான். சவுல் பயந்தான். இஸ்ரயேல் அரசை உம்மை விடச் சிறந்த ஒருவனுக்குத் தந்துவிட்டார்" என சாமுவேல் உரைத் தான். சவுல் மனம் வருந்தினான்.

மக்களைப் பாதுகாப்பதை மறந்து, தனது நிலையையும், மதிப்பையும் பாதுகாத்துக்கொள்ள வேண்டும் என்ற மனப்பான்மை யே அவனது தோல்வியின் ஆரம்பம் எனக் கூறலாம். அதனால் அவன் நிலைதடுமாறினான். ஒரு காலகட்டத்தில் இறையருளுடன் செயற்பட்ட சவுல் நான் என்ற மமதையில் செயற்பட்டதால் ஏற்பட்ட விளைவுகள் பலவாகும்.

செயற்பாடு


1. அரசபதவி வகித்தலில் சவுல் காட்டிய மனப்பான்மைகள் யாவை?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. சாமுவேலின் எச்சரிக்கை அறிவுறுத்தல்களுக்கு ஏற்ப அரசனொருவனால் செய்யக்கூடாதவைகள் யாவை?

3. படத்தில் சவுல் அரசனின் ஆட்சிக்குரிய பகுதிகளை தனி நிறத்தால் நிறம்தீட்டிக் காட்டுக.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடம் 17.

# தாவீது அரசன் (i)

திருமறைப்பகுதி 1 சாமு 16: - 24: அதிகாரங்கள்

எகிப்து நாட்டை நோக்கி அடிமையாகப் பயணம் மேற்கொண்ட யோசேப்பு, அங்கு ஆளுநராக உயர்த்தப்பட்ட கதையை ஏற்கனவே கற்றுள்ளோம். இங்கு தாவீது எனும் ஆட்டுமேய்ப்பனை அரசனாக பதவி ஏற்றும் சுவையான ஒரு கதையைப் பார்ப்போம்.

ஆட்டுமேய்ப்பன் தாவீதைப் பற்றி ஆரம்ப பிரிவு கிறிஸ்தவ பாடப்புத்தகத்தில் எழுதப்பட்டுள்ளது. தாவீது உயிரைப் பணயம் வைத்து தனது ஆடுகளைப் பாதுகாத்த விதம் பின்வரும் வேத வாக்கியங்களினூடாகப் புலப்படுகின்றது. "உம் அடியானாகிய நான் என் தந்தையின் ஆடுகளை மேய்த்துக் கொண்டிருக்கும் போது, சிங்கமோ அல்லது கரடியோ மந்தையில் புகுந்து ஆட்டைக் கவ்விக் கொண்டு ஓடினால், நான் பின்தொடர்ந்து ஓடி அதை அடித்து அதன் வாயினின்று ஆட்டை விடுவிப்பேன்."

இவ்வாறு பயமின்றி செயல்பட தெய்வீக பலன் அவனுக்குள் செயல்பட்டது. "சிங்கங்களினதும் கரடிகளினதும் பிடியிலிருந்து என்னைப் பாதுகாத்தருளும்" என அவன் பாடியுள்ளான். திருப்பாடல் நூலில் காணப்படும் அனைத்துப் பாடல்களும் தாவீதால் பாடப்பட்டவை அல்ல. எனினும் அவைகள் தாவீதின் பாடல்கள் என பொதுவாக அழைக்கப்படுகின்றன. இறைவழிபாடுகளிலும் இவைகள் பாவிக்கப்பட்டு வந்தமை குறிப்பிடத்தக்கது ஆகும். ஆபத்துகளுக்கு மத்தியில் ஆடுகளைப் பாதுகாப்பதற்குத் தன்னை வழிநடத்தி தைரியப்படுத்திய இறைவனைத் துதித்தல் அவனுக்கு இயல்பாகவே ஏற்பட்டது. தாவீது இறைவனை நல் ஆயராகக் கண்டான். "ஆண்டவரே என் ஆயர்" எனக் கூறி இறைப் பாதுகாப்பிற்குத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன்னை ஒப்புக் கொடுத்தமை மனதைக் கவர்ந்ததொன்றாகும்.
(திருப்பாடல் : 23ம் அதிகாரம்)

இவ்வேளையில் சாமுவேல் இறைகட்டளைக்குப் பணிந்து சவுலுக்குப் பதிலாக வேறொரு அரசனை நியமிக்கத் தீர்மானம் எடுத்தான். சாமுவேல் பெத்லகேமை நோக்கிச் சென்று கொண்டிருந் தான். யூதகுலத்தைச் சேர்ந்த ஈசாயின் வீட்டை அடைந்தான். ஈசாயின் புதல்வர்களுள் ஒருவரை அரசனாகத் தேர்ந்தெடுக்க எண்ணினான். ஈசாயின் மூத்த மகன் எலியாவை சாமுவேல் கண்ட வுடன், "ஆண்டவரால் திருப்பொழிவு செய்யப்பட்டவன் இவனாகத் தான் இருக்கும்" என்றபோது இறைதொனி சாமுவேலுக்கு கேட்டது. "அவன் தோற்றத்தையும், உயரத்தையும் பார்க்காதே" என்ற எச்சரிக்கைத் தொனி அவனுக்குக் கேட்டது. வெளித்தோற்றத்தினால் சவுலைத் தெரிவு செய்தமை நினைவில் தோன்றியிருக்கலாம்.


ஈசாயின் புத்திரர்கள் சாமுவேலுக்கு முன்னால் கடந்து சென்றனர். இறுதியாக ஆடுகளை மேய்த்துக்கொண்டிருந்த தாவீது அழைத்து வரப்பட்டான். சாமுவேலின் மனம் அவன்மேல் சென்றது. அவன் சிவந்த மேனியும், ஒளிரும் கண்களும் கொண்டு அழகிய தோற்றமுடன் இருந்தான். ஆண்டவர் சாமுவேலிடம், "தேர்ந்து கொள்ளப்பட்டவன் இவனே! எழுந்து இவனைத் திருப்பொழிவு செய்" என்றார். அப்படியே சாமுவேல் எண்ணெய் நிறைந்த கொம் பை எடுத்து அவன் சகோதரர் முன்னிலையில் அவனைத் திருப்பொழிவு செய்தார். அன்று முதல் ஆண்டவரின் ஆவி தாவீதின் மேல் நிறைவாக இருந்ததாக திருமறை எழுத்தாளர் குறிப்பிட் டுள்ளார்.

சாமுவேல் ஈசாயின் வீட்டைவிட்டுப் புறப்பட்டுச் சென்றவுடன் தாவீது தனது மந்தைகளை மேய்க்கச் சென்றிருக்கலாம். அவன் இடைக்கிடையே சவுல் அரசனிடமும் சென்றிருக்க வேண்டும் என 1 சாமு 17:5 இல் குறிப்பிடப்பட்டுள்ளது. இக் காலத்தில் சவுல் அரசனின் படை பெலிஸ்தியருடன் பலத்த போராட்டத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈடுபட்டிருந்தது. தாவீது அவர்களுக்கு உணவு கொண்டு சென்றது டன் அவர்களின் சுகநலன்களை அறிந்துகொள்வதற்குப் பாசறைக்கு அனுப்பப்பட்டிருக்கலாம். அங்கு கோலியாத் எனும் வீரனின் அறைகூவல் அவனுக்குக் கேட்டது. அவன் பலவான் கோலியாத் துடன் போராட முன்வந்தான். போர்வீரனுக்குரிய தகைமைகள் எதுவும் சவுலுக்கு இருக்கவில்லை. சவுல் அரசன் அவனது போர் உடைகளை தாவீதுக்கு அணிவிப்பதற்கு விருப்பம் தெரிவித்தான். (1 சாமு 17: 38,39). ஆனால் தாவீது தனது மக்களை காப்பாற்று வதற்காகவே கோலியாத்துடன் போராடினான். எவரும் எதிர்பாராத வண்ணமாக நீரோடையிலிருந்து வழுவழுப்பான ஐந்து கூழாங்கற் களைத் தேர்ந்தெடுத்து இடையனுக்குரிய தனது பையில் போட்டுக் கொண்டான். தன் கவணைக் கைகளில் பிடித்துக் கொண்டான். பெலிஸ்தியரை நோக்கிச் சென்றான். கோலியாத்தை தோற்கடித்த தாவீதை மக்கள் புகழ்ந்தனர்.



**மேய்ப்பனின் உபகரணங்கள்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்று முதல் சவுல் தாவீதைப் பொறாமைக் கண்ணுடன் நோக்கலானான். தாவீதின் மேல் கொண்டிருந்த அன்பு படிப்படியாகக் குறைவடைந்தது. ஆனால் சவுலின் மகன் யோனத்தானுடன் தாவீதின் நட்பு வளர்ச்சி பெற்றது. சவுலின் மகள் மீக்கால் தாவீதின்மேல் காதல் கொண்டாள். சவுல் தாவீதுக்கு விரோதமாக இரகசியமாகச் செயல்பட்டான். யோனத்தான் தனது தகப்பனின் செயலைக் கவனத்தில் கொள்ளாது தாவீதை பாதுகாத்தான். (1 சாமு 20:) யாழ்மீட்டிய வேளையில் சவுல் ஈட்டியைத் தாவீதை நோக்கி எறிந்தான். ஆனால் தாவீது அதிலிருந்து விலகினான்.

இறுதியாக தாவீது ஓடித் தப்பித்துக்கொள்ள வேண்டிய நிலை உருவாகியது. சவுலின் புகழ் படிப்படியாகக் குறைவடைந்தது. சவுலை கொலை செய்வதற்கான தருணங்கள் பல தாவீதுக்கு உருவாகின. ஆனாலும் தாவீது "ஆண்டவர் திருப் பொழிவு செய்த என் தலைவருக்கு எத்தீங்கும் செய்வது தவறு. ஆண்டவர் என்னைக் காப்பாற்றுவாராக!" எனக் கூறி சவுலை தாக்காதிருந்தான். மன்னிக்கும் மனப்பாங்குடன் தாவீது செயல்பட்டமை மிகவும் மதிக்கத்தக்கதாகும்.

செயற்பாடு

1. மக்கள் தலைவர்கள் என்ற வகையில் சவுல், தாவீது என்பவர்களது குணாதிசயங்களை ஒப்பிடுக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடம் 18.

# தாவீது அரசன் (ii)

திருமறைப் பகுதி: 2 சாமு., 1 குறிப்பேடு 28:1-2

இஸ்ரயேல் வரலாற்றில் தாவீதின் ஆட்சிக்காலமானது பொன்யுகமாகக் கருதப்படுகின்றது. இஸ்ரயேல் மக்கள் அரசனிடம் எதிர்பார்த்த அனைத்தையும் தாவீது நிறைவேற்றினான். பெலிஸ்திய போராட்டத்துக்காக மக்களை ஒன்றுபடுத்தினான். பலஸ்தீனாவின் தெற்குப்புறமாக ஏபோத்தில் மக்கள் ஒன்று சேர பழக்கப்பட்டிருந் தனர். (வரைபடத்தைப் பார்க்கவும்). யூத குலத்தைச் சேர்ந்த தாவீதுக்கும் அது பழக்கப்பட்ட மத்திய நிலையமாக இருந்தது. ஆனாலும் வடகுலத்தினரின் பூரண ஒத்துழைப்பைப் பெற்றிருந்த தாவீது வடக்குக்கு அண்மையில் அமைந்துள்ள நகரைத் தலைநகரமாக்கிக் கொண்டான். இதுவரையில் எபூசியருக்குச் சொந்தமான எருசலேமைப் பிடித்து அங்கு அவர்களது பலத்தை உறுதிப்படுத்திக் கொண்டான். அவர்கள் தாவீது அரசனுக்கு அரண்மனையைக் கட்டினார்கள். தீருவின் மன்னன் கேதுரு மரங் களையும், தச்சர்களையும் அனுப்பி வைத்தமையை 2 சாமு 5:11 இல் வாசித்தறியலாம்.

இவ்வாறாக தனது பலத்தை நிலைநிறுத்திக் கொண்ட தாவீது பெலிஸ்திய போராட்டத்தை முறியடித்தான். பெலிஸ்தியர் பலத்த தோல்வியை அடைந்தனர். ஆசாரியன் ஏலியின் காலத்தில் கைப்பற்றிய உடன்படிக்கைப் பேழையை ஊர்வலமாக எருசலே முக்குக் கொண்டு சென்றிருக்கலாம். அன்றைய தினம் தாவீது அரசன் அரச ஆடை ஆபரணங்களுடனும், நார்ப்பட்டால் நெய்யப்பட்ட ஏபோத்தையும் அணிந்து கொண்டு நடமாடிய வண்ணம் பேழைக்கு முன்னால் சென்றான். அவனது மனைவி அதற்கு எதிர்ப்புத் தெரிவித்தாள். தாவீது "ஆண்டவர் திருமுன் நான் ஆடினேன். இன்னும் ஆடுவேன். நான் என்னை இன்னும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடையவனாக்கிக் கொள்வேன். என் கண்முன் என்னைத் தாழ்த்திக் கொள்வேன்." (2 சாமு. 6:14-22) எனப் பதிலுரைத்தான். உடன்படிக் கைப் பேழையை எருசலேமில் வைத்தபின்னர் அது இஸ்ரயேலின் தலைநகரமாக மட்டுமல்ல, இறைவழிபாட்டின் மத்திய நிலையமாக வும் மாறியது. மக்களின் மதிப்பும், புகழும் தாவீதுக்குக் கிடைத்தன. இது புதுமைக்குரிய தொன்றல்ல. இஸ்ரயேல் ஐக்கிய அரசாக உருவாகியது.

தாவீது அரசனாகத் திருப்பொழிவு செய்யப்பட்டிருந்தாலும் மேய்பனுக்குரிய மனப்பான்மை அவனை விட்டு நீங்க வில்லை. அவன் அரசமாளிகை வாழ்க்கை முறைகளுக்கு ஏற்ப செயற்பட வில்லை. போரில் வெற்றி கொண்ட அரசன் தோல்வியடைந்த அரசனையும் ஏனையவர்களையும் கொலை செய்வது ஏற்றுக் கொண்ட சம்பிரதாயமாக இருந்தது. தாவீதின் பணியாளர்களும் அவ்வாறு செய்ய ஆயத்தமாகினார்கள். ஆனாலும் தாவீது "சவுலின் வீட்டாருக்காக கருணை காட்டுவதற்கு இன்னும் யாராவது இருக்கின்றனரா? என வினவினான். நண்பனான யோனத்தானின் மகன் மெபிபொசேத்து இருப்பதை அறிந்தான். அவன் இரு கால் களும் ஊனமுற்றவனாக இருந்ததான். தாவீது அவனை நோக்கி "அஞ்சாதே உன் தந்தை யோனத்தானின் பொருட்டு நான் உனக்கு கருணை காட்டுவது உறுதி. நீ எப்போதும் என்னுடன் உணவருந் துவாய்" (சாமு 9:7) என்றான். இவ்வாறாக அனுதாபத்துடன் செயல்பட்ட தாவீதில் ஆண்டவர் இயேசுவின் குணாதிசயங்கள் வெளிப்பட்டன.

மன்னிக்கும் மனப்பான்மை தாவீதுக்குள் இருந்தமையை ஏற்கனவே அறிந்து கொண்டோம். பிற்காலத்தில் தாவீதின் மகன் அப்சலோம் அவனுக்கு எதிராகச் செயல்படத் தொடங்கினான். தாவீது எருசலேமுக்குத் தப்பியோட முயன்றான். எனினும் இளைஞன் அப்சலோமின் மரணத்தைக் கேள்விப்பட்ட தாவீது அதிர்ச்சியுற்று அழுது புலம்பினான். (2 சாமு 18)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறாக மன்னிப்பு அளிப்பதற்குத் தூண்டப்பட்ட தாவீதிற்கு மன்னிப்பு தேவைப்பட்ட தருணங்களும் இருந்தன. தாவீதின் தவறுகளை 2 சாமு 11ஆம் 12ஆம் அதிகாரங்களில் வாசித்தறியலாம். அக்காலத்தில் அரசர்கள் பல பெண்களை விவாகம் செய்துகொள்ளும் வழக்கம் இருந்து. ஆனாலும் தாவீது பத்சேபாள் எனும் பெண்ணை விவாகம் செய்து கொண்டமைக் காக இறைவாக்கினர் நாத்தான் பலத்த கேள்வியை எழுப்பினார். பத்சேபாள் உரியாவின் அன்பு மனைவியாவாள். தாவீது அவனைத் தனது மனைவியாக்கிக்கொள்ள பல உபாயங்களை மேற்கொண் டான். போர் மிகக் கடுமையாக நடை பெற்றுக் கொண்டிருந்த இடத்தில் உரியாவை நிறுத்தி அவனுக்கு மரணத்தை ஏற்படுத்தி னான். திட்டமிட்ட இச் செயலின் பின்னர் அவன் பத்சேபாளை மறுமணம் செய்வதற்கு வழிவகுத்துக் கொண்டான். இறைவாக்கினன் நாத்தான், தாவீதின் தவறை எடுத்துரைத்தான். 2 சாமு 12:இல் குறிப்பிடப்பட்டுள்ள நாத்தான் கூறிய உண்மைக் கதையில் ஆட்டுக் குட்டியாக பத்சேபாளும், அதனைப் பறித்துச் சென்ற வழிப்போக்க னாக தாவீதையும் இறைவாக்கினன் ஒப்பிட்டுக் காட்டுகின்றான். மேய்ப்பன் தாவீதிற்கு இந்த எடுத்துக்காட்டு மிக பாரதூரமானதாக இருந்திருக்கும். தாவீது தனது தவறை கணப்பொழுதில் ஏற்றுக் கொண்டான். "நான் ஆண்டவருக்கு எதிராகப் பாவம் செய்து விட்டேன்" எனக் கூறினான். இதுவரை காலமும் மன்னிப்பு வழங்கிய தாவீதுக்கு மன்னிப்பைப் பெற்றுக்கொள்ள வேண்டிய நிலை உரு வாகியது.

காலம் செல்லச்செல்ல தாவீதினால் மேலும் பல தவறுகள் ஏற்பட்டதாக வேதாகமத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. அவ்வாறான வேளைகளில் அவன் மனம் வருந்தி இறைவனுடன் அவனது தொடர்பை நிலைநிறுத்தி பலப்படுத்திக்கொள்ள முயற்சித்தான். அவன் இறைவனிடத்தில் காட்டிய பக்தி, அன்பு என்பன அதனூடாக வெளிப்பட்டதை அறிந்து கொள்ளக்கூடியதாக இருக்கின்றது. தாவீது செய்த தவறின் நிமித்தமாக இஸ்ரயேலில் கொள்ளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நோய் பரவியது என்ற கருத்து நிலவி வந்தது. இதற்கு மாற்றுச் செயலாக எபூசியன் அரவுனாவின் களத்தை நோக்கி ஆண்டவருக்கு ஒரு பலிபீடம் கட்டச் சென்றான். அரசன் தாவீதின் வரவைக் கண்ட அரவுனா மகிழ்வுடன் காளைகளையும், ஏனைய பொருள்களையும் அரசனுக்கு இலவசமாக வழங்க முன் வந்தான். இதற்குத் தாவீது கூறிய பதில் பொன் எழுத்துக்களால் எழுதப்பட வேண்டியதொன்றாகும். "நான் இலவசமாகப் பெற்று என கடவுளாம் ஆண்டவருக்கு எரிபலி செலுத்த மாட்டேன்." (2 சாமு 24:24) என அரவுனாவுக்கு பதிலுரைத்தான்.

தாவீது போரடிக்கும் களத்தையும், காளையையும் ஐம்பது வெள்ளிக்காசுகளுக்கு வாங்கினான். அவன் அங்கு ஓர் பலிபீடம் கட்டி ஆண்டவருக்கு நல்லுறவுப் பலி செலுத்தினான்.

இறை வழிபாட்டுத்தளமாக எருசலேமில் ஆலயம் கட்டுவதற்கு முன்னேற்பாடுகள் செய்தான் என வேதாகமத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. (1 குறி 28:1-2) ஆனாலும் அதனைக் கட்டும் உரிமை மகன் சாலோமோனுக்கு உரியது என ஏற்றுக்கொண்டான். இறை வழிபாட்டை மேலும் மேற்படுத்துவதற்கு தாவீதின் பாடல்கள் உறுதுணையாக அமைந்தன.

தாவீது இறைவனிடம் காட்டிய அன்பும், பக்தியும் அவனது வாழ்வில் இறுதிவரை காணப்பட்டது. "என் முன்பாக உனது குடும்பமும் உனது அரசும் என்றும் உறுதியாயிருக்கும்! எனது அரியணை என்றுமே நிலைத்திருக்கும்!" என்ற வெளிப்பாட்டின் வார்த்தைகளை நாத்தான் தாவீதுக்கு எடுத்துரைத்தான். தாவீதின் வம்சத்தில் மீட்பர் ஒருவர் இஸ்ரயேலுக்கு விடுதலையைப் பெற்றுத் தருவார் என மக்கள் எதிர்பார்த்தனர். இறைவனால் திருப்பொழிவு செய்யப்பட்ட "மேசியா" தாவீதின் பரம்பரையில் உதித்த இயேசு என யூத கிறிஸ்தவர்கள் அறிந்துகொண்டனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செயற்பாடு

1. சவுலின் காலத்தில் இஸ்ரயேல் மக்களுக்குச் சொந்தமான பிரதேசங்கள், தாவீதின் காலத்தில் மேலும் விரிவு அடைந்த விதம் வரைபடத்தில் காட்டப்பட்டுள்ளது. அப் பிரதேசங்களை நிறந்தீட்டிக் காட்டவும்.

2. அ. தாவீதின் செயல்களினூடாக வெளிப்பட்ட இயேசுவின் குணாதிசயங்களைக் குறிப்பிடுக.

ஆ. அவைகள் வெளிப்பட்ட தருணங்கள் மூன்று குறிப்பிடுக.

இ. தாவீதின் காலம் "இஸ்ரயேலின் பொற்காலம்" என மக்கள் ஏற்றுக்கொண்டமைக்கான மூன்று காரணங்களைக் குறிப்பிடுக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாடம் 19.

## சாலமோன் அரசன்

திருமறைப் பகுதி 1 அரசர் 1 : 11 அதிகாரங்கள்

இஸ்ரயேல் மக்கள் தாவீது அரசனுக்குக் காட்டிய விருப்பை சாலமோனுக்கும் காட்ட விரும்பினர். ஆரம்பத்தில் சாலமோன் அரசன் இறைபற்றும் மக்கள்பற்றுமுள்ள ஆட்சியாளனாக செயல் பட்டு வந்தான்.


சாலமோன் அரசன் கனவில் இறைவனுடன் உரையாடியதை 1 அரசர் 3: 5-15 இல் குறிப்பிட்டபட்டுள்ளது. ஆண்டவர் அவனிடம் "உனக்கு என்ன வரம் வேண்டும் கேள்!" என்றார். நீடிய ஆயுள், செல்வம் போன்றவற்றைக் கேட்பவர்களே மக்கள் மத்தியில் வாழ்ந் தனர். ஆனால் சாலமோன், "உம் மக்களுக்கு நீதி வழங்கவும், நன்மை தீமை, பகுத்தறியவும் தேவையான ஞானம் நிறைந்த உள்ளத்தை அடியேனுக்குத் தந்தருளும்" எனக் கேட்டான். (1 அரசர் 3: 7 - 8) இறைவனால் தெரிந்து கொள்ளப்பட்ட மக்களை ஆட்சிபுரிதல் பொறுப்பு வாய்ந்தது என உணர்ந்தான். அதற்காக ஞானம் அவசியமாக இருந்தது. அரசன் என்பவன் அவனது மக்களின் சுமைகளைச் சுமந்து, ஆறுதல், அளிப்பவனாக இருத்தல் வேண்டும்.

சாலமோன் கிடைத்த ஞானத்தை மக்களின் எதிர்பார்ப்புக்கு ஏற்ப உபயோகிக்க எண்ணம் கொண்டான். (1 அரசர் 3 : 16 - 27 ஐ வாசியுங்கள்.) இக் கதை அதற்குக் சான்றாக அமைந்துள் ளது. ஒரே குழந்தைக்கு இரு தாய்மார் உரிமை கோருகின்றனர். அவர்களது வழக்கைக் கேட்கிறான். யூத சமுதாயத்தில் பெண்க ளுக்கு வழக்காடும் உரிமையில்லை. எனினும் சிக்கலான வழக் குக்கு ஞானமுள்ள தீர்ப்பை சாலமோன் வழங்கினான். சாலமோன் அரசனின் இரக்க சுபாவத்துக்கு இது எடுத்துக்காட்டாகும். அவனது




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புகழ் எல்லா திசைகளிலும் பரவியது. அவனை சந்தித்த சேபா நாட்டு அரசியின் வினாக்களுக்கு தகுந்த முறையில் விடையளித்தான். "உம்முடைய செயல்களையும், ஞானத்தையும் பற்றி என் நாட்டில் நான் கேள்விப்பட்டது உண்மையே எனத் தெரிகின்றது. நான் இங்கு வந்து அவற்றை நேரில் காணும்வரை அச் செய்திகளை நம்பவில்லை. இப்பொழுதோ இங்குள்ளவற்றுள் பாதியைக் கூட அவர்கள் எனக்குச் சொல்லவில்லையென அறிகிறேன். உண்மையில் நான் கேள்விப்பட்டதை விட, எம் ஞானமும், செல்வமும் மிகுதியாய் இருக்கின்றன" எனக் கூறினாள். (1 அரசர் 10: 6- 9)



அரசர்கள்

அரசர்கள்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாலமோன் அரசன் நிருவாகத்தை பலப்படுத்திக் கொள்வதற்கு எடுத்த உபாயங்கள் மக்களின் மனதைக் கவரவில்லை. இஸ்ரயேலானது அவர்களது பிராந்திய தலைவர்களின் கீழ் நிர்வகிக்கப்பட்டு வந்தது. ஆனாலும் சாலமோன் அரசன் அவற்றைத் தனக்குக் கீழ் கொண்டுவரத் தீர்மானித்தான். தனது செல்வாக்கைப் பலப்படுத்தினான். பிரதேச ஆளுநர்களுக்குப் பதிலாக நியமிக்கப்பட்ட பன்னிரு நிருவாகிகளும் அரசனுக்கு விளக்கம் சொல்ல வேண்டும். மாதமொருமுறை அரண்மனைக்கு கப்பம் கட்டுவதுடன் அரசனுக்குரிய உணவு வகைகளை வழங்குவதும் அவர்களின் கடமையாக அமைந்தது. அரண்மனை பராமரிப்பு மக்கள் மேல் சுமத்தப்பட்டது. (1 அரசர் 4: 22 - 23) யூப்பிரஸ் நதி தொடங்கி பெலிஸ்திய நாடு, எகிப்து நாட்டு எல்லை வரை அனைத்து நாடுகளும் அவனுக்குக் கப்பம் கட்டிவந்தன.

திருக்கோவில் என்னும் எருசலேம் தேவாலயத்தைக் கட்டுவதற்கு முன்வந்த சாலமோனுக்கு அயல் நாட்டு ஆளுநர்களின் ஒத்துழைப்பு கிடைத்தது. தாவீதின் வாழ் நாளெல்லாம் நண்பனாக இருந்த தீரு நாட்டு மன்னன் ஈராம், கேதுரு மரங்களை லெபனானிலிருந்து வழங்குவதாக உறுதியளித்தான். அதற்குப் பதிலாக அரசனின் வீட்டில் வாழ்பவர்களுக்கு உணவை வழங்குதல் அரசின் பொறுப்பாக மாறியது, இந்த பொறுப்பானது இஸ்ரயேல் மக்கள் மீது சுமத்தப்பட்ட பொறுப்பாகும். அதுமட்டுமல்ல, அனைத்து இஸ்ரயேலரும் லெபனானின் மரங்களை வெட்டுவதற்குப் பலவந்தமாக அனுப்பிவைக்கப்பட்டனர். மலையில் கற்பாறைகளை வெட்டி எடுத்தல், அவற்றை எருசலேமுக்குக் கொண்டுவருதல் போன்ற பணிகளில் மக்கள் ஈடுபடுத்தப்பட்டு துன்புறுத்தப்பட்டனர்.

எருசலேமில் கோவிலைக் கட்டி முடிக்க 7 ஆண்டுகள் சென்றன. (1 அரசர் 6: 38) மக்களின் சிரமத்தைப் போன்று, அதிக பணமும் விரயமாகியது. கப்பம் கட்டும் மக்களுக்கு ஆறுதல் கிடைக்க வில்லை. கோவிலின் அலங்காரமானது அனைவரது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனதையும் கவர்ந்தது. ஆலய அர்ப்பணிப்பு விழாவின் போது சாலமோன் அரசனின் வேண்டுதல் செபம் பற்றிய விபரம் 1 அரசர் 8 இல் குறிப்பிடப்பட்டுள்ளது. இருப்பினும் ஆலயத்தின் ஒளியுள்ள இறைவனுக்கு மகிமையா? அல்லது சாலமோன் புகழுக் கான தூண்டுதலா? என்பது வினாவுக்குரியதாகும்.

இருபது ஆண்டு காலவரைக்குள் கட்டடங்கள் பல கட்டிமுடிப் பதற்கு சமாதானம் அவசியமாக இருந்தது. முன்னர் தாவீது அரசன் தனது மகனுக்கு சமாதானம் எனும் அர்த்தமுள்ள சாலமோன் எனும் பெயரை சூட்டினான்.

இவ்வாறாக சமாதானம் முயற்சியைப் பலப்படுத்திக் கொள்வ தற்கும் மிகப் பெரிய அளவிலான சேனை அவசியாக இருந்தது. அரசின் செயல்களால் மக்கள் வெறுப்பு அடைந்திருந்தனர். (1 அரசர் 11:26) சாலமோனின் பணியாளர்களுள் ஒருவரான எரொபவாம் அரசனுக்கு எதிராக கிளர்ச்சி செய்தான். சாலமோன் அவனைக் கொலை செய்வதற்கு தேடியபொழுது எரோபவாம் எகிப்துக்குத் தப்பி ஓடினான். சாலமோனின் மரணத்துக்குப் பின்னரே அவன் மீண்டும் இஸ்ரயேலுக்கு திரும்பினான்.

சாலமோனின் ஆட்சியில் போர் நடை பெறாவிட்டாலும் மக்க ளால் உண்மையான சமாதானத்தை அனுபவிக்க முடியவில்லை. அரசன் சாலமோன் அயல் நாடுகளுடன் நட்புறவைக் கட்டியெழுப் பினான். அதன் மூலமாக நட்புறவை உறுதிப்படுதிக் கொள்ளும் வண்ணமாக அயல் நாட்டவர்களுடன் தொடர்பு கொண்டு அவர்க ளின் பெண்களை மணம் செய்தான். சமாதானத்தைப் பாதுகாத்துக் கொள்வதற்காக அவர்களுடைய தெய்வங்களை வணங்குவதற்கு இடமளித்தான். காலம் செல்லச் செல்ல சாலமோனும் அவர்களைப் பின்பற்றினான். அவர்களது தெய்வங்களை வணங்குவதற்கு முன் வந்தான். தகப்பன், தாவீதைப் போல இறைவனுக்கு முழு உள் ளத்துடன் பணி செய்ய வில்லை என்பது வேதாகம எழுத்தா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ளரின் கூற்றாகும். தாவீது அரசனுக்கு மக்கள் காட்டிய மதிப்பின் நிமித்தமாகவே மகனாகிய சாலமோனுக்கு எதிராக செயற்பட முன்வரவில்லை. ஆனாலும் சாலமோனின் அரச ஆட்சியின் இறுதிக் காலமானது இருள் உலகத்தின் ஆரம்பமாக அமைந்தது என்பது ஏற்றுக்கொள்ளக்கூடிய தொன்றாகும்.

செயற்பாடு

1. “ஆண்டவர் பற்றிய அச்சமே ஞானத்தின் தொடக்கம்” (தி.பா 111 : 10) இதிலிருந்து சாலமோன் அரசனின் ஆட்சி பற்றிய உமது கருத்துக்களை எழுதுக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாடம் 20.

# இஸ்ரயேல் நாடு இரண்டாகப் பிரிதல்

வேதாகமப் பகுதிகள் : 1 அரசர் 11:1-6: 11:29 - 39
12 : 1 - 15: 12 : 20 - 24

பிளவுபடாத ஒரே நாடான இஸ்ரயேலை தாவீது அரசன் ஆண்ட காலம் அதன் பொற்காலமாயமைந்ததென முன்னைய பாடத்தில் கற்றோம். அவரின் பின்னர் ஆட்சிபுரிந்த சாலமோன் அரசனும் அதன் ஒருமையைக் காத்தார். எனினும் சாலமோனின் பின்னர் இஸ்ரயேல் நாடு இரண்டாகப் பிளவுபட்டது.

இவ்வாறு இஸ்ரயேல் பிளவுபடுவதற்கான காரணங்கள் 400 ஆண்டுகளாகப் படிப்படியாக வளர்ந்து வந்தமையாகும் எனக் கூறப்படுகிறது. எனினும் சாலமோன் அரசனின் ஆட்சிமுறையும் அவரின் மகனான ரெகபெயாமின் போக்குமே பிளவுக்கு முக்கிய காரணமாயமைந்தன. சாலமோனின் செயல்திட்டங்களின் மூலம் மக்கள் வெறுப்படைந்தனர் என்பதைச் சென்ற பாடத்தில் கற்றுக் கொண்டோம். அவர் தனக்கென பிரமாண்டமான அரண்மனை யைக் கட்டி ஆடம்பர வாழ்க்கை நடத்துவதற்கென மக்களின்மேல் வரிச்சுமையை அதிகரித்தார். இதற்கென மக்களின் தொழிற் திறனையும் பலவந்தமாக அபகரித்தல் அவசியமாயிற்று. எனவே, இஸ்ரயேலின் வடபகுதியிலுள்ள குடிமக்களுக்கு தமது இல்லங்க ளையும் பயிர்ச்செய்கையையும் விட்டு தெற்கே எருசலேமிலும், தூர லெபனானிலும் மரம் வெட்டுதல், கற்கள் செதுக்குதல் போன்ற அடிமைப் பணிசெய்ய வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டமை அதிக துன்பத்தைக் கொடுத்தது. எரொபவாம் (யெரோபெயாம்) என்ற இஸ்ரயேலின் படைத்தலைவன் தனது அரசனாகிய சாலமோனுக்கு எதிராக எழும்பினான்: எனினும் அம்முயற்சி தோல்வியுற்றது. இஸ்ரயேலர் சாலமோனின் தகப்பனாகிய தாவீதில் வைத்திருந்த மரியாதையினிமித்தம் அவரை எதிர்க்க விரும்பவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விவிலிய நூலாசிரியரின் கருத்துப்படி, சாலமோன் செய்த பெரிய குற்றம், "தமக்கு இருமுறை காட்சியளித்திருந்த இஸ்ரயேலின் கடவுளாகிய ஆண்டவரிடமிருந்து அவர் இதயம் விலகிச் சென்றமை" ஆகும். (1 அரசர் 11: 9) அக்காலத்தில் இறைவாக்குரைக்கும் பணியில் ஈடுபட்டிருந்த அகியா என்னும் தீர்க்கன் எரொபவாமைச் சந்தித்து இறைசெய்தியை அவனுக்குக் கூறினான். (1 அரசர் 11:31) அகியா தனது புதுச் சால்வையைப் பன்னிரு துண்டுகளாய்க் கிழித்தார். அதில் பத்துத் துண்டுகளை எரொபவாமிடம் கொடுத்து "இதோ நான் சாலமோன் கையினின்று அரசைப் பறித்து, பத்துக் கலங்களை உனக்கு அளிக்கப்போகிறேன்" என்றான். அப்போது எரொபவாம் எருசலேமைவிட்டு எகிப்திற்குச் சென்று சாலமோனின் ஆட்சி முடிவுறும்வரை அங்கு காத்திருந்தான்.

சாலமோனின் மரணத்தின் பின்னர் அவரின் மகன் ரெகபெயாம் அரசனாக அபிஷேகம் பெறும்படி செக்கேம் என்னும் இடத்திற்குச் சென்றான். அவனை அரசனாக்கும்படி இஸ்ரயேல் மக்கள் அங்கு கூடியிருந்தனர். இத்தனை காலமாக எகிப்தில் ஒளித்திருந்த எரொபவாம் இஸ்ரயேலுக்குத் திரும்பி ரெகபெயாமிடம் ஒரு வேண்டுகோளை முன்வைத்தான். அதாவது "உம் தந்தை பளுவான நுகத்தை எங்கள் மேல் சுமத்தினார். இப்போது நீர் உம் தந்தை சுமத்திய கடும் வேலைகளைக் குறைத்து அவர் எங்கள் மேல் வைத்த பளுவான நுகத்தை எளிதாக்க வேண்டும். அப்படிச் செய்தால் நாங்கள் உமக்காகப் பணியாற்றுவோம்" என்பதாகும்.

இவ்வேண்டுகோளின் பின்னர் ரெகபெயாம் தன் தகப்பனுக்கு ஆலோசனை வழங்கிவந்தவர்களை நாடினான். அவர்கள் "இன்று இம்மக்களுக்கு நீ பணியாளனாகி அவர்களுக்குப் பணிந்து இனிய சொற்களில் பதிலளித்தால், அவர்கள் எந்நாளும் உனக்குப் பணியாளர்களாய் இருப்பார்கள்" என்று அலோசனை வழங்கினான். எனினும் ரெகபெயாம் அவர்களின் அறிவுரையை ஏற்கவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாறாக அவன் தன்னோடு வளர்ந்த சில வாலிபரின் ஆலோசனையை நாடினான். அவர்களோ தகப்பனாகிய சாலமோன் சுமத்திய பாரங்கள் மேலும் அதிகரிக்கும்படிக் கூறினான். அப்படியே அவன் இஸ்ரயேல் மக்களை நோக்கி, "என் தந்தை உங்களைச் சாட்டையால் அடித்தார். நானோ உங்களை முள் சாட்டையால் அடிப்பேன்" என்றான். இக்கடின வார்த்தைகளைக் கேட்ட மக்கள் அதிக குழப்பமடைந்தனர். மேலும், தாவீதுடன் எங்களுக்குப் பங்கில்லை என்று கூறிச் சென்றனர்.

**தென் இராச்சியக் கோத்திரங்கள் (குலங்கள்) :** யூதா, பென்யமீன் ஆகிய இரு கோத்திரங்கள் மட்டும் சாலமோனின் மகனாகிய ரெகபயாமை அரசனாக ஏற்றன. ஏனைய பத்துக் கோத்திரங்களும் எரொபவாமை அரசனாக ஏற்றன. தாவீது சாலமோன் அரசர்களின் காலத்தில் ஒன்றாயிருந்த இஸ்ரயேல் இரண்டாகப் பிரிந்தமை இஸ்ரயேலின் இருள் நிறைந்த காலத்தின் ஆரம்பமாயிற்று.

வடக்கிலே அமைந்த 10 கோத்திரங்கள் கொண்ட பகுதி இஸ்ரயேல் எனத் தொடர்ந்து அழைக்கப்பட்டது. தெற்கிலே அமைந்த இரண்டு கோத்திரங்கள் கொண்ட பகுதி யூதா தேசம் என்று அழைக்கப்பட்டது.

யூதாவின் புதிய அரசன் ரெகபெயாம் வடராச்சியமாகிய இஸ்ரயேலையும் தனக்குக் கீழே கொண்டுவரும்படியாக எடுத்த முயற்சிகள் பலனளிக்கவில்லை. இறைவாக்கினர் செமாயா அவனுக்குக் கொண்டு வந்த இறைசெய்தியும் இம்முயற்சியைக் கைவிடும்படிக் கூறிற்று. (1 அரசர் 12 : 21)

வடராச்சியத்தின் அரசனாக தான் நியமிக்கப்பட்டமை இறைச்சித்தமே என்று எரொபவாம் எண்ணியபோதிலும், அவன் இஸ்ரயேல் மக்களின் நல்லெண்ணத்தைப் பெறும்படியாக எடுத்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சில வழிமுறைகள் அவனையும் நாட்டு மக்களையும் இறைவனிடமிருந்து தூரச் செல்வதற்கு வழிகோலிற்று.

எருசலேம் தொடர்ந்து முக்கிய வழிபாட்டிடமாக இருந்தது. வடராச்சியமாகிய இஸ்ரயேலின் மக்கள் எருசலேமின் வழிபாட்டிற்காக செல்லும்போது திரும்பவும் தாவீதின் வீடாகிய யூதேயாவுக்குத் திரும்பி விடுவர் என்று எரோபவாம் பயந்து, இரு பொற் கன்றுக்குட்டிகளை உருவாக்கி, ஒன்றை வடக்கிலே பெத்தேல் என்னும் இடத்திலும், மற்றதைத் தென் எல்லைப்புறமாகிய தாண் என்ற இடத்திலும் நிறுவினான். (தரப்பட்டுள்ள வரைபடத்தில் இரு இடங்களையும் பார்க்கவும்) புதிய இஸ்ரயேல் நாட்டின் வட, தென் எல்லைகளைக் காத்த இவைதான் உங்களை எகிப்து தேசத்திலேயிருந்து வரச்செய்தன என்று கூறி அவன் மெய்யான இறைவனை நிராகரித்தான். (1 அரசர் 12 : 28) இச்செயல் இஸ்ரயேலில் அந்நிய தெய்வங்களை அறிமுகப்படுத்திற்று. அதே வேளையில் யூதாவின் அரசனாகிய ரெகபெயாம் வேறு தெய்வங்களை வணங்கும்படி மக்களை ஊக்குவித்தான்.

செயற்பாடு


1. பிரிந்துபோன இஸ்ரயேல், யூதா இராச்சியங்களைக் காட்டும் படத்தில் வட, தென் இராச்சியங்கள் என்று அழைக்கப்படும் இவற்றை வெவ்வேறு நிறந்தீட்டிக் காட்டவும்.

2. இஸ்ரயேல் நாடு இரண்டாகப் பிரிந்தமைக்கான காரணங்களைக் கூறவும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிளவுபட்ட இராச்சியம்



## பாடம் 21.

# இறைவாக்கினர் எலியா

1. அரசர் 17 : 1 - 23 18 : 18 - 29 19 : 1 - 21
2. அரசர் 2 : 1 - 14

முன்னைய பாடத்தில் எவ்வாறு இஸ்ரயேலின் அரசனும் யூதாவின் அரசனும் மெய்யான ஒரே இறைவனிடமிருந்து விலகிச் செல்வதற்கு முயன்றனர் என்பதைக் கண்டோம். பொற்கன்றுகளை மட்டுமல்லாது வேறு பாகால் தெய்வங்களையும் வணங்கும்படி அவர்கள் மக்களைத் தூண்டினர்.

படைப்பலத்தைக் கொண்டு வடராச்சியத்தை ஆண்ட அரசர் சிலை வணக்கத்திற்கு அடிமையாகினர். ஓம்ரி என்னும் அரசன் சமாரியாவைத் தன் தலைநகராக்கினான். அதனைச் சுற்றி பலமுள்ள கோட்டையையும் கட்டினான். ஓம்ரியின் குமாரனாகிய ஆகாப் தன் ஆட்சியை மேலும் பலப்படுத்தும்படி சீதோனின் ஆட்சியாளனின் மகளாகிய யேசபேலை (ஈசபேல்) மணந்தான். சாலமோன் அரசனைப் போன்று இவனும் தன் மனைவியின் செல்வாக்கினால் பாகால் வழிபாட்டில் ஈடுபட்டான். பாகால் வணக்கத்தில் சமாரியா முக்கிய இடத்தைப் பெற்றது. யேசபேலுடன் சீதோனிலிருந்து வந்த பாகால் தீர்க்கர் 450 பேர் அரச மாளிகையில் உணவருந்தினர். (1 அரசர் 18 : 19) இஸ்ரயேலின் இறைவனின் இறைவாக்கினரோ விரட்டியடிக்கப்பட்டனர். எனினும் அரண்மனையின் பிரதான பணிவிடைக்காரனான ஒபதியா இவ்விறை வாக்கினர்களைக் குகைகளில் ஒழித்து உணவு கொடுத்துக் காப்பாற்றினான். (1 அரசர் 18 : 14)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இஸ்ரயேல் மக்களுக்கு எவ்வித இறைவழிநடத்தலும் கிட்டாத இவ்வேளையில் வனாந்தரத்தில் ஒரு குரல் தொனித்தது. திஸ்பே கிராமத்தைச் சேர்ந்த எலியா என்பவர் கிலயாத் வனாந்தரத்தில் நடமாடினார். எலியாவும் மோசேயைப் போன்று வனாந்தரத்தில் இறை அழைப்பைப் பெற்றிருக்கலாம். இதனால் உந்தப்பட்ட எலியா ஆகாப் அரசனைச் சந்திக்கும்படி திடீரென புறப்பட்டுச் சென்றார்.

எலியா என்னும் பெயரின் கருத்து "யாவே என் கடவுளாயிருக் கிறார்" என்பதாகும். எலியா மெய்யான இறைவனின் சார்பில் (யாவே) அரசனிடம் பேசினார். திரும்பவும் தாம் இறைவார்த்தை களை எவ்வாறு ஏற்றான் என்று அறியோம். எனினும் 2 அரசர் 1:8ல் உள்ளபடி இடையில் வார்க்கச்சை அணிந்திருக்கும் இந்த மயிர் நிறைந்த (மயிர் ஆடை அணிந்த) மனிதன் (நாடோடி) யார்? என்று இழிவாகக் கேட்டிருக்கக் கூடும். எவ்வாறேனும் எலியா கூறிய இறைவாக்குப் படி பஞ்சம் தொடர்ந்து சில காலம் நீடித்தது. எனவே ஆகாப் எலியாவைக் கண்டுபிடிக்கும்படி, தன் பணிவிடைக் காரரை அனுப்பாத இடமோ தேசமோ இருக்காமலில்லை.

(1 அரசர் 18 : 10)

எலியா "கெரீத்" என்னும் ஊற்றண்டையில் வசித்து வந்தார். இஸ்ரயேலில் பஞ்சம் ஏற்பட்ட அந்நாட்களில் இறைவன் அவரை அற்புதமான வழியில் காகங்களின் மூலம் உணவு வழங்கி பராமரித்தார். அங்கிருந்து சீதோன் நாட்டிற்கு அவர் சென்றபோது சாரிபாத் என்ற கிராமத்தில் ஒரு விதவை மூலம் அவருக்கு உணவு வழங்கி உதவினார். (1 அரசர் 17 : 8 - 24) இறைவனின் இச்செயல் எலியாவை மேலும் பெலப்படுத்தியது. (வரை படத்தில் திஸ்பே, கெரீத் ஓடை, சாரிபாத், இஸ்ரயேல் யூதேயா எல்லைகள் என்பவற்றைப் பார்க்கவும்.)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பஞ்சம் மூன்று வருடங்களாக நீடித்தது. எலியா திரும்பவும் சமாரியா நோக்கிச் சென்றபோது அரசனின் பணியாளனான ஒபதியாவைச் சந்தித்தான். அரசனைச் சந்திக்கும்படி ஒபதியா மூலம் விடுக்கப்பட்ட வேண்டுகோளை எலியா ஏற்றான். அரசன் எலியாவைச் சந்திக்கும்படி வனாந்தரத்திற்குச் சென்றான். பஞ்சம் நீங்கவேண்டுமென அரசன் அதிகம் விரும்பினான். அப்போது எலியாவின் கட்டளையின்படி கர்மேல் மலைமீது பாகாலின் வாக்குரைப்போரும் மற்றும் முழு இஸ்ரயேலின் மக்களும் ஒன்று கூட்டப்பட்டனர். எலியா மக்கள் முன் சென்று, "எத்தனை நாள் இரு மனத்தோராய்த் தத்தளித்துக் கொண்டிருக்கப் போகிறீர்கள்? ஆண்டவர் தாம் கடவுளென்றால் அவரைப் பின்பற்றுங்கள்! பாகால்தான் என்றால் அவன் பின்னே செல்லுங்கள்!" என்று அறைகூவல் விடுத்தான். (1 அரசர் 18 : 21)

இஸ்ரயேலின் யெகோவாகிய இறைவனின் சார்பில் எலியா மட்டுமே பாகாலை எதிர்க்க முன் வந்தான் (1 அரசர் 18: 22) கர்மேல் மலையில் பலியிடும்படி முதலில் பாகாலின் தீர்க்கர் அழைக்கப்பட்டனர். அவர்கள் காலை தொடக்கம் பகல் வரை பாகாலின் பெயரைச் சொல்லி, "பாகாலே! பதில் தாரும்" என்று சத்தமிட்டனர். ஆனால் ஒன்றும் நடைபெறவில்லை. அவர்கள் அதிகமதிகமாய் சத்தமிட்டு, தங்களை ஈட்டிகளாலும் கத்திகளாலும் தாக்கிக் கொண்டனர். ஆனாலும் ஒன்றும் நடைபெறவில்லை.

பின்பு எலியா மக்கள் அனைவரையும் தம்மிடம் வரும்படி அழைத்து பலிபீடத்தைச் செப்பனிட்டார். 12 கோத்திரங்களை அடையாளப்படுத்த 12 கற்களால் பலிபீடத்தை அடைத்தார். 1 அரசர் 18: 30 - 37 எலியா கூறியபடி மக்கள் பலிக்கான ஆயத்தங்களைச் செய்தனர். பின்பு எலியா, "நீரே ஆண்டவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்றும் .................... இம்மக்கள் அறியும்படி எனக்குப் பதில் தாரும்" என்றும் செபித்தார். அப்பொழுது இறைவனிடமிருந்து நெருப்பு இறங்கி தகனபலியை எரித்துப் போட்டது. இதைக் கண்ட மக்கள் கூட்டத்தினர் முகங்குப்புற விழுந்து, "ஆண்டவரே கடவுள், ஆண்டவரே கடவுள்" என்றனர்.

அந்நாள் தொடக்கம் எலியா பிரபல்யமிக்க இறைவாக்கினரா னார். பலி ஏற்றுக்கொள்ளப்பட்டதோடு பஞ்சமும் நீங்கிற்று. (1 அரசர் 18: 41 - 46). எவ்வாறேனும் எலியா திரும்பவும் வனாந்தரம் செல்ல நிர்ப்பந்திக்கப்பட்டார். கர்மேல் மலை வெற்றியின் பின்னர் பாகாலின் தீர்க்கரைக் கொன்று போட்டபடியால் யேசபேல் அரசி எலியாவைக் கொல்வதற்கு வகைதேடியமையே இதற்கான காரணமாயிருந்தது. எலியா வடராச்சியத்திலுள்ள யெஸ்ரயேலுக்கு ஓடிப் போனார். இவ்வாறு அவர் சென்றது இறைவனின் கட்டளைப்படியல்ல. முன்னர் மோசே செய்த கொலையின் நிமித்தம் அவர் நாட்டை விட்டுச் செல்ல வேண்டியது போல் எலியா செய்த செயலினிமித்தம் அவர் தப்பியோடவேண்டியதாயிற்று.

மிகுந்த கவலைக்குள்ளான எலியா தன் சீவனை எடுத்துக் கொள்ளும்படி இறைவனை மன்றாடினார். எனினும் வானதூதன் ஒருவனை அனுப்பி இறைவன் எலியாவைப் போசித்தார். இவ்வாறு இதற்கு முன்னரும் இறையருளால் பராமரிக்கப்பட்டதை எலியா நினைவுகூர்ந்திருக்க வேண்டும். தூதனால் போசித்து பலப்படுத்தப் பட்ட எலியா எழுந்து 40 நாட்கள் இரவும் பகலுமாய் பிரயாணம் செய்து தெற்கிலே ஓரேப் மலையை அடைந்தார். இம்மலை சீனாய் மலை எனவும் அழைக்கப்பட்டது. இறைவன் மோசேக்கு இவ்விடத்திலே எரியும் முட்செடியின் மத்தியில் காட்சியளித்தமை எம் நினைவிற்கு வருகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓரேப் மலையில் ஒரு குகையில் எலியா தங்கினார். அங்கு அவர் இறைக்காட்சியை எதிர்ப்பார்த்திருந்திருக்க வேண்டும். முதலில் பர்வதங்களைப் பிளக்கும் பலத்த காற்று உண்டாயிற்று. அடுத்து பூமியதிர்ச்சியும் அக்கினியும் உண்டாகிற்று. ஆனால் அவற்றில் இறைவனின் பிரசன்னம் இருக்கவில்லை. பின்பு அமர்ந்த மெல்லிய சத்தமொன்றை எலியா கேட்டார். அப்போது தன் முகத்தைச் சால்வையால் போர்த்திக்கொண்டு குகைக்கு வெளியே வந்து நின்றார். அவர் கேட்டது இறைவனின் குரல் என உணர்ந்தார். இறைவன், " எலியா நீ இங்கே என்ன செய்கிறாய்?" என்றார். அக்கேள்வி எலியாவின் மனதைக் தொட்டிருக்க வேண்டும். அவர் திரும்பவும் சமாரியாவுக்குச் சென்று இறைவாக்குரைக்க அழைக்கப்பட்டார்.

சமாரியாவில் சில குறிப்பிட்ட பணிகளை அவர் செய்ய வேண்டியிருந்தது. அவற்றில் ஒன்று தனக்குப் பின் இறைவாக்குப் பணியைச் செய்ய எலிசா என்பவரை நியமித்தலாகும். இதனை அவர் துரிதமாகச் செயல்படுவத்துவதை அடுத்த பாடத்தில் காண்போம். எலிசா நியமிக்கப்பட்ட பின்னரும் சிறிது காலம் எலியா இறைபணியைத் தொடர்ந்து மேற்கொண்டார். திரும்பவும் பயமின்றி ஆகாப் அரசனின் அநியாயச் செயல்களுக்கெதிராகச் செயல்பட்டார். (1 அரசர் 21) நாபோத் என்பவனின் திராட்சத்தோட்டத்தை ஆகாப் பலவந்தமமாகச் சுவீகரித்ததை வன்மையாகக் கண்டித்தார்.

இறுதியில், எலிசா பார்த்துக்கொண்டிருக்கும் வேளையில் ஒரு சுழல் காற்றினால் எலியா விண்ணிற்கு எடுத்துக்கொள்ளப் பட்டார். இதன் அடிப்படையில் எலியா மரணத்தைக் காணாத ஒருவரென கருதப்படுகிறார். இதனாலேயே ஆண்டவர் இயேசு,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமுழுக்கு யோவான் போன்றோரின் துணிவைக் கண்ட மக்கள், இவர்களும் எலியாவோ என்று சந்தேகித்தனர்.

செயற்பாடு

1. "எலியா பிரபல்யமான இறைவாக்கினர் ஆவார்" என்ற தலைப்பில் கட்டுரை வரைக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாடம் 22.

# இறைவாக்கினர் எலிசா

எலிசாவை இறைவாக்கினராக நியமிக்கும்படி இறைவன் எலியாவுக்குக் கட்டளையிட்டிருந்ததை நாம் சென்ற பாடத்தில் கவனித்தோம். அதன் விளக்கத்தை இங்கு காண்போம்.

ஆபேல் மெகோலா என்ற கிராமத்தைச் சேர்ந்த சாபாற்று என்பவருக்குக் குமாரனாக எலிசா பிறந்தார். (1 அரசர் 19:19) எலியா அவரைச் சந்தித்த வேளையில் எலிசா பன்னிரு ஏர் பூட்டி வயல் உழுதுகொண்டிருந்தார். அப்போது எலியா எலிசாவின்மீது தன் சால்வையைப் (மேலாடையை) போட்டதன் மூலம் தம் நோக்கை வெளிப்படுத்தினார். எலிசா எதிர்பாராத ஒரு பிரதிசெயலை மேற் கொண்டார். தன் ஏர்மாடுகளை உணவிற்காகத் தம் ஊர் மக்களுக்குக் கொடுத்தார். ஏர்களை விறகாக உபயோகித்து இறைச்சியை சமைத்துக் கொடுத்ததன் மூலம் தான் இனி வேளாண்மையைவிட்டு முற்றிலுமாக இறைபணி செய்யப்போவதை எடுத்துக்காட்டினார்.

எலிசா தன் கிராமத்தையும் பெற்றோரையும் விட்டு எலியாவின் பின்னே செல்கிறார். மோசே கோலினால் அடித்து சிவந்த சமுத்திரத்தைப் பிரித்ததுபோல் எலியா தன் சால்வையால் யோர்தானைப் பிரித்ததை எலிசா காண்கிறார். எனவே எலிசா மிகப்பணிவுடன், "உம்மிடத்திலுள்ள ஆவியின் வரம் என்னிடத்தில் இரட்டிப்பாய் இருப்பதாக" என்றார். எலியா தன்னைவிட்டுப் பிரியும் நேரம் வருமென்பதை எலிசா உணர்ந்தார். எலியா அக்கினிரதத்தினால் எடுத்துக்கொள்ளப்பட்டபோது துக்கம் நிறைந்தவராய் எலிசா தன் ஆடையை இரண்டாகக் கிழித்துக்கொண்டார். அவ்வேளை எலியாவின் போர்வை விழவே அதனை எடுத்துக்கொண்டு, எலிசா தனது இடத்துக்குத் திரும்புவதற்காக யோர்தான் நதியருகே வந்து,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போர்வையால் யோர்தானை அடித்தார். அதன் நீர் பிரியவே இக்கரை சேர்ந்தார். இறைவனின் ஆவியானவர் எலியாவில் இருந்தது போலவே எலிசாவிலும் பிரசன்னமாயிருந்தார் என்பதை இது உணர்த்திற்று.



எலியா வனாந்தரத்தில் வாழ்ந்தவர். ஆனால் எலிசா மக்கள் மத்தியில் வாசம் பண்ணினார். எலியா தனியாக இறைபணியில் ஈடுபட்டார். எலிசாவோடு ஆரம்பத்தில் 50 பேரும், பின்னர் 100 பேரும் சேர்ந்த குழு கூடியிருந்தது. எடுத்துக்காட்டாக அவர் எரிகோ சென்ற வேளையில் குடிநீர் நச்சுத்தன்மையுள்ளதை அறிந்து அதனைத் திரும்பவும் நல்ல நீராக மாற்றினார். (2 அரசர் 2:19 - 22 ஐ வாசிக்கவும்.)

எலிசா அக்காலத்திலிருந்த ஏழை மக்கள் மீது விசேட கரிசனை கொண்டிருந்தார் என்பது தெளிவு. இறைவாக்கினர் குழுவில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருவரது மரணத்தின் பின் அவரது மனைவி படும் பாடுகளை அறிந்தார். 1 அரசர் 4:1-7 "உம் அடியவனாகிய என் கணவர் இறந்து விட்டார். அவர் ஆண்டவருக்கு அஞ்சி நடந்தவர் என்பது உமக்குத் தெரியும். அவருடைய கடன்காரர் என் இரு பிள்ளைகளையும் அடிமைகளாக எடுத்துக்கொள்ள வந்திருக்கின்றனர்" என்று கூறி எலிசாவின் உதவியை நாடினாள். இறையருளினால் எலிசா அற்புதமொன்றைச் செய்தார். அதில் விதவையின் பங்காக கலயத்தில் சிறிது எண்ணெய் பெற்றார். அயல் வீட்டுக்காரரின் வெற்றுப் பாத்திரங்களை இரவல் பெறும்படி பணித்தார். விதவையின் எண்ணெய் குடத்திலிருந்து எண்ணெய் சுரந்தது. அந்த எண்ணெயால் எல்லா குடங்களையும் நிரப்பும்படிக் கூறினார். எல்லா பாத்திரங்களும் நிரம்பும்வரை எண்ணெய் சுரந்தது. கிடைத்த எண்ணெயை விற்று கடனை அடைத்து, மிகுதியால் பிள்ளைகளைப் பராமரிக்கும்படி கூறினார். நாமும் இறையருளால் நன்மையான செயல்களைச் செய்ய முன்வரும்படி இறைவன் அழைக்கிறார்.

எலிசாவின் குணமளிக்கும் பணி இஸ்ரயேலர் அல்லாதோருக்கும் கிடைத்தது. இரு உதாரணங்கள் சான்றாகத் தரப்படுகின்றன.

1. எலிசா சூனேம் என்ற இடத்திற்குச் சென்றிருந்தபோது, அங்கு அவருக்கு எப்போதும் உணவும் தங்குமிடமும் கொடுக்கும் ஒரு பெண்ணுக்கு இறையருளால் உதவி செய்ய விரும்பினார். (2 அரசர் 4: 8-37) அவருக்கு பிள்ளைபேறு இல்லாத படியால் அப்போது கிடைக்குமென்று கூறினார். "அடுத்த ஆண்டு இதே பருவத்தில் உனக்கும் ஒரு மகன் பிறந்திருப்பான்" என்றார். ஆரம்பத்தில் அப்பெண் இதனை நம்பாவிட்டாலும் உரிய காலத்தில் மகன் பிறந்தான். ஆனால் சிறிது காலத்தின் பின் அவன் மரித்தபோது, அப்பெண் எலிசாவைத் தேடிச்சென்றாள். எலிசா அவள் வீட்டிற்குச் சென்று, பிள்ளையின் மேல் படுத்து சூடுவரச்செய்து உயிர்ப்பித்தான். இதற்கு முன்னர் இறைவாக்கினர் எலியாவும் இதனையொத்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அற்புதமென்றைச் செய்திருந்தார். (1 அரசர் 17: 8-24 ஐப் பார்க்கவும்)

2. சீரிய நாட்டு அரசனின் தளபதியாகிய நாமான் (நாகமான்) தொழு நோயால் பீடிக்கப்பட்டிருந்தபோது எலிசா அவனைக் குணப்படுத்தியதை முன்னைய வகுப்பில் கற்றுள்ளோம். அச்சமயத்தில் இஸ்ரயேல் சிரியாவோடு யுத்தத்தில் ஈடுபட்டிருந்தது. அவ்வாறான காலகட்டத்தில் எலிசா பிற இனத்தைச் சேர்ந்தவரைக் குணப்படுத்துவது மிகச்சிறந்த செயலாக அமைந்திருந்தது.

எலிசா அடிக்கடி தனது அனுபவத்தின் அடிப்படையில் தமது சீடருக்குக் கற்பித்தார். ஒரு நாள் அவர் தனது இறைவாக்கினர் குழுவோடு கில்காள் என்ற இடத்துக்குச் சென்றிருந்தார் (2 அரசர் 4: 38-44). அப்போது அங்கு பஞ்சம் நிலவியது. குழுவினர் உணவு கிடைக்காது, இனி என்னத்தை உண்போம் என்று கவலைகொண்டிருந்தபோது தனது உதவியாளை நோக்கி, "நீ பெரிய பானையை எடுத்து, அதில் இறைவாக்கினர் குழுவினர்க்கு கூழ் காய்ச்சு" என்றார். எனினும் பானையில் சமைப்பதற்கு ஒன்றுமிருக்கவில்லை. ஒருவன் மட்டும் வெளியில் சென்று பேய்க்கொம்மட்டிக் காய்களைப் பறித்து வந்து பானையில் போட்டான். அதைப் பரிமாறியபோது, பானையில் விஷம் இருக்கிறது என்று மக்கள் சத்தமிட்டனர். எலியா அவ்வேளையில் மாவைப் போட்டு சனங்களைச் சாப்பிடச் சொன்னார். விஷம் அற்றுப்போயிற்று. அதன் பின்பு பாகால் சாலியாவைச் சேர்ந்த ஒரு மனிதன், புதுத்தானியத்தில் (முதற்பலன்) செய்யப்பட்ட 20 வாற்கோதுமை அப்பங்களைக் கொண்டு வந்தான். எலிசா தன் பணியாளிடம் அவற்றை இறைவாக்கினர் மத்தியில் பகிர்ந்து கொடுக்கும்படிக் கூறினான். "இந்த நூறு பேருக்கு இதை எப்படிப் பரிமாறுவேன்" என்றான் அந்த மனிதன். அப்போது எலிசா, "இவற்றை இம்மக்களுக்கும் உண்ணக் கொடு. ஏனெனில் உண்ட பின்னும் மீதி இருக்கும்" என்றார். அவ்வாறே அவர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உணவருந்திய பின் மீதிப்பட்டது.

இக்கதையை நாம் வாசிக்கும் போது ஆண்டவர் இயேசு 5000 பேருக்கு உணவு வழங்கிய நிகழ்வு நினைவிற்கு வருகிறது. இறைவல்லமையை மக்கள் அனுபவிக்கும்போது, அதில் மக்களின் பங்களிப்பும் இருப்பது சிறப்பாகின்றது.

இவ்வண்ணமாக எலிசா தனது குருவான எலியாவின் சிறந்த சீடனாக வாழ்ந்து இறைபருளையும், இறை பாதுகாப்பையும் மக்கள் பெறும்படி அவர்களை வழிநடத்தினார். அத்தோடு இறைவன் எலியாவிற்கு ஒப்புவித்திருந்த இரு காரியங்களை எலிசா நிறை வேற்றுவதையும் நாம் காண்கிறோம். அவை சீரியாவின் அரசனாக ஆசபேலை (ஆசாயேல்) நியமித்தல், இஸ்ரயேலில் திருப்பொழிவு செய்தல் என்பவையாகும்.

இவ்வாறாக இறைபணியாளர்கள் ஒற்றுமையாகச் செயல்படல் இறைவனின் வழிநடத்தலாகும் என்பதை நாம் உணரக்கூடியதா யுள்ளது.

செயற்பாடு

1. எலிசா விதவைப் பெண்ணுக்கு உதவிசெய்தமையைக் கலந்துரையாடுக.

2. எலிசா கில்காலில் செய்த அற்புதத்தை நாடகமாக எழுதவும்.

3. நாமான் (நாகமான்) யோர்தான் நதியில் குளிக்கும் காட்சியை வரையவும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடம் 23.

# இறைவாக்கினர் ஆமோஸ்

வேதாகமப் பகுதி- ஆமோஸ் 2: 6-7 3:1-3 5: 13-27
6: 4-7 7:7-9 8: 1-6

இறைவாக்கினர் ஆமோஸ் பலஸ்தீனாவின் தென்பகுதியிலே உள்ள யூதா தேசத்தின் தெக்கோவா என்னும் கிராமத்தில் வாழ்ந் தார். (வரைபடத்திலே தெக்கோவா இருக்கும் இடத்தைக் கவனிக்க வும்.) அவர் மேய்ப்பனாகவும் அத்தி பயிரிடுபவராகவும் இருந்தார்.

வடக்கில் இஸ்ரயேல் இராச்சியம் ஆமோசின் காலத்தில் பொருளாதாரத்தில் வளர்ச்சியடைந்திருந்தது. எனினும் மக்களுக்கு வேண்டிய ஆறுதலை இவ்வளர்ச்சி கொடுக்க இயலாதிருந்தது. நாட்டில் செல்வந்தர்கள் ஏழைமக்களை அடக்கி ஒடுக்கி அவர்களின் சொத்துக்களைப் பறித்துத் துன்பப்படுத்தினர். நீதித்துறை முதல் செல்வந்தர்களின் பணத்தால் ஆளப்பட்டு ஏழைமக்களுக்கெதிராக அநியாயத் தீர்ப்பு வழங்கப்பட்டன.

ஆமோஸ் ஆட்டுமயிர் விற்பனை செய்வதற்காக இடையிடை யே வடராச்சியத்தின் தலைநகரான சமாரியா, மற்றும் பெத்தேல், கில்கால் போன்ற இடங்களுக்குச் சென்றுவந்தார். எனவே அங்கு நடைபெற்ற அநியாயங்களைப் பற்றி அறிந்திருந்தார். கள்ளத்தராசு பாவித்தல் எங்கும் காணப்பட்டது. அருந்துவதற்குத் தகாத உணவுப் பொருட்கள் விற்கப்பட்டன. கடனை அடைக்கமுடியாத ஏழைமக் களை ஒரு சோடிச் செருப்பின் விலைக்கு அடிமைகளாக வாங்கினர்.

வலியோரை வாழ்த்தி எளியோரை வாட்டும் அநீதியும் பொய் மையும் நிறைந்த சமுதாயத்தைக் கண்டு சீறுகிறார் ஆமோஸ்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதன் மத்தியில் எழுந்த தியானங்களுக்கூடாக இறைவாக்குரைக் கும் பணிக்கு ஆமோஸ் அழைக்கப்பட்டார். ஆமோஸ் தமது அழைப்பைப் பின்வருமாறு விபரிக்கின்றார். "சிங்கம் கர்ச்சனை செய்கிறது. அஞ்சி நடுங்காதவர் எவர்? தலைவராகிய ஆண்டவர் பேசியிருக்க, இறைவாக்கு உரைக்காதவர் எவர்?"

(ஆமோஸ் 3:8)

ஆமோஸ் வடராச்சியம் சென்ற பொழுது அங்கு மக்களின் மத்தியில் உரையாற்றினார். அவர் முதலில் அனைத்து மக்களும் எதிர்நோக்க வேண்டிய இறைவனின் நியாயத்தீர்ப்பைப் பற்றிப் பேசினார். அடுத்ததாக இஸ்ரவேல் மக்களின் மத்தியில் நடக்கும் அநியாயங்களைக் கண்டித்தார். ஏழை எளியவர்களுக்கு ஏற்படும் துன்பங்களை எடுத்துக்காட்டுவதில் அதிக சிரத்தை கொண்டார் ஆமோஸ்.

2: 7-8 ல் "ஏழைகளின் தலைகளை மண்ணில் புழுதிபட மிதிக்கின்றார்கள். ஒடுங்கப்பட்டோரின் நெறியைக் கெடுக்கின் றார்கள்............... கடன்காரரிடமிருந்து பறித்த ஆடைகளை விரித்துப்போட்டு எல்லாப் பலிபீடங்களின் முன்பும் கடந்து கொண்டு அபராதம் விதித்துக் கிடைத்த மதுவினைத் தங்களின் கடவுளின் இல்லத்தில் குடிக்கிறார்கள்" என்று கூறுகிறார்.

ஏழைமக்களின் தேவைகளைப் பற்றி எண்ணாது செல்வச் செருக்கிலே மிதந்தவர்களை வன்மையாகக் கண்டித்தார். பஞ்சணைகள் மீதும் மெத்தைகள் மீதும் சாய்ந்து இன்புறும் இஸ்ரயேல் மக்களுக்கு வரும் அழிவு பெரிதாயிருக்கும் என்றார்.


இவர்களின் எதிரிகள் ராச்சியத்தை வளைத்து மதில்களை இடித்து அரண்மனைகளைச் சூறையாடுவர். இதுவே இறைவனிட மிருந்து இவர்களுக்குக் கிடைக்கும் தண்டனை என்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இஸ்ரயேலுக்கு ஏற்படப்போகும் அழிவைப்பற்றி ஆமோஸ் பல தரிசனங்களை எடுத்துரைத்தார். (ஆமோஸ் 7)

1. முதலாவது தரிசனத்தில், தேசமெங்கும் வெட்டுக்கிளிகள் பெருகி புல் முழுவதையும் தின்று போடுவதைப் போல் கண்டார். அப்போது ஆமோஸ் இறைவனிடம் உமது மக்கள் எவ்வாறு உயிர்வாழ்வார்களென வினவினான். இறைவன் இரக்கப்பட்டு அப்படி நடக்காது என்றார்.



2. இரண்டாவதாக, அக்கினி எழும்பி பூமியின் நீர் ஆழியைப் பட்சித்தது போல் கண்டார். அவ்வேளையில் ஆமோஸ் இறைவனிடம் வேண்டிக்கொண்டபடியால் அத்தரிசனமும் நடக்காது என்று கூறினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



3. மூன்றாவதாக, ஆமோஸ் தரிசனத்தில் தூக்குநூலைப் பிடித்து மதிலின்மேல் ஆண்டவர் நிற்பதைக் கண்டார். இதனால் மக்கள் மத்தியில் இருந்த குறைகளையும், நெளிவுகளையும் எடுத்துக்காட்டக் கூடியதாயிருந்தது. "இம்முறையோ இறைவன் இனி அவர்களை மன்னிக்கமாட்டேன்" என்றார்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. நான்காவதாக, ஆமோஸ் பழுத்த பழங்களுள்ள கூடையைக் காண்கிறார். அதன் மூலம் "இஸ்ரயேலின் முடிவு காலம் வந்துவிட்டது" என்பதை எடுத்துக்காட்டினார்.



ஆமோஸ் காலத்தில் இஸ்ரயேல் மக்கள் சமய காரியங்களில் பங்கு கொள்ள அதிகம் விரும்பினார்கள். எனினும், இறைவனின் முன்பாக நீதியான செயல்களில் ஈடுபடத் தவறினர். இது தொடர்பாக இறைவனின் வார்த்தைகளை ஆமோஸ் பின்வருமாறு மக்களுக்கு அறிவித்தார்.

"உங்கள் திருவிழாக்களை நான் வெறுத்து அருவருக்கிறேன்... என் முன்னிலையில் நீங்கள் இரைச்சலிட்டுப் பாடும் பாடல்களை நிறுத்துங்கள். உங்கள் வீணைகளின் ஓசையை நான் கேட்க மாட்டேன். மாறாக, நீதி வெள்ளமெனப் பொங்கி வருக! நேர்மை வற்றாத ஆறாகப் பாய்ந்து வருக!" (ஆமோஸ் 5: 21-24)

ஆமோஸ் இவ்வாறு கடுமையான இறை வார்த்தைகளைக் கூறியமை குறித்து பெத்தேலின் பரிசுத்த ஸ்தலத்திற்குப் பொறுப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாகவிருந்த அமத்சியா என்பவன் தன் எதிர்ப்பைத் தெரிவித்தான். "பெத்தேலில் இனி தீர்க்கதரிசனம் சொல்லாதே. அது ராஜாவின் பரிசுத்த ஸ்தலமும் ராச்சியத்தின் அரண்மனையுமாயிருக்கின்றது. நீ யூதா தேசத்திற்கு ஓடிப்போ, அங்கே இறைவாக்கினைக் கூறு" என்று ஆமோசை விரட்டினான். ஆமோஸ் தைரியமாக, தான் தீர்க்கதரிசியல்ல வென்றாலும், இறைவனின் சத்தத்திற்குச் செவி சாய்த்து செயல்படுவதாக இடித்துக் கூறினார்.

இதன் பின்பு ஆமோஸ் வடராச்சியத்தில் இறைவாக்குரைத் தாரா என்று தெரியவில்லை. இரண்டு வருடங்களுக்குள் பூமியதிர்ச்சி ஏற்பட்டது. ஆமோசின் வாக்கு நிறைவேறுவதை மக்கள் உணர்ந்தனர். (ஆமோஸ் 1:1). ஆமோஸின் வாக்கு இஸ்ரயேல் மக்களை மனந்திரும்புவதற்கு அழைப்பதற்காகவே உரைக்கப் பட்டது.

வடராச்சியத்திலிருந்து விரட்டப்பட்டபின் அவர் தமது வார்த்தைகளுக்கு எழுத்துவடிவம் கொடுத்தார்.அன்றைய மக்கள் அவருக்குச் செவிசாய்க்காவிடினும் பின்னர் வரும் சந்ததியினர் தமது எச்சரிக்கையை ஏற்றுக்கொள்வர் என்று நம்பினார். அவரின் செய்தி எமது இன்றைய சமுதாயத்திற்கு மிகப் பொருந்தும் என்பதில் ஐயமில்லை.

செயற்பாடு

1. ஆமோஸ் கண்ட தரிசனங்களின் கருத்துக்களை எழுதவும்.
2. இறைவனின் நீதிச்செயல்களுக்கு எதிராக இஸ்ரயேல் மக்கள் செய்த அநீதியான செயல்களின் பட்டியல் ஒன்றைத் தயாரிக்கவும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடம் 24.

# இறைவாக்கினர் ஓசேயா

ஓசேயா 4: 1-3, 6 : 11

இறைவனின் மக்கள் அவரைவிட்டுத் தூரமாக விலகிச்சென்ற சமயங்களில் அவர்களை எச்சரித்து மனந்திரும்ப வைப்பதற்காக இறைவனால் வடராச்சியத்திலிருந்து தெரிந்துகொள்ளப் பட்ட இன்னொரு இறைவாக்கினர் ஓசேயா ஆவார். ஓசேயா என்பதன் கருத்து "யாவே இரட்சித்தார்" என்பதாகும். வடராச்சியத்தில் நடைபெற்ற பாவச்செயல்களைக் கண்ணுற்ற ஓசேயா மனங்கலங் கினார்.

இவர் ஒரு விவசாயியாகத் தமது வாழ்வை ஆரம்பித்தார். இறைவனிடம் இருந்து முதலில் இவர் பெற்ற செய்தி ஒரு திரு மணத்தை ஓசேயா செய்துகொள்ள வேண்டும் என்பதாகும். அதன் படி ஓசேயா கோமேர் என்னும் பெண்ணைத் திருமணம் செய்து கொண்டார். அவர்களுக்குப் பிறந்த மூன்று பிள்ளைகளுக்கும் இறைவன் கொடுத்த பெயர்களின் மூலம் இறைவன் இஸ்ரயேல் மக்களுக்குக் கொடுக்கவிரும்பிய செய்தி வெளிப்பட்டது. எடுத்துக் காட்டாக, "லோகம்மீ" என்ற குமாரனின் பெயரின் கருத்து "நீங்கள் என் மக்களல்ல" என்பதாகும். அவரின் திருமண உறவின் மூலமாக இறைவனுக்கும் இஸ்ரயேல் மக்களுக்குமிடையேயிருந்த உறவின் தன்மையை ஓசேயா அறிந்துகொள்ளக் கூடியதாயிருந்தது.

ஓசேயா கோமேரை விவாகம் செய்தபோது மகிழ்ச்சியான குடும்பவாழ்க்கை நடத்தியிருப்பினும் சிலகாலம் சென்றபின் அவள் ஓசேயாவைவிட்டு சென்று விபச்சாரத்தில் ஈடுபட்டாள். இந்த அனுபவம் ஓசேயாவிற்கு அதிக வேதனையைக் கொடுத்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இஸ்ரயேல் மக்கள் இறைவனைவிட்டு வேறுதெய்வங்களுக்கு தூபம் காட்டியபோதும், ஆண்டவருக்கு எவ்வளவு துக்கமாயிருந் திருக்குமென்பதை தனது சொந்த குடும்பம், ஓசேயாவிற்கு ஏற்படுத்திய போதனையின் மூலமாகப் புரிந்துகொள்ளக் கூடியதாக விருந்தது.

இக்காலகட்டத்தில் இஸ்ரயேலரின் மத்தியில் பொய்பேசுதல், களவு, கொலை, பாலியல் குற்றங்கள், இரத்தம் சிந்துதல் போன்ற வற்றைவிட அவர்கள் மத்தியில் எந்தவொரு நன்மையான செயலும் காணப்படவில்லை. இத் தீயசெயல்கள் மக்களை இறைவனிட மிருந்து தூரமாகச் செல்வதற்கு உதவியாயிருந்தன என்று ஓசேயா புரிந்துகொண்டார்.

தனது மனைவி விபச்சாரப் பெண்ணாயிருந்தாலும் அவருக்கு மன்னிப்பு வழங்கி வீட்டுக்குத் திரும்ப அழைத்து வந்து அவளை அடிமை நிலையிலிருந்து விடுவித்தமை அவளின்மேல் கொண்டிருந்த அன்பினாலேயாகும். இவ்வாறு பாவத்தினால் ஓசேயா இறைவனைப் பற்றி புதிய புரிந்துணர்வை ஏற்படுத்திக்கொண்டார்.

"இஸ்ரயேல் குழந்தையாய் இருந்தபோது அவன்மேல் அன்பு கூர்ந்தேன். எகிப்திலிருந்து என் மகனை அழைத்து வந்தேன். எப்பிராயீமே! நான் உன்னை எப்படி கைவிடுவேன்" (ஓசேயா 11: 1,8 பார்க்கவும்) என்று கடவுள் இஸ்ரயேல் மக்களைப் பற்றிக் கூறியதை ஓசேயா நன்கு புரிந்து கொண்டார். இஸ்ரயேல் மக்கள் சோரம்போனபோது கடவுள் அவர்களை மன்னித்து மனந்திரும்பும்படி அழைத்து, அவர்களைத் தம்மிடம் திரும்பி வரச்செய்யும் முறை இங்கு நன்கு தெளிவாகிறது. சீனாய் உடன்படிக்கையைத் திருமண உறவோடு ஓசேயா ஒப்பிடுகிறார். இதன் அடிப்படையில் இஸ்ரயேல் மக்களைக் கடவுளிடம் திரும்பும்படி அழைக்கிறார். "வாருங்கள் நாம் ஆண்டவரிடம் திரும்புவோம். நம்மைக் காயப்படுத்தியவர் அவரேயாவார் அவரே நம்மைக் குணமாக்குவார்.... நாம் அறிவடை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வோமாக. ஆண்டவரைப் பற்றி அறிய முனைந்திடுவோம்." (ஓசேயா 6: 1-3) என்று அவர் கூறி இறைவனை அறிந்து கொள்ளும்படி அழைக்கிறார்.

கடவுள் இரக்கம் நிறைந்த மன்னிக்கும் சுபாவமுள்ள ஒருவரென ஓசேயா இறைவாக்கினர் தமது அனுபவத்தில் கண்டார். அதனையே இஸ்ரயேலுக்கு முன்னாக வைத்தார். கடவுள் எதிர்பார்ப்பது பலிகளையல்ல, இரக்கத்தையேயாகும். தகனபலிகளுக்கு மேலாக இறைவனை அறிந்து அவர் பணி செய்வதேயாகும்.

இஸ்ரயேலின் அநீதியான பாவச் செயல்களை மாற்றி இறைவனிடத்தில் அவர்களைத் திரும்பவும் கொண்டுவருவதற்காகவே ஓசேயா அழைக்கப்பட்டார். இரக்கமுள்ள இறைவன் அவர்கள் திரும்பவும் தம்மிடம் வரும்வரை காத்திருக்கிறார் என்று கூறுகிறார்.

இச்செய்தி இன்றைய கிறிஸ்தவர்களாகிய எமக்கு அதிமுக்கியமாகின்றது. நாம் பாவம் செய்யும் போதெல்லாம் இறைவன் துக்கப்படுகிறார். மனந்திரும்புபவர்களை அவர் திரும்பவும் அன்போடு ஏற்கிறார் என்பதை உணர வேண்டும்.

செயற்பாடு

1. ஓசேயாவின் குடும்ப அனுபவத்திற்கும், அவர் இறைவனைப் பற்றி பெற்றுக் கொண்ட அறிவிற்குமிடையே உள்ள தொடர்புகளை ஆராயவும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடம் 25.

# இறைவாக்கினர் எசாயா

எசாயா 6: 1-16; 1: 10-20 9:1-9

கி. மு. 8ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் எருசலேமில் வாழ்ந்த எசாயா இறைவனால் தெரிந்தெடுக்கப்பட்டு இறைவாக் குரைப்பதற்காக யூத மக்களிடம் அனுப்பப்பட்டார். எசாயா என்பதன் கருத்து "யாவே விடுவிக்கிறார்" என்பதாகும்.

எசாயா ஆமோத் என்பவரின் குமாரன் ஆவார். இறைவாக்கின ராகிய அவர் திருமணம் செய்தவராயிருந்தார். உயர்குடும்பத்தில் பிறந்த அவருக்கு இரு பிள்ளைகள் இருந்தனர். அரசர்களுக்கும் அறிவுரை வழங்கும் திறமை அவருக்கிருந்தது. எசாயாவின் காலத்தில் அரசாண்ட உசியா மன்னன் இறந்தபோது எசாயா இவ்வளவு காலமும் கொண்டிருந்த அரசியல் எதிர்பார்ப்புகளும் நம்பிக்கைகளும் அழிந்து போயின. இதனால் அவர் மனங்கலங்கிய நிலைக்குள்ளானர். அவ்வேளையில் அவருக்கு இறைவனின் அழைப்பு கிட்டியது.

தேவாலயத்தில் எசாயா ஒரு தரிசனம் கண்டார். இறைவன் உயரமும் உன்னதமுமான சிங்காசனத்தில் வீற்றிருக்கக் கண்டார். ஆண்டவரின் வஸ்திரத்தில் தொங்கலால் ஆலயம் முழுவதும் நிறைந்திருந்தது. சேராபீன்கள் அங்குமிங்குமாகப் பிரிந்து சென்று ஒருவரையொருவர் நோக்கி, "படைகளின் ஆண்டவர் தூயவர் தூயவர் தூயவர். மண்ணுலகம் முழுவதும் அவருடைய மாட்சியால் நிறைந்துள்ளது" எனப் போற்றினர். அப்போது இறைவனின் மகிமையையும் பரிசுத்த புனிதத் தன்மையையும் கண்ட எசாயா, "தான் அசுத்த உதடுகளுள்ள மக்கள் மத்தியில் வசிக்கிறேன்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என உணர்ந்தார். அப்போது சேராபீன்களில் ஒருவன் பலிபீடத்திலிருந்து ஒரு நெருப்புத் தழலை எடுத்து, பறந்துசென்று, எசாயாவின் வாயைத் தொட்டான். இதன் மூலம் எசாயா பாவமன்னிப்பைப் பெற்றுக்கொள்வதை அறிகின்றோம். அதே நேரத்தில் இறைவனின் தொனி அவனுக்குக் கேட்கிறது. "யாரை நான் அனுப்புவேன்?" என்ற இறைவனின் கேள்விக்குப் பதிலாக, "இதோ அடியேன் இருக்கிறேன். என்னை அனுப்பும்" என்றார்.

இறைசெய்தியை இஸ்ரயேல் மக்களுக்குக் கூறுவதில் எசாயா குறிப்பாக அவர்களின் பாவசுபாவத்தைப்பற்றிப் பேசினார். இவரும் ஆமோசைப்போல், மனந்திரும்புதல் இல்லாத பலி ஆண்டவர் விரும்பும் பலியல்ல என்றார். "இனி வீண் காணிக்கைகளைக் கொண்டு வரவேண்டாம்" (எசாயா 1:13) என்ற கடவுளின் வார்த்தைகளை மக்களுக்குக் கூறினார். எனவேதான் எசாயா இஸ்ரவேல் மக்களை நோக்கி," உங்களைக் கழுவித் தூய்மைப் படுத்துங்கள். உங்கள் தீச்செயலை என் திருமுன்னிருந்து அகற்றுங்கள், தீமை செய்தலை விட்டொழியுங்கள், நன்மை செய்யக் கற்றுக் கொள்ளுங்கள். நீதியை நாடித் தேடுங்கள், ஒடுக்கப் பட்டோருக்கு உதவி செய்யுங்கள், திக்கற்றோருக்கு நீதி வழங்குங்கள், கைம்பெண்ணுக்காக வழக்காடுங்கள்." எனக் கூறினார். (எசாயா 1:16-17) எசாயா வின் முக்கிய நோக்கம் இறைவனின் பரிசுத்தத்தை மக்களுக்கு வெளிப்படுத்தி, மக்களும் அவரைப் போல் தூய்மையாகவேண்டும் என்பதேயாகும்.

இறைவன் தம் மக்கள் எவ்வாறு தனக்குச் செவிசாய்க்காது போனார்கள் என்பதை எசாயாவுக்கு எடுத்துக்காட்டினார். மனந்திரும்பாத மக்கள் வரப்போகும் இறைவனின் நியாயத்தீர்ப்புக்கு ஆளாவர் என எசாயா அறிந்தார். எனவேதான் அவர் 40 வருட காலமாகத் தம் மக்களை மனந்திரும்பவைக்கும் பணியில் ஈடுபட்டார். உங்கள் தேசம் ஒரு நாளில் அழிந்தொழிந்து போகும். ஆனாலும் மனஸ்தாபப்படும் ஒரு "சிறு குழுவினரின்" உதவியுடன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறைவன் இஸ்ரயேலில் ஒரு புத்தெழுச்சியை உண்டாக்குவார் என்ற நம்பிக்கையை எசாயா அவர்கள் மத்தியில் கட்டியெழுப் பினார். இஸ்ரயேலை அவர், "திராட்சைத் தோட்டத்திலுள்ள குச்சுக்கும்", "வெள்ளரித் தோட்டதிலுள்ள குடிசைக்கும்" ஒப்பிட்டார். இவ்வாறு "மீந்திருந்த பகுதியிலிருந்து இஸ்ரயேலின் புதுயுகம் பிறக்கும்" என்று காண்பித்தார்.

எசாயா இறைவனின் அழைப்பைப் பெற்றபின்னர் இஸ்ர யேலில் அரசியல் நிலையை அவர் இறைவனின் கண்களுக் கூடாகவே நோக்கினார் என்பது தெளிவு.

அதனால் அரசர்களுக்கு எசாயா அளித்த அறிவுரைகளை அவர்கள் ஏற்பதில் தயக்கம் காட்டினர். ஆகாஸ் அரசன் எசாயாவின் எச்சரிக்கையைத் தள்ளிவிட்டபடியால் தென்ராச்சியம் அசிரியர்களின் தாக்குதலுக்குட்பட்டது. அரசர்களும், எல்லாக் குடி மக்களும் தமது வார்த்தைகளுக்குச் செவிசாய்க்க வில்லையென்று அறிந்து கொண்ட எசாயா, தமது பணியைச் செய்துமுடிப்பதற்காக ஒரு சீடர் கூட்டத்தைத் தெரிந்து கொண்டார். இச்சீடர்களின் பணி, மக்கள் மத்தியில் மறைந்திருக்கும் இறைவனின் செய்தியைப் பாதுகாத்தலாகும். மேலும் தாம் கூறிய இறைவார்த்தைகளை எழுத்துவடிவாக்கினார். இன்று எம் கையிலுள்ள எசாயாவின் நூல் எமக்குக் கிடைத்திருக்கும் பெரும் ஈவாகும். ஏனெனில் வரப்போகும் மேசியாவைப் பற்றி அவர் இதில் வெளிப்படுத்தியுள்ளார். "ஒரு குழந்தை எமக்குப் பிறந்துள்ளார். ஓர் ஆண் மகவு நமக்குத் தரப்பட்டுள்ளார். ஆட்சிப் பொறுப்பு அவர் தோள் மேல் இருக்கும். அவர் திருப்பெயரோ வியத்தகு ஆலோசகர், வலிமை மிகு இறை வன், என்றுமுள்ள தந்தை, அமைதியின் அரசர் (சமாதானப் பிரபு) என்று அழைக்கப்படும்" (எசாயா 9:6)

எதிர்காலம் எவ்வளவு இருள் சூழ்ந்ததாகத் தோன்றினாலும் இறைவன் தம் மக்களைக் கைவிடமாட்டாரென்றும், அவரின் ஒளி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனைவருக்கும் கிடைக்கும் என்றும் எசாயா கூறுகிறார்.

எசாயாவின் துணிவை மனாசே அரசனால் ஏற்றுக்கொள்வது சிரமமாக இருந்தது. தன்னுடைய சீடர்களோடு ஒழித்துக்கொண்டிருந்த எசாயாவை இறுதியில் மனாசே கொன்றுபோட்டார் என்று எபிரேய பாரம்பரியக் கதைகள் கூறுகின்றன. இறைவனின் செய்தியை அறிவித்த இறைவாக்கினர்களுக்கு அடிக்கடி இவ்வாறான துன்பங்கள் ஏற்பட்டன.

செயற்பாடு

1. திருவிவிலியத்தில் நாம் காணும் எசாயாவின் அழைப்பின் நிகழ்வை உமது சொந்த மொழிநடையில் எழுதவும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடம் 26.

# இறைவாக்கினர் மீக்கா

மீக்கா 4: 1-14 1:1-7 3: 1-12 4: 6-13 7: 8-10

எசாயாவைப்போன்று மீக்காவும் இறைக்காட்சியின் (தரிசனம்) மூலம் இறைவாக்குரைக்கும் பணிக்கு அழைக்கப்பட்டார். இருவரும் ஒரே காலத்தில் தென்ராச்சியத்தில் வாசம் பண்ணினார்கள். மோர சேத் ஊரைப் பிறப்பிடமாகக் கொண்டவர். அவர் மக்களின் மத்தியில் ஒன்றாக வாசம் பண்ணினார் என்பது அவருடைய நூலை வாசிப்பவர்களுக்குத் தெளிவாகிறது.

மீக்கா என்பதன் கருத்து "யாவேயைப் போன்று வேறு எவரும் உளரா?" என்பதாகும். இறைவனுக்குச் செவி சாய்க்காத படியால், அன்றைய சமுதாயத்திற்கும் எருசலேமிற்கும் நடக்கப் போகும் விபத்தைப்பற்றி பின்வருமாறு கூறுகிறார். "நெருப்பின் முன் வைக்கப்பட்ட மெழுகு போலவும், பள்ளத்தாக்கில் பாய்ந் தோடும் வெள்ளம் போலவும், அவர் காலடியில் மலைகள் உருகிப் போகும்; பள்ளத்தாக்குகள் பிளந்துபோகும். யாக்கோபின் குற்றத்தை முன்னிட்டும் அது படர்ந்து விட்டது. என் மக்களின் வாயிலாம் எருசலேமையும் வந்து எட்டியுள்ளது."

(மீக்கா 1: 4-9)

கிராம மக்கள் படும் பாடுகளை நன்கு அறிந்திருந்த மீக்கா நாட்டில் நிலவிய அநியாயங்களைப்பற்றி பின்வருமாறு கூறுகிறார். "இரத்தப் பழியால் சீயோனையும், அநீதியினால் எருசலேமையும் கட்டியெழுப்புகின்றார்கள். அதன் குருக்கள் கூலிக்காகப் போதிக்கிறார்கள். இறைவாக்கினர் பணத்திற்காக முன்னுரைக்கின்றனர்." இவ்வாறு இவர் உயர்வு தாழ்வு பாராது கண்டித்தார். அநியாயங் களின் நிமித்தம் வரப்போகும் ஆபத்தையும் எடுத்துக் கூறினார். சீயோன் வயல்வெளி போல் உழப்படும் எருசலேம் பாழடைந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மண்மேடாக மாறும், தேவாலயமிருக்கும் மலையோ காடாகும்" என்றார்.

பாவத்தில் வாழும் மக்களுக்கெதிராக குற்றஞ்சுமத்தும் அதேவேளையில், சமாதானம் பற்றி அழகானதொரு தரிசனத்தை மக்கள் முன்பாக வைத்து அவர்களை நீதியான வாழ்க்கைக்கு அழைக்கிறார். யுத்தமில்லாத ஒரு யுகத்தையும் எதிர்நோக்கியவராக அவர் கூறும் வார்த்தைகளாவன, "புறப்படுங்கள், ஆண்டவரின் மலைக்குச் செல்வோம்..... நாமும் அவர் நெறிகளில் நடப்போம்...... அவரே பல மக்களினங்களுக்கு இடையே உள்ள வழக்குகளைத் தீர்த்துவைப்பார்..... நீதி வழங்குவார்......... அவர்களோ தங்கள் வாள்களைக் கலப்பைக் கொழுக்களாகவும், தங்கள் ஈட்டிகளைக் கருக்கரிவாள்களாகவும் அடித்துக் கொள்வார்கள். ஓர் இனத்திற்கு எதிராக மற்றோர் இனம் வாள் எடுக்காது" என்றார். (மீக்கா 4:2,3)



இவ்வாறான சமாதானச் சூழல் ஏற்பட்ட காலத்தில் "சலோம்" என்ற சொல்லால் பொதுவாக அழைக்கப்பட்ட சமாதானமும் விடுதலையும் பற்றி மீக்கா பின்வருமாறு கூறினார், "அவர்கள் ஒவ்வொருவரும் தம் திராட்சைத் தோட்டத்தின் நடுவிலும், அத்திமரத்தின் அடியிலும் அமர்ந்திருப்பர்" - (4:4).



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறான புதுயுகத்தைத் தோன்றப்பண்ணுவதற்காக மக்களின் ஒத்துழைப்பைக் கடவுள் தேடுகிறார் என்று மீக்கா தெளிவாக எடுத்துரைத்தார். (6:8) “ஓ மானிடா, நல்லது எதுவென அவர் உனக்குக் காட்டியிருக்கிறாரே! நேர்மையைக் கடைப்பிடித் தலையும், இரக்கம் கொள்வதில் நாட்டத்தையும், உன் கடவுளுக்கு முன்பாக தாழ்ச்சியோடு நடந்துகொள்வதையும் தவிர வேறு எதை ஆண்டவர் உங்களிடம் கேட்கிறார்.”

ஆமோஸ், எசாயா என்போரைப் போன்று மீக்காவும் பலி செலுத்துவதைப் பார்க்கிலும் நியாயம் செய்தல் மேலானது என்று விளக்கினார். மக்கள் இறைவனிடம் திரும்பியதும் அவர் அம்மக்களைப் பாதுகாப்பார் என்று மீக்கா கூறினார். அப்போது இருளில் இருக்கும் மக்கள் இறைவனின் ஒளியைக் காண்பார்கள்.

மக்களின் மத்தியில் நம்பிக்கையைக் கட்டியெழுப்ப வேண்டும் என்பதற்காக வேறு தீர்க்கதரிசிகளைப் போன்றே மீக்காவும் இறைக்கட்டளைகளுக்கு அடிபணிந்தார். இவரும் இஸ்ரவேலின் மீதியானோர்” பற்றித் தீர்க்கதரிசனம் உரைத்தார். சமாதானத்தின் நம்பிக்கையை அவர்கள் மத்தியில் நிலைப்படுத்தினார்.

செயற்பாடு

1. அவர்கள் வாள்களைக் கலப்பைகளாகவும், ஈட்டிகளை அரிவாள்களாகவும் அடித்துக்கொள்வார்கள். இதில் காணப்படும் சமாதானம் பற்றிய கருத்துக்களைத் தொகுத்து ஒரு கட்டுரை எழுதவும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாடம் 27.

# இறைவாக்கினர் எரேமியா

எரேமியா 1:1-10 7:1-13 7:14-15 17:1-11 31: 1-6

இறைவாக்கினர் எரேமியா தென்ராச்சியமாகிய யூதா தேசத்தைச் சேர்ந்தவர். இவர் எருசலேமிற்கு அண்மையிலுள்ள ஆனதோத் என்னும் ஊரில் பிறந்தார். தகப்பனின் பெயர் இல்க்கியா. இவர் ஆசாரிய குடும்பத்தைச் சேர்ந்தவர். மனாசே அரசனின் காலத்தில் எசாயா இறைவாக்கினர் கொல்லப்பட்டதினால் வெகு காலமாக இறைவாக்குப் பணி ஓய்ந்திருந்த காலத்தின் பின் எரேமியா இளவயதிலே இப்பணிக்கு அழைக்கப்பட்டார்.

"தாய் வயிற்றில் உன்னை நான் உருவாக்கு முன்பே அறிந்திருந்தேன். நீ பிறக்கு முன்பே உன்னைத் திருநிலைப் படுத்தினேன். மக்கள் இனங்களுக்கு இறைவாக்கினனாக உன்னை ஏற்படுத்தினேன்." இளவயதிலேயே அழைக்கப்பட்டதனால் எரேமியா தனக்கு முறையாகப் பேசுவதற்குத் தெரியாதெனத் தயங்கினார். எனினும் இறைவன் அவனோடு இருந்து உதவுவதாகக் கூறி அவரைப் பெலப்படுத்தினார். ஆண்டவர் தனது கையை நீட்டி அவரின் வாயைத் தொட்டு, "இதோ என் வார்த்தைகளை உன் வாயில் வைக்கிறேன்"என்று கூறினார். இவரின் அழைப்பு பாபிலோனியர் எருசலேமையும் யூதாவையும் சிறைப்பிடிப்பதற்கு முன்பு நடந்தது. பின்னர் இறைவன் எரேமியாவிற்கு 2 தரிசனங்களைக் கொடுத்தார்.

1. **வாதுமை மரக்கிளை :-** இது காலத்திற்கு முன்னரே தோன்றிய துளிர்களைக் கொண்டிருந்தது என சில மொழிபெயர்ப்புகள் கூறுகின்றன. இதன் கருத்து, இறைவன் உரிய காலத்திற்கு முன்னரே நியாயத்தீர்ப்புச் செய்யும்படி வருவார் என்பதாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. வடக்கேயிருந்து (தெற்குநோக்கி) பொங்கி வடிகிற பானை இதிலிருந்து எருசலேமின் அழிவு வடதிசையின் எதிரியிட மிருந்து வருகிறது என்பதாகும்.

மேலும் தேவாலயத்தின் வழிபாட்டிற்குச் செல்வோரை எச்சரிக் கும்படி இறைவன் எரேமியாவைப் பணித்தார். தேவாலயத்தில் ஏமாற்றுதலின் வார்த்தைகளைப் பேசாமலும், அந்நிய தெய்வங்க ளுக்கு வழிபாடு செய்யாமலும், திக்கற்றவர்களுக்கும் விதவை களுக்கும் தீங்கு செய்யாமலும் இருக்கும் பொருட்டு எச்சரித்தார். தேவாலயம் கள்ளர்களின் குகையல்லவென்று கூறினார். அத்தோடு சீலோவுக்கு நடந்தது போலவே தேவாலயத்திற்கும் அவர் கொடுத்த தேசத்திற்கும் செய்வேன் என்று இறைவன் எச்சரிப்பின் வார்த்தை களை எரேமியாவின் மூலம் கூறினார். (எரேமியா 7ம் அதிகாரத்தை வாசிக்கவும்.)

நீதியைச் செய்து சத்தியத்தை நாடிய இறைவாக்கினரான எரேமியாவும் தமது மக்கள் மனந்திரும்பவேண்டும் என்பதையே தமது பணியின் நோக்காகக் கொண்டார். எல்லாரும் அவரவர் தீச்செயலின் பொருட்டே சாவர். புளித்த திராட்சைப் பழம் தின்பவ னுக்குத்தான் பல் கூசும்" (31:30) என்று தனிப்பட்டோரின் பொறுப்பை விளக்கினார். ஒவ்வொரு தனிமனிதரும் நாட்டின் சீர்கேட்டிற்குப் பதில் கூற வேண்டியுள்ளார்கள் என்றார். இதனால் கடுமையாக விமர்சிக்கப்பட்ட எரேமியாவை அவரது இனத்தவரும் குடும்பத்த வரும் கிராமத்தவரும் கூட ஏற்க மறுத்தனர். இவற்றினால் மனம் தளர்ந்து போகாதவண்ணம் இறைவன் எரேமியாவுக்குக் குய வனைப் பற்றிய தரிசனத்தை அளித்தார்.

ஒரு குயவன் வனைந்து கொண்டிருக்கும் மட்பாண்டம் உருக்குலைந்து போகவும் புதிய பாத்திரமாக அதனை வனைவ தைக் கண்டான். அதன் மூலம், இறைவன் தம் மக்களை மாற்றி திரும்பவும் கட்டியெழுப்புகிறார் என்ற செய்தி கொடுக்கப்படுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதன் பின்னர் ஒரு சமயத்தில் மட்பாண்டம் ஒன்றை நொறுக்கி, செப்பனிடப்படக்கூடாத முறையில் அக்கலசம் உடைந்தது போல் இஸ்ரயேலின் மக்கள் நிச்சயமாக உடைக்கப்படுவர். அவர்கள் தப்புவதில்லை என்ற செய்தியை விளக்கினார். (எரேமியா 19:11) பாபிலோனியரின் யூதாவைச் சரணடையுமாறு கூறினார். எனவே இவரைத் தேசத் துரோகியென மக்கள் அழைத்தனர்.

கடவுள் எரேமியாவுக்குக் கூறியதுபோல் பாபிலோனியர் யூதா தேசத்தை ஆக்கிரமித்தனர். அவ்வேளையில் எரேமியர் கூறிய செய்தி உண்மையென மக்கள் அறிந்தனர். யூதாமக்கள் சிறைக் கைதிகளாக பாபிலோனியாவில் சிறைவாசத்திற்குக் கொண்டு போகப்பட்டதை எரேமியா கண்டார்.

செயற்பாடு

1. எரேமியா எவ்வாறு தம் அழைப்பைப் பெற்றார் என்பதை விளக்கி எழுதவும். அவர் கூறிய செய்தி என்ன?

2. குயவனின் தரிசனம் இன்றைய கிறிஸ்தவர்களாகிய எமக்கு எவ்வாறு உதவுகிறது?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடம் 28.

# இறைவாக்கினர் எசேக்கியேல்

எசேக்கியேல் 3: 1-14 36: 11-14 6: 11-14 14: 12-16 11:14-20

எசேக்கியேல் பூசி என்னும் ஆசாரியனின் புதல்வனாவார். எனவே நாட்டின் முக்கிய குடிமக்களில் இவரும் ஒருவராவார் கி. மு. 597 ல் யூதாவின் முற்றுகையின்போது யோயாக்கீன் அரசனோடு சேர்ந்து யூதாவின் பிரபுக்கள், போர்வீரர், சிற்பிகள் என்போர் சிறைக்கைதிகளாக பாபிலோனியாவுக்கு கொண்டுசெல்லப்பட்டனர். இவர்களோடு சென்ற எசேக்கியேலும் தனது மனைவியோடுகூட கேபார் நதிக்கரையிலுள்ள பாபிலோனியாவின் அபீபி நகரத்தில் குடியிருந்தார்.

ஆசாரியர் குடும்பத்தைச் சேர்ந்த எசேக்கியேலும் ஆசாரியனா வதற்கே நியமிக்கப்பட்டிருந்தது. இதே அழைப்பு இவரைச் சிறைவாசத்தின் போதும் மக்களுக்கு மேய்ப்பனாகப் பணிபுரியும் பொருட்டு உற்சாகப் படுத்தியிருக்கலாம்.

எவ்வாறேனும் இவர் பாபிலோனியாவிலிருக்கும் போது இறைவாக்கினராகவே கடவுளால் அழைக்கப்பட்டார். அவர் தன்னைக் கடவுளின் தரிசனங்களைப் பெற்று அவற்றை மக்களுக்கு விளக்குபவராகவே கருதினார். எருசலேமிற்கும் தேவாலயத்திற்கும் வெகுதூரத்திலே தற்போது பாபிலோனியாவில் குடியிருந்த மக்கள் இறைவன் தமது சிறையிருப்பின் வாழ்விலிருந்தும் வெகு தூரத்திலேயே உள்ளார் என்று எண்ணினார்கள். எசேக்கியேல், யூதமக்கள் யூதாவைவிட்டு தூர பாபிலோனியாவிலே இருப்பினும், இறைவன் அங்கேயும் அவர்களோடு கூட இருக்கிறார் என்று முக்கிய தரிசனக் காட்சியின் மூலம் அவர்களுக்கு விளக்கினார். எசேக்கியேல், எங்கும் செல்லக்கூடிய சக்கரத்தினைக் கண்டார். அது ஆவியானவர் போகவேண்டுமென்றிருந்த எவ்விடத்துக்கும் சென்றது என்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்டார். எங்கும் வதியும் இறைவன் இங்கு பாபிலோனியாவிலும் கூட இருக்கிறார் என்ற செய்தியை இக்காட்சிக்கூடாக எசேக்கியேல் கொடுக்கக்கூடியாயிருந்தது.

எசேக்கியேல் வேறொரு முக்கிய தரிசனத்தைக் கண்டார். அதாவது, இறைவன் ஒரு ஏட்டுச்சுருளைக் கொடுத்து அதை உண்ணும் படி எசேக்கியேலைக் கேட்டார். "அது என் வாய்க்குத் தேனைப்போல் தித்திப்பாயிருந்தது" என்று எசேக்கியேல் கூறினார். எனினும் அவர் மக்களுக்குக் கூறவேண்டிய செய்தி சகிக்கமுடியாத துன்பமான செய்தியாக இருந்தது. எருசலேம் முற்றிலும் அழிக்கப் படும் என்பதே அச்செய்தியாகும். (எசே 6:11-14 வாசிக்கவும்) ஆரம்பத்தில் எருசலேமிலிருந்து பணிபுரிந்த எரேமியாவைப் போன்று, எசேக்கியேலும், மக்கள் தமக்கு வரும் தண்டனையை ஏற்பதைவிட வேறுவழியில்லை என்று அவர்களுக்கு அறிவுறுத்தினார். மக்கள் தம் பாவச் செயல்களைவிட்டு இறைவனிடத்தில் திரும்ப வேண்டு மென்பதே இச்செய்தியின் நோக்கமாகும்.

மக்களைப் பெலப்படுத்துவது இவரின் முக்கிய செயலாயிருந் தது. எனவே அவர் தான் கண்ட காட்சியை இறைச் சான்றாகக் கொண்டு இறைசெய்தியை முன்வைத்தார். "நான் உங்களை மக்க ளினங்களிடையே இருந்து கூட்டிச் சேர்த்து, நீங்கள் சிதறுண்டி ருக்கும் நாடுகளினின்று உங்களைச் சேர்த்து இஸ்ரயேல் நாட்டை உங்களுக்குத் தருவேன்." (11:17) என்று இறைவன் கூறுவதாக அறிவித்தார். இதனைக் காட்டும் அழகான காட்சியையும் அவர் விளக்கினார். உலர்ந்த எலும்புகள் நிறைந்த பள்ளத்தாக்கிலே எசேக்கியேலை நோக்கி, "மனுபுத்திரனே இந்த எலும்புகள் உயிர டையுமா?" அதற்கு மாறுத்தரமாக, "தேவரீர் அதை அறிவீர்" என்றார் எசேக்கியேல். அவ்வேளையிலே அங்கிருந்த எலும்புகள் உயிர்பெற் றமைபற்றி எசேக்கியேல் குறிப்பிடுகிறார். (37ம் அதிகாரத்தை வாசிக்கவும்) இக்காட்சியின் மூலம் மக்களின் நம்பிக்கையை அவர் வளர்க்கக்கூடியவராயிருந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மற்றைய இறைவாக்கினர்களைப் போலவே இஸ்ரயேல் தேசத்தை பிளவுபட்ட தேசமாக எசேக்கியேல் நோக்கக் கூடாதவராயிருந்தார். இதை விளக்கும்படி அவர் வேறொரு காட்சியை முன்வைத்தார். யூதாவை அடையாளப்படுத்தும் ஒரு கோலையும் இஸ்ரயேலை அடையாளப்படுத்தும் இன்னொரு கோலையும் இணைத்து அவை இரண்டும் ஒன்றாகும் என்றார். (37:16,17)

முழு இஸ்ரயேலையும் ஒன்றாக இணைக்கும்படியாக, "என் ஊழியன் தாவீது அவர்களுக்கு அரசனாய் இருப்பான். அவர்கள் அனைவருக்கும் ஒரே ஆயன் இருப்பான்" என்று கூறி இறைவனின் வாக்கை மக்களுக்கு ஞாபகமூட்டி அவர்களின் மத்தியில் ஒரு புதிய நம்பிக்கையை உருவாக்கினார். மக்களோடு ஒரு சமாதான உடன்பாட்டை ஏற்படுத்த இறைவன் காத்திருக்கிறார் என்று கூறினார். அது ஒரு "நித்திய உடன் படிக்கையாயிருக்கும்" (37:26). இந்த உடன்படிக்கை சமாதானத்தின் தூதுவனாகிய ஆண்டவர் இயேசுவில் நிறைவேறிற்றென்பது கிறிஸ்தவர்களின் நம்பிக்கையாகும். ஆண்டவரை "நல்ல மேய்ப்பன்" என்று எசேக்கியேல் அறிமுகப்படுத்தியபடியே இயேசுவும் இதே வார்த்தைகளைத் தமது பணிபற்றி விளக்க உபயோகித்தார்.

இவ்வாறாக சிறையிருப்பில் இருந்த எசேக்கியேல், எரேமியா போன்ற இறைவாக்கினர்கள் மக்கள் திரும்பவும் தம் சொந்த தேசத்திற்குச் செல்ல வாய்ப்புண்டு என்று கூறி அவர்களைத் தைரியப்படுத்தினான்.

செயற்பாடு

1. பாபிலோனியாவில் சிறைவாசமிருந்த யூதமக்களை நம்பிக்கையுள்ள மக்களாக்கி உற்சாகப்படுத்துவதற்கு எசேக்கியேல் எடுத்த முயற்சிகள் யாவை?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடம் 29.

# பாபிலோனியச் சிறையிருப்பு

2 அரசர் 21-25 ம் அதிகாரங்கள், புலம்பல் நூல், தி. பா. 137

ஆமோஸ், ஓசேயா, எசாயா என்னும் இறைவாக்கினர்கள் எட்டாம் நூற்றாண்டு தொடங்கியே இஸ்ரயேல் மக்களை எச்சரித்து வந்தனர். என்றாலும் அவர்கள் அதற்குச் செவிகொடுத்தனரா? அவர்களின் அநியாயச் செயல்களின் பெறுபேறாக பாபிலோனியாவுக்குச் சிறைக்கைதிகளாகக் கொண்டு செல்லப்பட்டனர் என்று முன்னைய பாடங்களில் கற்றோம்.

கி.மு. 596ல் யூதா தேசம் பாபிலோனின் நேபுகாத்நேச்சர் என்னும் அரசனால் முற்றுகையிடப்பட்டு யூதாவைச் சேர்ந்த செதேக்கியா என்பவர் யூதாவின் அரசனாக நியமிக்கப்பட்டார். இக்காலத்தில் எருசலேமில் தங்கியிருந்த இறைவாக்கினர் எரேமியாவும் பாபிலோனியச் சிறையிருப்பினிமித்தம் அங்கு கொண்டு செல்லப்பட்ட எசேக்கியேலும் மக்களை கலகம் செய்யாது அமைதியாக இருக்கும்படி அறிவுறுத்தினர். எனினும் செதேக்கியா அவர்களின் சொல்கேட்காது, பலவருடங்களாக பாபிலோனியரிடமிருந்து முற்றான விடுதலை பெறும்படியாக யுத்தம் செய்ய ஆரம்பித்தான். கி.மு. 587ம் ஆண்டில் பாபிலோனியாவுக்கு எதிராக யுத்தமொன்றை ஆரம்பித்தனர். இம்முறை முற்றுகையைத் தாண்டிச் சென்று பாபிலோனிய வீரர் எருசலேமைத் தாக்கி அழித்தனர். தேவாலயம் அழிக்கப்பட்டது. மதில்கள் இடிக்கப்பட்டன. ஏழை மக்கள் தவிர மற்றைய யாவரும் சிறைக்கைதிகளாக பாபிலோனியாவுக்குக் கொண்டுசெல்லப்பட்டனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யூத மக்கள் இக்கட்டான நிலையைச் சந்திக்க நேர்ந்தது. அவர்களின் புனித நகரமாகிய எருசலேமும் அங்கிருந்த மிக அழகான தேவாலயமும் அவர்களுக்கு இல்லாதுபோயின. என்றென்றும் நீடிக்குமென அவர்கள் நம்பின தாவீதின் பரம்பரையில் ஆட்சி திடீரென முடிவுற்றமை அவர்களுக்குப் பெரும் பிரச்சினையாகிவிட்டது. தமக்கென ஒரு நாடும் அரசனுமில்லாத மக்கள் கூட்டத்தை ஒரு இனமெனக் கருதமுடியுமா? அவர்களின் தேசியத்தின் பெயரும்கூட மாறிற்று. யூதாவிலிருந்து பாபிலோனியாவுக்கு வந்து எபிரேய இனத்தவர் இப்போது, "யூதர்கள்" என்று புதிய பெயரால் அழைக்கப்பட்டனர். புலம்பல் கீதங்கள், 137, தி. பா. என்பவை எவ்வாறு இவர்கள் சிறைவாசத்திலிருந்து துன்பம் அனுபவித்தார்கள் என்பதற்கு சிறந்த சான்றாயுள்ளன.

ஆன்மீக வளர்ச்சியின் அடிமட்டத்தையடைந்த இம்மக்களைத் திரும்பவும் கட்டியெழுப்புவதற்கு எசேக்கியேல் எடுத்த முயற்சிகளைப் பற்றி சென்ற பாடத்தில் கற்றோம். அவர்கள் பாபிலோனியாவில் இருந்தாலும் இறைவன் அவர்களோடு இருக்கிறார் என்பதை அவர்களுக்கு உணர்த்தினார். அவ்வாறே 2ம் எசாயா (அதாவது எசாயா நூலில் 40-55ம் அதிகாரங்களை எழுதிய ஆசிரியர்) அவர்களைத் தைரியப்படுத்தவென ஆறுதலின் வார்த்தைகளை எழுதினார். எல்லாக் காரியங்களும் இல்லாதுபோனாலும் இறைவன் அவர்களுக்குக் கொடுத்த வாக்குத்தத்தம் மாறாது என்று காண்பித்தார். அவர்களின் அநியாயங்களுக்கான தண்டனைகளை அவர்கள் அனுபவிக்க வேண்டியிருந்தாலும், அவற்றின் முடிவின் காலம் அண்மிக்கிறது என்பதைத் தெளிவுபடுத்தினார். மிகுதியானோர் மூலமாக அவர் யூத தேசத்தைத் திரும்பவும் கட்டியெழுப்ப எண்ணியுள்ளார் என்பதை யூதருக்குக் கூறினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்னொருபோதுமில்லாதவாறு சிறைவாசத்தின் போது யூதமக்கள் இறைபக்தியில் வளரத்தொடங்கினர். இவர்களின் சிறைவாசம் இஸ்ரயேலில் அடிமைத்தனத்தில் மக்கள் அனுபவித்ததைப்போல் கடினமாயிருக்கவில்லை. தங்கள் சொந்த இருப்பிடங்களைப் பெற்று சுயமாக வாழக்கூடிய நிலை ஏற்பட்டது. அவர்களின் சமய நிகழ்ச்சிகளை மேற்கொள்வதற்கு எவ்வித தடையும் இருக்கவில்லை. அவர்களின் மத்தியிலிருந்த ஆசாரியர்கள் இறைவாக்கினர், முதியோர் தமது சமயத்தைப் பேணிப்பாதுகாக்க முழு முயற்சிகளையும் மேற்கொண்டனர். இடத்துக்கிடம் அவர்கள் ஒன்று கூடுவதற்கென செபாலயங்கள் (சினகோக் என்னும் சிற்றாலயங்கள்) சாதாரண கட்டிடங்களில் அமைக்கப்பட்டன. பத்துக் குடும்பங்கள் அங்கு ஒன்றுகூடும் வசதி இருந்தது. வெகுசீக்கிரத்தில் செபாலய வழிபாடு மக்கள் மத்தியில் பரவியது.

இவ்வளவு காலமும் செபவழிப் பாரம்பரியமாக வந்த சமய சட்டங்கள், போதனைகள் என்பன எழுத்துவடிவம் பெற வேண்டிய தன் அவசியம் இக்காலத்திலேயே தோன்றியது. ஓய்வுநாளை மக்கள் முறையாக அனுசரிப்பதற்கும், இறையியலை மக்களுக்கு விளக்கிக் கூறுவதற்கும் எழுத்து வடிவமான புனித ஏடுகளைத் தயாரிக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. இக்காலகட்டத்தில் யூத பண்பாடுகளும் பாரம்பரியங்களும் ஓரளவு பாபிலோனியச் செல்வாக்கினால் பாதிக்கப்பட்டாலும், யூதர்கள் ஒரே கடவுட் கொள்கையைக் கட்டிக்காத்தனர்.

பாபிலோனியச் சிறைவாசத்தினால் யூதர்கள் சில நல்ல பயன்களைப் பெறக் கூடியதாயிருந்தது என்பது தெளிவு. ஏதோ ஒரு தினம் அவர்கள் திரும்பவும் எருசலேம் செல்ல ஆயத்தமாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்தனர். அந் நம்பிக்கையின் மேல் கட்டப்பட்ட கருத்துள்ள தொரு வாழ்க்கையை மேற்கொள்வதற்குத் தடையிருக்கவில்லை.

செயற்பாடு

1. பாபிலோனிய சிறைவாசம் யூதரின் ஆன்மீக வளர்ச்சிக்கு உதவிற்று என்பதை எடுத்துக் காட்டி ஒரு கட்டுரை எழுதவும்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடம் 30.

# இரண்டாம் யாத்திரை

எகிப்தில் இஸ்ரயேலர் அடிமைகளாக இருந்த காலத்தைப் பற்றி முன்னைய பாடங்களில் கற்றறிந்தீர்கள். தேவபலத்தினால் நிறைந்த மோசேயின் தலைமையின் கீழ் அவர்கள் விடுதலையை நோக்கிப் பயணம் செய்தது முதலாம் யாத்திரை அனுபவமாயிற்று. அது இறைவனின் அற்புதச் செயல் என ஏற்றுக்கொண்டிருந்தனர். ஆனால் பாபிலோனிய சிறையிருப்பிலிருந்து இஸ்ரயேலர் திரும்பவும் எருசலேம் நோக்கி அடியெடுத்துவைக்கக் கூடியதாயிருந்தமை அதற்குமேல் ஆச்சரியத்திற்குரிய செயலாயிருந்தது.



**புகழ்பெற்ற சைரசு (மன்னர்) உருளை:** சைரசு மன்னர் எவ்வாறு ஒரு யுத்தமும் செய்யாது பாபிலோனியாவைக் கைப்பாற்றினார் என்பது பற்றியும், சிறைக்கைதிகளைத் திரும்பவும் தம் சொந்த நாட்டிற்கு அனுப்பியதோடு அவர்களின் தேவாலயத்தைக் கட்டுவதற்கு அனுமதி கொடுத்தமை பற்றியும் இங்கு கூறப்படுகிறது. சைரசு யாவேயினால் அவரின் "தாசனாக" அழைக்கப்பட்டவர் என்று எசாயா கூறியுள்ளார். எனினும் இவ்வுருளையின் படி "மர்துக்" என்னும் அந்நிய கடவுளே சைரசை "உலகின் ஆட்சியாளன்" எனத் தெரிந்து கொண்டார் எனவும், அதன் பின்னர் மர்துக்கைத் தனது "உற்ற நண்பன்" என்று கூறி அக்கடவுளுடன் சென்றான் என்றும் அறிகிறோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கி.மு. 596-538 வரை இப்போது யூதர்களெனப் புதிதாக அழைக்கப்பட்ட இஸ்ரயேலர் பாபிலோனியாவில் குடியிருந்தனர். 538 ல் பாபிலோனிய இராச்சியம் பாரசீகத்தினால் மேற்கொள்ளப் பட்டது. சைரசு (கோரேசு) என்ற பாரசீக மன்னனின் ஆட்சியின்போது இது நடைபெற்றது.

சிறையிருப்பிலிருந்த யூதரைப்பற்றி பாரசீக அரசன் கொண்டி ருந்த நோக்கு முற்றிலும் வேறுபட்டது. சிறைவாசமிருந்த யூதர்கள் திரும்பவும் பலஸ்தீனா செல்வதற்கு அனுமதியளித்தார். இதைப்பற் றிய அரசகட்டளை எழுதப்பட்ட உருளைவடிவம் கொண்ட மட் பாண்டத்தின் படத்தைப் பார்க்கவும். எஸ்ரா 1:1-4ல் இதைப்பற்றி வாசிக்கலாம். சைரஸ் என்பதன் கருத்து "மேய்ப்பன்" என்பதாகும். எசாயா 44:28ல் அந்நியதேசத்து அரசனாகிய இவரை "மேய்ப்பன்" என்று குறிப்பிடுவது ஆச்சரியமல்ல.

சைரசு மன்னனால் நாடு திரும்புவதற்கு அனுமதியளிக்கப் பட்டாலும் யூதர்களில் ஒரு பகுதியினர் தொடர்ந்து பாபிலோனியா வில் குடியிருந்தனர். பொருளாதாரரீதியில் ஓரளவு நன்மையடைந்த வர்கள் அவர்களிருந்த இடங்களை விட்டுச்செல்லத் தயங்கினர். ஒரு குழுவினர் மட்டும் செருபாபேல் என்னும் தாவீதின் வழியில் வந்த ஒருவரின் தலைமையின் கீழ் இரண்டாம் யாத்திரையை மேற்கொண்டு எருசலேம் நோக்கிச் சென்றனர். ஆசாரியனாகிய யோசுவா, ஆகாய், சகரியா என்போரும் எருசலேமுக்குச் சென்ற னர். பாழடைந்த எருசலேமிலே புதிய வாழ்வை மேற்கொள்வதற்கு இவர்களின் தலைமைத்துவம் பெரிதும் உதவிற்று.

கி.பி. 521ம் ஆண்டில் எருசலேம் தேவாலயம் திரும்பக் கட்டப்பட ஆரம்பிக்கப்பட்டது. இக்காலத்தில் தரியு என்னும் அரசன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாரசீக அரசனாக இருந்தான். இதனைச் செய்வதற்கு மக்களைத் தூண்டியவர்கள் ஆகாய், சகரியா என்ற இறைவாக்கினர்களாவர். திரும்பவும் கட்டியெழுப்ப இது பெரிதும் உதவிற்று. 521ம் ஆண்டிலேயே ஆலயம் திரும்பவும் பிரதிஷ்டை செய்யப்பட்டது.

தேவாலயம் கட்டப்பட்டால் மட்டும் மக்களின் ஆன்மீக வாழ்க்கை நிறைவுபெறாது. அவர்களைத் திரும்பவும் முறையான வழிக்குக் கொண்டுவருவது இலகுவான காரியமாயிருக்கவில்லை. இப் பணியில் தீவிரமாக ஈடுபட்ட இருவரைப் பற்றி விவிலியத்தில் நாம் வாசிக்கிறோம். அவர்கள் இறைவாக்கினர்களாகிய நெகேமியாவும், திருச்சட்டம் பற்றி நிபுணத்துவம் பெற்றிருந்த எஸ்ராவும் ஆவர். எஸ்ரா ஒரு ஆசாரியனாகவும் இருந்தவர்.

நெகேமியா ஆரம்பத்தில் பாரசீக மன்னனின் நிர்வாக அமைப்பில் உதவினார். எருசலேமிருந்து பாபிலோனியாவுக்கு வருகை தந்த ஆனானி என்னும் உறவினன் எருசலேமின் சீரற்ற நிலையைப் பற்றி விளக்கினார். அப்போது தாம் எருசலேம் திரும்ப வேண்டிய அவசியத்தை நெகேமியா உணர்ந்தார். பின்பு அர்தசஷ்டா என்னும் பாரசீக அரசனின் பிரதிநிதியாக எருசலேம் திரும்பினார். எருசலேமைச் சுற்றியிருந்த பிரதேச மக்களிடமிருந்த ஓரளவு எதிர்ப்பு இருந்தாலும் அவர் மக்களை ஒன்று சேர்த்து எருசலேமின் மதிலைக் கட்டினார். கி.மு. 469 - 424 வரை அவர் எருசலேமைச் சுற்றியுள்ள சிறுபகுதியின் ஆளுநராக பாபிலோனியா மன்னனினால் நியமிக்கப்பட்டு கடமை புரிந்தார். எவ்விதப் பாதுகாவலோ படைப்பலமோ இல்லாதபடியால் அதனைத் திரும்பவும் இஸ்ரயேல் என்று அழைக்கக்கூடாமற் போயிற்று.

நெகேமியா யூதசமய பாரம்பரியங்களைத் திரும்ப கொண்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருவதில் ஊக்கமாகச் செயல்பட்டார்.எருசலேமின் மதில்களைக் கட்டிய பின்னர் ஆசாரியனாகிய எஸ்ரா முழுச்சனத்தையும் ஒன்று கூடி வரச் செய்தார். காலை தொடக்கம் மாலைவரை நீதிச் சட்ட நூலை அவர்களுக்கு வாசித்தார். 8:8 ல் கூறப்பட்டுள்ளபடி அவர் அதை விளக்கினார். அவ்வேளையில் மக்களின் முழு ஒத்துழைப்பும் அவருக்குக் கிடைத்தது. அத்தருணம் அவர்களின் மகிழ்ச்சி எல்லை மீறி பொங்கிற்று. அதன் பின்பு அவர்கள் ஒன்று சேர்ந்து உணவருந் தினர். பாபிலோனிய சிறைவாசத்தின்போது அவர்கள் “சினகோக்” என்னும் செபாலயங்களை அமைத்து வழிபட்டமை குறித்து முன்னர் கற்றோம். இரண்டாம் யாத்திரையில் பின்வரும் செபாலயங்கள் அவ்வண்ணமே தொடர்ந்து செயல்பட்டன. ஓய்வு நாளைப் புனித மாய்க் கடைப்பிடிப்பது யூதரின் அடிப்படைக் கடமைகளில் ஒன்றா கிறது. விருத்தசேதனம் போன்ற அவர்கள் பழக்கப்பட்ட வேறு பழக்கவழக்கங்கள் முறையாகக் கடைபிடிப்பதில் கவனம் செலுத் தினர். யூத சமயத்தைத் தூய்மைப்படுத்துவதை முதல் நோக்காகக் கொண்டனர். பிறசமயத்தவரோடு கலத்தல் முழுதாகத் தடை செய்யப்பட்டது. பிறசமயத்துப் பெண்களைத் திருமணம் செய்தவர் கள் அவர்களை விட்டுவிடவேண்டியதாயிற்று. சமய, தேசிய அபிமான உணர்வுகளை வளர்க்கும் பொருட்டு கொண்டுவரப்பட்ட இவ்வாறான தீர்மானங்கள் அவர்கள் மத்தியில் தேசிய வைராக் கியத்தையும் மமதையையும் வளர்க்கத் தூண்டிற்று. அந்நிய சமயத்தவரை அவமதிப்பது அவர்கள் மனதில் ஊறிப்போன செய லாய் மாறிற்று. ஆண்டவர் இயேசு இவ்விதமான பிழையான எண் ணங்களைக் களைந்தெறிவதற்குச் செய்தவற்றை நாம் நன்கு அறிவோமல்லவா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செயற்பாடு

1. "இரண்டாம் யாத்திரை யூத இனத்தின் வளர்ச்சிக்கு உதவிற்று" என்ற தொனிப்பொருளில் ஒரு கட்டுரை எழுதவும்.

2. நீங்களும் 2ம் யாத்திரையில் பங்குகொண்ட ஒருவரென எண்ணிக்கொண்டு

   (அ) அப்பயணத்தில் சேர்வதற்கான காரணம்.

   (ஆ) பிரயாணத்தில் ஏற்பட்ட இன்னல்கள்.

   (இ) எருசலேமில் வாழ்ந்த காலம்.

   (ஈ) தேவாலயத்தைக் கட்டி எழுப்புவதில் பங்கேற்றல்.

   (உ) இறைவார்த்தைகளை நியாயப்பிரமாண நூல்களிலிருந்து அறிந்து மகிழ்ச்சியுறுதல்.

இவை போன்ற அனுபவங்களை விளக்கும் ஒரு கட்டுரை எழுதவும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடம் 31.

# இயேசுவின் காலத்தில் அரசியல் பின்னணி

மத்தியதரைக்கடலின் கிழக்குக்கரையோரத்தை ஒட்டிய பலஸ்தீன யூதரின் வதிவிடமாயிற்று. அவர்கள் பல்வேறு தொழில் களிலே ஈடுபட்டனர். விவசாயிகள் திராட்சைத் தோட்டம் பயிரிட்டனர். மேலும் மேய்ப்பர், மீனவர், தச்சர் போன்றோர்களினால் யூதசமுதாயம் முன்னேற்றப் பாதையை நோக்கிச் சென்றது.

கி.மு. 63 ம் ஆண்டில் பலஸ்தீனா ரோம வல்லரசின்கீழ் கொண்டுவரப்பட்டது. ரோமப் பேரரசனால் நியமிக்கப்பட்ட ரோம ஆளுநர் ஒருவர் அங்கு சமாதானத்தை நிலை நாட்டும் பணியில் ஈடுபட்டார். எனினும் பலஸ்தீனாவின் உள்நாட்டு விடயங்கள் சுயா தீனமாகச் சொல்லப்பட்ட அதிகாரிகளின் கைகளில் விடப்பட்டது. திபேரியு என்னும் ரோமப் பேரரசனின் ஆட்சியின்போது யூதாவின் ஆளுநராக பொந்தியு பிலாத்து நியமிக்கப்பட்டிருந்தார். உள்நாட்டில் கலிலேயாவின் அரசனாக ஏரோது இருந்தான். அவனின் சகோதரன் பிலிப்பு இந்துரேயா, திரக்கோனித்து என்பவற்றிற்கு அரசனாக இருந்தான். மேலும் சில சிறிய அரசர்களும் இருந்தனர். இவர்க ளுக்கு அரசியலில் ஓரளவு சுதந்திரம் இருந்தாலும் ரோம அரசுக்குப் பட்சமாகவே செயல்பட வேண்டியிருந்தது. எனவே மக்களின் நம் பிக்கை இச் சிற்றரசர்களால் பெறக்கூடாமற் போயிற்று. பலஸ் தீனாவில் இருவித நீதிச்சட்டங்கள் வழக்கத்திலிருந்தன. "சனகரின்" என்று அழைக்கப்பட்ட யூத மூப்பர்களடங்கிய ஆலோசனைச் சங்கம் மூலமாக சமயச்சட்டம் தொடர்பான பிரச்சினைகள் விசாரிக் கப்பட்டன. ரோமர் யூதரின் சமயம் தொடர்பான செயல்களில் பூரண சுதந்திரம் கொடுத்திருந்தபடியால், சமய விடயங்கள் ஆலோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சனை சங்கத்தின் பொறுப்பாயிற்று. அடுத்ததாக, பாரிய குற்றச் செயல்களுக்குத் தண்டனை வழங்குவது ரோமச் சட்ட அடிப்படையில் ரோம அதிகாரியினால் மேற்கொள்ளப்பட்டது. மரண தண்டனை வழங்கும் பொறுப்பு ரோம அதிகாரிகளின் கையிலிருந்தது.

ரோம ஆட்சிக்குட்பட்டவர்கள் என்ற முறையில் யூதர் ரோம அரசுக்கு வரிப்பணம் செலுத்தவேண்டியிருந்தது. வரிசேர்ப்பதற்காக அவர்கள் யூதரின் மத்தியிலிருந்து நியமித்த ஆயக்காரர் ரோம அதிகாரத்தைப் பெற்றுச் செயல்பட்டனர். தமது சொந்த யூத மக்களுக்குச் சிறிதேனும் இரக்கம் காட்டாது செயல்பட்ட வரிசேர்க்கும் ஆயக்காரரைப் பாவிகளெனக் கூறி யூதர் ஒதுக்கி வைத்தனர்.

சமயச் சுதந்திரத்தை அனுபவித்த யூதரின் சமயத்தலைவனாக பிரதான ஆசாரியனும், தலைமைப்பீடமாக எருசலேம் தேவாலயமும் அமைந்தது. அன்னா, காய்பா என்பவர்கள் ஆண்டவர் இயேசுவின் காலத்தில் பிரதான ஆசாரிய பதவிவகித்த இருவராவர்.

ரோமப்பேரரசன் காலத்திற்குக்காலம் அரசகட்டளைகளைப் பிறப்பிப்பது உண்டு. இவை அவர்களுக்குக் கீழுள்ள பேரரசனாயிருந்தபோது விதித்த ஒரு ஆணையின்படி தனது ஆதிக்கத்தின் கீழ் இருந்த நாட்டுப் பிரசைகள் யாவரும் தம்தம் சொந்த ஊர்களுக்குச் சென்று குடிசனமதிப்பில் கலந்து பெயர்களைப் பதிவுசெய்துகொள்ள வேண்டும் என்பதாகும். இது 14 ஆண்டுக்கு ஒரு முறை நடைபெற்றது. தாவீதின் பரம்பரையைச் சேர்ந்த யோசேப்பு பெதல்கேமைப் பிறப்பிடமாகக் கொண்டாலும் நாசரேத்தில் வாழ்ந்து வந்தார். அவர் தமது மனைவியாகிய மரியாளோடு கூட நாசரேத்திலிருந்து புறப்பட்டு பெத்லகேம் செல்லவேண்டி ஏற்பட்டது இவ்வாறான அரசகட்டளையினாலேயாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செயற்பாடு

1. புனித லூக்கா 2:1-3 , 2:4, 3:1 என்ற வசனங்களில் காணப் படும் முக்கிய கருத்துக்களைக் கூறவும்.

2. பலஸ்தீனாவின் படமொன்றை வரைந்து ரோமராச்சியத்திற்குக் கீழ்ப்பட்ட பகுதிகளைக் குறிக்கவும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடம் 32.

# சமாரியரும் யூதரும்

பிளவுபட்ட இராச்சியத்தைப் பற்றி நீங்கள் கற்ற பாடத்தில் கூறியுள்ளபடி, தாவீது, சாலமோன் என்ற அரசர்களின் கீழ் ஒரே இராச்சியமாக இருந்த இஸ்ரயேல் இரு நாடுகளாகப் பிரிந்து வடபகுதி இஸ்ரயேல் என்றும், தென்பகுதி யூதா என்றும் அழைக்கப்பட்டமையை நீங்கள் அறிவீர்கள். வடராச்சியமாகிய இஸ்ரயேலின் தலைநகராக சமாரியாவும், தென்ராச்சியமாகிய யூதாவின் தலைநகரமாக எருசலேமும் இருந்தன. இஸ்ரயேலர் ஒரே இனத்தவராயிருப்பினும், இருபிரிவாகப் பிரிந்தனர்.

கி.மு. 721 ம் ஆண்டுவரை அரசர்களின் ஆட்சியின் கீழ் இஸ்ரயேல் இருந்தாலும், அரசியல், பொருளாதார, சமுதாய நிலைகளில் குறைவுபடத் தொடங்கினர். அரசர்கள் அந்நிய தெய்வ வழிபாடுகளில் மக்களை வழிநடத்திச் சென்றமையால், அவர்களின் ஆன்மீக வளர்ச்சி குன்றிப் போய்விட்டது. இக்காலகட்டத்தில் அசீரிய நாடு பலமுள்ளதாக வளரத் தொடங்கியது. கி.பி. 721இல் அசீரியர் இஸ்ரயேலை ஆக்கிரமிப்புச் செய்து 27,900 பேர்களைக் கைதிகளாக அசீரியாவுக்குக் கொண்டுசென்றனர். அதே வேளையில் அசீரியா வேறு நாடுகளிலிருந்து கொண்டுவந்த சிறைக்கைதிகளைப் பலவந்தமாக இஸ்ரயேலில் குடியேற்றியது. இஸ்ரயேலில் மீதியாயிருந்தோர் சமாரியர் என்று அழைக்கப்பட்டனர். அசீரியாவுக்குக் கொண்டு செல்லப்பட்ட இஸ்ரயேலர் திரும்பிவரவில்லை. எனவே வடராச்சியமாகிய இஸ்ரயேலின் வரலாறு முடிவுற்றது. இதனால் தென் ராச்சியத்தைச் சேர்ந்த யூதர்கள் சமாரியரை அலட்சியம் செய்ய ஆரம்பித்தனர். இதன்பின்பு அவர்களுக்கிருந்த உறவுகள் முற்றிலும் அற்றுப் போய்விட்டன.

தென்ராச்சியத்தின் யூதமக்கள் கி.மு. 587 வரை அரசர்களின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆட்சியின் கீழிருந்தனர். ஆரம்பத்தில் அசீரியா எருசலேமை முற்றுகையிட்டாலும் அவர்கள் மத்தியில் ஏற்பட்ட கொள்ளைநோயி னால் அசீரியப் படை பின்வாங்கிச் சென்றது. பின்பு அசீரியா பலம் குன்றிப் பாபிலோனியா வல்லரசு நெபுகத்னேசா் என்ற மன் னனின் தலைமையில் அசீரியாவை மேற்கொண்டது. நெபுகத்னேசர் யூதாவையும் தாக்கி, எருசலேம் தேவாலயத்தை எரித்தான். அரச குடும்பத்தைச் சேர்ந்தவர்களையும், உயர்நிலையிலுள்ளவர்களை யும், சிறைக்கைதிகளையும் பாபிலோனியாவுக்குக் கொண்டு சென்றான். இவ்வாறு தம் நாட்டை இழந்துபோன யூதர்கள், இறை வன் திரும்பவும் தங்களை சொந்தநாட்டுக்குக் கொண்டுசெல்லும் நாளை எதிர்பார்த்திருந்தனர்.

யூதர் தம் விடுதலையை எதிர்பார்த்திருக்கும் வேளையில் பாபிலோனியாவை பாரசீகர் தோற்கடித்தனர். சைரசு (கோரேசு) அரசன் யூதமக்களை பாபிலோனியாவிலிருந்து விடுதலை செய்து மீண்டும் யூதா செல்ல அனுமதித்தான். இவ்வாறு தம் சொந்த நாட்டிற்குத் திரும்பிய யூதர் தென்ராச்சியத்தைப் புணருத்தானம் செய்தனர். தேவாலயத்தைத் திரும்பக் கட்டி யூதா் தேசிய எண்ணத்தைப் புகுத்தினர். இந்த யூதமக்கள் தாம் இறைவனால் தெரிந்தெடுக்கப்பட்டவர்களெனக் கூறினர். வடக்கேயுள்ள சமாரியர் இவர்களோடே சேர்ந்துகொள்ள முயன்றனர். எனினும் யூதர்கள் அவர்கள் ஒரு கலப்பினமாக மாறி தம் இனத்தூய்மையை இழந்துவிட்டனர் என்பதாகும். ஆண்டவர் இயேசுவின் காலத்தில் இவ்வேறுபாடு மிகமோசமான நிலையை அடைந்திருந்தது. இதனை நீக்குவதற்காக யூதர் மட்டுமல்ல முழுமனிதகுலமுமே இறைவனின் புத்திரராவர் என்று காட்ட முனைந்தார். நல்ல சமாரியனின் கதையின் மூலமாகச் சமாரியரின் நிலையை உயர்த்துவதற்கென, அவர் உதவியற்றுக் கிடந்த யூத இனத்தைச்சேர்ந்த ஒருவன்மேல் சமாரியன் ஒருவன் இரக்கம்காட்டி உதவுவதாகக் காட்டினார். யூத இனத்தைச் சேர்ந்த ஆண்டவர் இயேசு சமாரியாவைக் கடந்து செல்லும் போது தாகத்தைத் தீர்ப்பதற்கு சீகார் என்னும் ஊரில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு கிணற்றண்டை தரித்தார். அவர் கிணற்றில் நீர் கொள்ள வந்த சமாரியப் பெண்ணிடம் தண்ணீர் கேட்டபொழுது பிரமிப்புக்குள்ளானாள். இன்னொரு வேளை ஆண்டவர் எருசலேமை நோக்கிச் செல்லும் போது சமாரியா அவரை ஏற்றுக்கொள்ளவில்லை. அப்போது இயேசுவின் சீடர்களாகிய யோவானும் யாக்கோபும் "வானத்திலிருந்து அக்கினி வந்து இவர்களை அழித்துப் போடும்படி நாம் கட்டளை இடலாமா?" என்று கேட்டபோது அவர் அவர்களைக் கண்டித்தார்.

யூதனாக இருந்து ஆண்டவர் இயேசு, சமாரியர் மேல் இரக்கம் சேர்ந்த அன்புடன் செயல்பட்டார். யூதர் தாம் உயர்ந்தவர்கள் எனக் கருதி சமாரியரை ஒதுக்கினர். என்றாலும் ஆண்டவர் இயேசு அவர்களை ஏற்றுக்கொண்டார். அன்று இருந்த இந்த இன வேறுபாட்டை இல்லாதுசெய்ய ஆண்டவர் மேற்கொண்ட செயல்கள், இன்று இலங்கையராகிய எமக்கு முக்கிய எடுத்துக்காட்டாகிறது. சிறிய இலங்கைத் தீவிலே பிறந்த ஒவ்வொருவரையும் இறைவனின் பிள்ளையாக ஏற்று, குறுகிய இனவேறுபாடுகளைக் களைந்து, யாவருடனும் அன்புடனும் சகோதர மனப்பான்மையுடனும் வாழ எம்மை அர்ப்பணிப்போம்.

செயற்பாடு

1. நல்ல சமாரியனின் கதையை எம் நாட்டுச் சூழலுக்கு ஏற்ப நாடகமாக எழுதி நடிக்கவும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாடம் 33.

# பரிசேயரும் சதுசேயரும்

ஆண்டவர் இயேசு வாழ்ந்த பலஸ்தீன தேசத்திலே பல்வேறு சமயப் பிரிவுகள் இருந்தன. அவற்றில் பரிசேயர், சதுசேயர் என அழைக்கப்பட்ட இரு யூத சமயக் குழுவினர்பற்றி இப்பாடத்தில் கற்போம்.

## பரிசேயர்

வேதத்தை முறையாகக் கற்றல், யூதரின் எழுத்துக்கள், மற்றும் வாய்மொழிப் பாரம்பரியமாக வந்த நியாயப்பிரமாணங்களை சொல்லுக்குச் சொல் கடைப்பிடித்தல் போன்ற செயல்களால் இக்கூட்டத்தினர் பரிசேயர் என அழைக்கப்பட்டனர். நீதிச்சட்டங்களை முறையாகக் கடைப்பிடிப்பதனால் நித்திய வாழ்வைப் பெறலாம் என்பது இவர்களின் நம்பிக்கையாகும். இவர்கள் செபாலயங்களில் வேதத்தைக் கற்றுக்கொடுத்து யூதச்சட்டங்களை முறையாக ஒழுகும்படி கூறினர். எபிரேயர் வேதாகமத்தின் முதல் 5 நூல்களையும் இறைவாக்கினர் நூல்களையும் ஏற்றனர். அவர்கள் தங்களை நீதிமான்களென்று கூறிக்கொண்டு பிரசித்தமான இடங்களில் மக்களின் மதிப்பைப்பெற முயற்சி செய்தனர். அவர்களின் மத்தியில் சட்டநிபுணர்களும், சாதாரண மக்களும் இருந்தனர். இவர்கள் ஆண்டவர் இயேசுவை "றபி" அல்லது போதகர் என்றே ஏற்றுக் கொண்டனர். இவர்கள் சட்டத்திற்கு அடிமையாகி அவற்றினை வெளிப்படையாக மட்டுமே கடைப்பிடிப்பதில் அதிக ஆர்வம் கொண்டனர். எனவே ஆண்டவர் இவர்களை நண்பர்களாக ஏற்றுக்கொள்ள வில்லை. பரிசேயர் தமது சமயத்தைப்பற்றி அதிக அக்கறைகொண்டது அதனைத் தூய்மையானதாக வைத்திருப்பதற்கேயாகும் என்றனர். ஓய்வு நாளை (சபத்) அவர்கள் புனிதமாக ஆசரித்தல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்களின் முக்கிய சட்டங்களில் ஒன்றாகியது. ஆண்டவர் இயேசு ஓய்வு நாளில் குணமாக்கிய ஒவ்வொரு வேளையும் அவர் யூதச் சட்டத்தை மீறினார் என்று குற்றஞ்சாட்டப்பட்டது. எனினும் மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுதல் உண்டு என்று இயேசு போதித்ததை அவர்கள் ஏற்றுக்கொண்டனர். மக்கள் மத்தியில் அவர்களுக்கிருந்த செல்வாக்கினால் சிலவேளைகளில் மக்களைத் தவறான வழியில் நடத்தக்கூடியதாயிற்று. பல பரிசேயர் இயேசுவைப் பின்பற்றினர். அரிமத்தியாவின் யோசேப்பு, நிக்கொதேமு, கமாலியேல் என்போர் இவர்களில் சிலராவர். எவ்வாறேனும் யூதமக்களை இயேசுவுக்கெதிராக எழுப்பிவிடுவதில் பரிசேயர் வெற்றிகண்டனர். ஆண்டவர் இயேசு மக்களோடு கொண்டிருந்த கிட்டிய உறவினாலும் அன்பாலும் பொறாமைகொண்டு அவரைக் கொல்வதற்குச் சதிசெய்தனர்.

## சதுசேயர்

தாவீதின் பரம்பரையில் வந்த ஆசாரியனாகிய சதோக் என்பவரின் பின் இக்குழு ஆரம்பமாகியது. உயர்மட்ட யூதக் குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் இச்சமயக் குழுவில் அடங்கினர். பிரதான ஆசாரியனும், மூப்பர்களும் இவர்கள் மத்தியிலிருந்து தெரிவுசெய்யப்பட்டனர். பழைய பாரம்பரியங்களைக் கடைப்பிடித்த இவர்கள் வேதாகமத்தின் முதல் 5 நூட்களையும் ஏற்றுக்கொண்டனர். உயிர்த்தெழுதலை முற்றிலுமாக மறுத்தார்கள். தேவாலயத்தில் இவர்களின் செல்வாக்கு அதிகமாகக் காணப்பட்டது. தமது நிலையைப் பாதுகாத்துக் கொள்வதற்காக ரோம ஆட்சிக்கு எதிராக எழும்பிய எல்லா யூத புரட்சிகளையும் எதிர்த்தனர். ஆண்டவர் இயேசுவைப் பலரும் ஏற்றுக்கொண்டபடியால் தங்களின் நிலைமை பாதிக்கப்படும் என்று எண்ணி அவரை எதிர்த்தார்கள். நாட்டில் சட்டத்தையும் சமாதானத்தையும் நிலை நாட்ட அவர்கள் உடன்பட்டிருந்தபடியால் ஆண்டவர் இயேசுவின் பணியை அழித்தொழிக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எண்ணினர்.

மத்தேயு 23: 1-29 ல் சதுசேயரின் செயல்களைக் கண்டித்து ஆண்டவர் இயேசு அவர்களின் குறைகளை உணர்த்த விரும்பிய தைக் காண்கிறோம். அவர்கள் மக்களின் தலைவர்கள் என எண்ணினர். எனினும் அவர்கள் இயேசுவைப் பிழையாகப் புரிந்து கொண்டு அவருக்கெதிராகச் செயல்பட்டார்கள். அவர்களோடு பரிசேயரும் சேர்ந்துகொண்டு இரு குழுக்களுக்கும் இடையே இருந்த வேறுபாடுகளை மறந்து இயேசுவை எதிர்த்தனர். ஆண்டவர் இயேசு எவ்வாறு அன்றைய மக்கள் தலைவர்களுக்கு அறைகூவல் விடுத்து செயல்பட்டார் என்பதை மனதில் கொண்டு, நாமும் இறையரசின் வளர்ச்சிக்காகச் செயல் படவேண்டும் என்பதை உணர்ந்துகொள்ள முடிகின்றது. சமயம் மற்றும் சமயச்சடங்களில் அடங்கியுள்ள உண்மைகளை அறிந்து, சத்தியத்துக்கு மாறான செயல்களுக்கு அடிமைப்படாமல், அன்பையும் இரக்கத்தையும் நோக்காகக் கொண்டு நாமும் வாழவேண்டும்.

செயற்பாடு

1. மாணவர்கள் மத்தியில் பரிசேயர், சதுசேயர் என இரு குழுக்களையும், மேலும் அவர்களுக்கு எதிராகக் கூறப்பட்ட குற்றச்சாட்டுகளை விசாரிக்கும்படி இன்னொரு குழுவையும் நியமித்து, ஒரு விசாரணையை வகுப்பறையில் மேற்கொள் ளவும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடம் 34.

# ஏரோதியரும் செலோத்தியரும்

மாற்கு 3:6, லூக்கா 6:15

கி.மு. 63 ம் ஆண்டளவில் யூதா ரோமருக்குக்கீழ் கொண்டு வரப்பட்ட காலத்திலிருந்தே அவர்களுக்கெதிரான அரசியல் குழுக்கள் யூதர் மத்தியில் செயல்பட்டுவந்தன. தமது அரசியல் எதிர்பார்ப்புகளை முன்வைத்து மக்களைத் தூண்டிவிட்டு நாட்டில் சமாதானத்தைச் சீர்குலைப்பதில் இவை வெற்றிகண்டன. இக்குழுக்களுக்கிடையே காணப்பட்ட வேறுபாடுகளினால் ஏற்பட்ட உள்நாட்டுக் குழப்பங்கள் பல. இவர்களின் நோக்கம் யூதாவை ரோமரின் கட்டுப்பாட்டிலிருந்து விடுவிப்பதாகும். எனினும் அதனை நிறைவேற்றுவதற்கு இக்குழுக்களின் மத்தியிலிருந்த பிரிவினைகள் தடையாயிருந்தன.

## ஏரோதியர்

ஏரோதியர் என்ற பெயரில் செயல்பட்ட ஒரு குழுவினர் ஏரோதின் அரசகுடும்பத்திற்கு விசுவாசமாயிருந்தனர். இவர்கள் பலஸ்தீனாவை ஏரோதின் ஆட்சிக்குக்கீழ் கொண்டுவருவதற்கு முயற்சி செய்தனர். ரோம ஆட்சியை எதிர்த்தனர். ஆண்டவர் இயேசுவைப் பற்றி பொறாமை கொண்டனர். ஓய்வுநாளில் இயேசு சூம்பினகை உடையவனை குணமாக்கியதை பரிசேயர் கண்டித்த போது ஏரோதியரும் அவர்களோடு சேர்ந்துகொண்டு இயேசுவை எதிர்த்தனர். அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றவேண்டுமென்ற சுயநலமிக்க ஆசையால் மக்கள் நலன் கருதாது செயல்பட்ட சந்தர்ப்பவாதிகளாயிருந்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## செலோத்தியர்

செலோத்தியர் அல்லது தேசாபிமானிகள் என்ற பெயரில் இன்னொரு புரட்சிவாதக் குழுவினர் செயல்பட்டனர். இவர்கள் ரோம அரசின் பிடியிலிருந்து யூதாவை விடுவிப்பதற்கு சமயம் சார்ந்ததொரு தலைவர் வரவிருக்கும் மேசியா என்றாலும், அவர்களின் எதிர்பார்ப்பு, தம்மைப் போரில் தலைதாங்கிச் செல்லக் கூடிய ஒரு போர்வீரனையேயாகும் என்பதாகும். ஆண்டவர் இயேசுவைப் பற்றி ஓரளவு அறிந்துகொண்ட செலோத்தியர், அவரின் தலைமையின் கீழ் பலஸ்தீனா அரசியல்ரீதியாக விடுதலை அடையும் என்று எதிர்ப்பார்த்தனர். இயேசுவின் சீடனாகிய மற்றைய சீமோன் இக்குழுவின் அங்கத்தவனாவான். இக்குழுவின் சீகாரியர் என்ற பிரிவினர் போருக்கு ஆயத்தமானோர் போல் தம்மிடம் வாளை வைத்திருந்தனர்.

இவ்வாறான கலகக்காரத் தீர்வுக் குழுக்கள் இடையே அடிக்கடி சண்டை ஏற்பட்டபடியால், இவற்றை அடக்குவதற்கு ரோமர்களும் நடவடிக்கைகளை மேற்கொண்டனர். இச்செயலின் காரணத்தால் யூதாநாட்டின் சமாதானம் சீர்குலைந்து அன்றாட தீர்மானங்களை எடுக்கும் சுதந்திரமும் பறிபோய்விட்டது. அரசியல் இலாபத்தைத் தேடுவோரின் செயல்களினால் இன்னல்களுக்குட்பட்ட சாதாரண மக்கள் தங்களுக்குச் சமாதானமும் விடிவும் வரும்வரைக்கும் காத்திருந்தனர். ஆனால் ஆண்டவர் இயேசு தமது பலஸ்தீனப் பணியின்போது இறையரசை நிலைநாட்டுவதைத் தமது நோக்காகக் கொண்டார். குறுகிய அரசியல் நோக்குகளைவிட்டு மக்கள் ஏங்கித் தவித்த முழுமையான மனிதகுல விடுதலையைப் பெற்றுக்கொடுப்பதில் இறைவன் இயேசு ஈடுபட்டார். அந்த விடுதலையை அளிப்பதற்காக அவர் தமது உயிரையும் தியாகம் செய்ய முன்வந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செயற்பாடு

1. "உனது வாளை அதன் உறையில் திரும்பிப் போடு. ஏனெனில் வாளை எடுப்போர் வாளால் அழிந்துபோவர்" என்று மத்தேயு 26:52 ல் காணப்படும் இயேசு கூறிய வார்த்தைகளை விமர்சிக்கவும்.

2. சிறு குறிப்பு எழுதுக.
   1. பரிசேயர் 2. சதுசேயர் 3. செலோத்தியர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடம் 35.

# ஆண்டவர் இயேசு ஆரம்பித்த புதிய சமுதாயம்

## ஆரம்ப அங்கத்தவர்கள் i

மாற்கு 1: 16-20 லூக்கா 5: 1-11 5: 27-28 6:12-16
லூக்கா 6: 20-49 14:25-33 9:57-62

புதியதொரு சமுதாயத்தை ஆரம்பிப்பதோடு இறையரசைக் கட்டி எழுப்புவதை ஆண்டவர் இயேசு தமது நோக்காகக் கொண்டார். அதற்கென சீடர்களைத் தெரிந்தெடுக்குமுன் ஒரு இரவை செபத்தில் கழித்தார். சீடர்களைத் தெரிந்தெடுத்தல் இஸ்ரயேலின் பன்னிரு கோத்திரங்களை அடையாளப்படுத்தும் செயலாயிருந்தது.

ஆண்டவர் இயேசுவின் அழைப்பை ஏற்ற ஆரம்ப சீடர்கள் பன்னிருவரும் "அப்போஸ்தலர்" என்று அழைக்கப்பட்டனர். இதன் கருத்து "அனுப்பப்பட்டவர்கள்" என்பதாகும். இயேசுவுக்கு மிகச் சமீபமாயிருந்த இவர்கள் சில வேளைகளில் "சிறுமந்தை" என்றும் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

புனித லூக்காவின் நூலின்படி முதலில் அழைப்பை ஏற்றவர் மீனவனாகிய சீமோன் என்பவராவார். முதல் நாள் இரவு முழுவதும் மீனொன்றும் அகப்படாது மனம் சலித்துப்போயிருந்த வேளையிலே கெனேசரேத்துக் கடலருகே ஆண்டவர் இயேசு இவரைச் சந்தித்தார். ஆழத்திற்குச் சென்று வலையை வீசும்படி இயேசு அவனிடம் கூறியபோது அவன் அதனைத் தயக்கத்துடன் செய்தான். எனினும் விசுவாசத்தோடு கூடிய கீழ்ப்படிதலின் செயலினால் வலை கிழிந்துபோகும் அளவுக்கு மீன்கள் அகப்பட்டன. தனது அபாத்திர நிலையை உணர்ந்த சீமோன் இயேசுவின் அழைப்பை ஏற்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவருக்குப் பின் சென்றான். ஏற்கனவே ஆண்டவரை அறிந்திருந்த அந்திரேயா தன் சகோதரனாகிய சீமோனோடு சேர்ந்து கொண்டான். இவர்களுடன் தொழில் செய்த யோவான், யாக்கோபு என்ற இரு சகோதரர்களை நோக்கி, அனைத்தையும் விட்டு தம் பின்னே வரும்படி அழைப்பு விடுத்தார்.

மீன்பிடிப்பவனாகிய சீமோனை மனிதரைப் பிடிக்கிறவனாக மாற்றிய இயேசு அவனுக்கு "கேபா" அல்லது "பேதுரு" என்ற பெயரையும் கொடுத்தார். இதன் கருத்து "கற்பாறை" என்பதாகும்.

தமது சீடரைத் தெரிந்து கொள்ளும்போது வெவ்வேறு வாழ்க்கை மட்டத்தலிருந்து அவர்களைத் தெரிந்துகொண்டார். ஆயத்துறையில் வரி சேர்த்துக் கொண்டிருந்த லேவி என்னப்பட்ட மத்தேயுவை அழைத்தார். ஆயக்காரர் பாவிகளென அன்றைய யூதசமுதாயம் அவர்களை ஒதுக்கிவைத்திருந்தது. இயேசு அவனிடத்தில் சென்று, "என் பின்னே வா" என்று கூறிய உடனேயே அவன் யாவற்றையும்விட்டு அவர் பின்னே சென்றான். இவனே, ஆண்டவரின் வாழ்க்கை வரலாற்றைக் கொண்டுள்ள மத்தேயு நற்செய்தி நூலை எழுதினான்.

இயேசு கலிலேயாவில் வைத்து பிலிப்புவைச் சந்தித்தார். தன்னைப் பின்பற்றும்படி விடுத்த அழைப்பை ஏற்றதோடு அவன் பர்த்தலோமேயு எனப்பட்ட நாத்தான்வேலையும் அழைத்து வந்தான். தீவிரவாதியாகிய சீமோன் என்பவனும் அப்போஸ்தலக் கூட்டத்தில் சேர்த்துக்கொள்ளப்பட்டான். ஏனைய சீடர்களை அழைத்த முறையை நாம் அறியோம். எனினும் அவர்கள் மத்தியில் ஒரே மாதிரியான நிலையில் உள்ளவர்கள் இருவர் இருந்ததாகத் தெரியவில்லை. அவர்கள் அனைவருமே குறைவுள்ளவர்களாக இருப்பினும் யாவருக்கும் அவரின் ஐக்கியத்தில் பங்கு அளிக்கப் பட்டது. ஆரம்ப கிறிஸ்தவர்களாக அழைக்கப்பட்ட இக்கூட்டத்தினர் எதிர்காலக் கிறிஸ்தவத் திருச்சபையின் அத்திவாரமாயினர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிறிஸ்துவைப் பின்பற்றும் நாம் அனைவரும் அவர் தோற்றுவித்த புதிய சமுதாயத்தின் பங்குதாரர்களாவோம். முதல் சீடர்களை ஆண்டவர் தாமே பயிற்றுவித்தார். லுக்கா 6: 20-49 ல் காணப்படும் "சமனான" இடத்தில் செய்த போதனை (மத்தேயுவில் மலைப்பிரசங் கம்) ஆண்டவர் இயேசு பல்வேறு நேரங்களில் கற்பித்தவைகளின் சேர்க்கையாகும். மேலும் தமது மேலான வாழ்க்கையில் அவர்களின் ஆன்மீக வாழ்க்கையைப் பெலப்படுத்தினார். அவர் செய்த அற்புதங் கள் அவர்களின் விசுவாசத்தைப் பெலப்படுத்தியது. உலகரீதியாக அல்லாமல் மேலான காரியங்களின்மேல் வாழ்க்கையைக் கட்டி யெழுப்புவதைப் பற்றி விளக்கிக்கூறி, இறையரசின் பண்புகளை வளர்த்துக் கொள்வதைப் பற்றிப் போதித்தார். தமது சீடர்களை நற்செய்தித்தூதுப் பணியில் அனுப்பும்போது அவர்களுக்கு நடை முறைச் செயல்களைப் பற்றி பயிற்றுவித்தார். சீடனாவது அத்தனை இலகுவான செயலல்ல வென்றும் அதற்காக ஒருவர் முழுத்தியாகத் தோடு கூடிய அர்ப்பணிப்போடு செயல்படவேண்டும் எனவும் கற்பித் தார். லூக்கா 6: 35-43ல் காணப்படும் உவமைக் கதையின்படி, ஆண்டவர் இயேசு எதிர்பார்ப்பது நம் வாழ்க்கையில் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கு முகம்கொடுத்து வாழ் நாள் முழுதும் அவர் பணியில் ஈடுபடுவோம் என்பதாகும்.

## ஆரம்ப அங்கத்தவர்கள் ii

மூன்று வருடங்களாக ஆண்டவர் இயேசுவிடம் பயிற்சிபெற்ற ஆரம்ப அங்கத்தவர்கள் தாம் செய்யவேண்டிய பணிபற்றி வேண்டிய அறிவைப் பெற்றுக்கொண்டார்கள். எனினும் ஆண்டவர் பரலோகத் திற்கு எடுத்துக் கொள்ளப்பட்ட பின்னரே அப் போதனைகளில் அடங்கியிருந்த ஆழமான சத்தியங்களைப் புரிந்துகொள்ளக்கூடிய தாக இருந்தது. ஆண்டவரைக் காட்டிக்கொடுத்த யூதாஸ் காரியோத்தின் மரணத்தின்பின் ஏற்பட்ட வெற்றிடத்தை மத்தியா என்பவர் நிரப்பினார். சீடர்கள் உட்பட எல்லா விசுவாசிகளும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெந்தெகொஸ்தே தினத்தன்று நடைபெற்ற பொதுச் செபவேளை யின்போது ஒரு புதுமையான அனுபவத்தை உணர்ந்தனர். அவர்கள் ஒன்றுகூடியிருந்த இடத்தில் பலத்த காற்று அடிக்கிற முழக்கம் போல உண்டாகி அவர்கள் உட்கார்ந்திருந்த வீடு முழுவதையும் நிரப்பிற்று. அல்லாமலும் அக்கினிமயமான நாவுகள் ஒவ்வொருவர் மேலும் அமர்ந்தது. இதுவே ஆண்டவர் அவர்களுக்குத் தருவதாகக் கூறியிருந்த பரிசுத்த ஆவியானவரின் வல்லமையாகும். அந்நேரம் தொடங்கியே புதுப்பெலன் பெற்ற சீடர்கள் எவ்வித பயமுமின்றி ஆண்டவரைப் பற்றிப் போதிக்கத் தொடங்கினர். யூதரின் பெந்தெ கொஸ்தே பண்டிகைக்காக எருசலேமில் கூடியிருந்த யூதமக்கள் ஆச்சரியத்துக்குள்ளாகி சீடர்கள் இருந்த இடத்திற்கு வந்து கூடினர். பல்வேறு மொழிகளைப் பேசும் எல்லா மக்களுக்கும் விளங்கக்கூடிய முறையில் சீடர்கள் பேசுவதைக் கேட்டு பிரமித்தனர். அவ்வேளை யில் தலைவனாகச் செயல்பட்ட சீமோன் பேதுரு அம்மக்களுக்குச் செய்த பிரசங்கத்தின் மூலம் அன்றைய தினம் 3000 பேரளவில் இயேசுவை ஏற்றுக்கொண்டனர்.

தூய ஆவியானவர் இறங்கினபடியால் ஏற்பட்ட புது வாழ்வினால் ஆரம்ப திருச்சபையின் வளர்ச்சியில் புது உத்வேகம் காணப்பட்டது. அப்போஸ்தலர் போதித்தலில் கருத்தாயிருந்தனர். இரட்சிக்கப்பட்டவர்களின் மத்தியில் ஒற்றுமையும், சகோதரத்துவமும் வளர்ந்தது. இறைவழிபாட்டின் மூலமும் அப்பம் பிட்டலுக்கூடாகவும் செபத்தினாலும் இறைவழி நடத்துதலைப் பெற்றனர். யாவரும் தங்களுக்குரியவைகளைப் பகிர்ந்துகொண்டு புதியதொரு பொருளா தார நிலையை உருவாக்கினர். ஒவ்வொருவரின் தேவைகளைப் பற்றி அறிந்து அவற்றை நீக்குவதற்கு உதவினர். சபையில் தலைமைத்துவம் வகித்த அப்போஸ்தலர் தங்கள் முழு நேரத்தை நற்செய்தி கூறுவதிலேயே செலவிட்டனர்.

அக்காலத்தில் இருந்த யூத இனத்தைச் சேர்ந்த கிறிஸ்த வர்கள் இரு குழுக்களாகப் பிரிந்தனர். அவையாவன எபிரேய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மொழி பேசிய யூத கிறிஸ்தவக் குழு, கிரேக்க மொழி பேசிய யூத கிறிஸ்தவக் குழு என்பவைகளாகும். விதவைகளின் தேவைகளை விசாரித்து உதவும் பணி எபிரேய மொழி பேசும் யூதரிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது. இப்பணியை அவர்கள் மேற்கொள்ளும் போது கிரேக்க மொழி பேசும் (யூத) விதவைகளின் தேவைகள் நிறைவுசெய்யப்படவில்லை என குற்றம் சுமத்தப்பட்டது. இக்குறையைத் தீர்ப்பதற்காக கிரேக்க மொழி பேசக்கூடிய 7 பேரைத் திருத் தொண்டர்களாகத் தெரிவு செய்துகொள்ளும் பொறுப்பை அப்போஸ்தலர்கள் மக்களிடமே விட்டார்கள்.

புதிய மார்க்கத்தைக் கடைப்பிடித்த திருச்சபை பெலப்பட்டு தீவிரமாக வளர்ந்து கொண்டிருந்தது. இதற்கான முதற் காரணம் பரிசுத்த ஆவியானவர் அங்கு அவர்கள் மத்தியில் செயல்பட்டமையாகும்.

செயற்பாடு

1. மாணவர்கள் இறைவனின் அழைப்பை உணரும்போது காட்டும் மாறுத்தரத்தை வருணிக்கும் கவிதையொன்றை இயற்றவும். (குழுக்களாக இணைந்து செயற்படவும்.)

2. தூய ஆவியானவர் இறங்கும் காட்சியை வர்ணித்து எழுதவும், அல்லது வரைந்து காட்டவும்.

3. நீங்களும் பெந்தெகொஸ்து தினமன்று ஆவியானவரைப் பெற்றுக்கொண்டீர்களெனக் கற்பனை பண்ணிக்கொண்டு, உங்கள் வாழ்க்கையில் ஏற்பட்ட மாற்றத்தை விளக்கி நண்பனொருவருக்குக் கடிதமொன்று எழுதுங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடம் 36.

# திருச்சபையின் வளர்ச்சியும் பரவலும்

தூய ஆவியானவரின் ஈவை அனுபவித்த ஆதித் திருச்சபை அப்போஸ்தலரின் தலைமைத்துவத்தின் கீழ் முன்நோக்கிச் சென்றமையைப் பற்றி அப்போஸ்தல பணிநூலின் ஆரம்ப அதிகாரங்களில் காண்கிறோம். "தூய ஆவி உங்களிடம் வரும்போது நீங்கள் கடவுளது வல்லமையைப் பெற்று, எருசலேமிலும், யூதேயா, சமாரியா முழுவதிலும் உலகின் கடைசி எல்லை வரைக்கும் எனக்குச் சாட்சிகளாய் இருப்பீர்கள்." திருத்தூதர் பணிநூல் (அப்போஸ்தலர்) 1:8ல் காணப்படும் இந்த வாக்கு பெந்தெகொஸ்தே தினமன்று நிறைவேறியபொழுது கிறிஸ்தவத் திருச்சபை பிறந்தது.

ஏழு திருத்தொண்டர்களின் (மக்கள்) தலைவனாகச் செயல்பட்ட ஸ்தேவான் இயேசுவே கிறிஸ்து என்று உறுதிப்படுத்தியதால் அவர் தேவதூஷணம் கூறினார் என்று சொல்லி அவரைக் கல்லெறிந்து கொன்றார்கள். இயேசுவுக்காக தம் வாழ்வையே தியாகம்செய்த முதல் இரத்தச்சாட்சி இவருமாவார். இக்கொலைக்கு சம்மதித்திருந்த சவுல் என்னும் யூத பரிசேய வாலிபன் யூதத் தலைமைத்துவத்துடன் சேர்ந்து கிறிஸ்தவர்களை அழிக்கும் செயலில் ஈடுபட்டான். அப்போஸ்தலர் தவிர பல விசுவாசிகள் துன்புறுத்தலினால் எருசலேமைவிட்டுச் சென்றனர். அவர்கள் சென்ற இடங்களில் எல்லாம் நற்செய்தியைப் பரப்பினர். ஸ்தேவானின் மரணத்தின் பின்னர் உதவியாளர்களின் தலைவனாகச் செயல்பட்ட பிலிப்பு தூய ஆவியானவரின் வழிநடத்துதலினால் சமாரியா என்னும் நகரத்துக்கு சென்று மிகச் சிறப்பான பணியில் ஈடுபட்டார். அந் நகரில் மக்கள் மகிழ்வுற்றனர். திருமுழுக்குப் பெற்றோர் பலரும் ஆவியானவரின் ஈவைப் பெறும்படி செபிக்கும் வண்ணமாக பேதுருவும் யோவானும் கூட சமாரியாவுக்கு அனுப்பப்பட்டனர். யூதரினால் தாழ்வானவர்களாகக் கருதப்பட்ட சமாரியரிடையே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொண்டு புரிந்த பிலிப்பு. முன்னர் எத்தியோப்பிய மந்திரியின் விசுவாச வளர்ச்சிக்கு உதவியமை குறித்து திருத்தூதர் பணி நூலில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. எத்தியோப்பிய மந்திரி வாசித்துக்கொண்டிருந்த எசாயா புத்தகத்தின் பகுதியை அவனுக்கு விளக்கியதன் மூலம், அவன் இயேசுவை ஏற்றுக்கொள்ளக்கூடிய தாக இருந்தது. பிலிப்புவிடம் திருமுழுக்குப் பெற்றுக்கொண்ட மந்திரி நற்செய்தியினால் நிரப்பப்பட்டவராய் எத்தியோப்பியாவுக்குத் திரும்பிச் சென்றார். யூத சமயச்சட்டங்களின்படி அந்நியர்கள் ஏற்றுக்கொள்ளப்படாவிடினும், ஆண்டவர் இயேசு அவர்களை ஏற்றுக் கொண்டார் என்பது தெளிவாகிறது.

எருசலேமிலிருந்து சமாரியாவிற்குப் பரவிய நற்செய்தி புறசாதியினரின் விசுவாசத்திற்கும் வழிவகுத்தது. இயேசுவைப் பின்பற்றுவதற்கு இனம் ஒரு தடையல்ல என்பதை அப்போஸ்தலர் புரிந்துகொண்டிருந்தனர். நாம் திருத்தூதர் பணி நூல் 10ம் அதிகாரத்தை வாசிக்கும்போது அது தெளிவாகிறது. சிறப்பான வாழ்வை மேற்கொண்ட புறசாதியினனான கொர்நெலியு இறைவனு டன் மிகவும் கிட்டிய உறவு கொண்டிருந்தமை அவர் கண்ட தரி சனத்திலிருந்து நன்கு புரிகிறது. தன் வேலையாட்களை அனுப்பி பேதுருவை தன் இல்லத்திற்கு அழைப்பதற்கு இணங்கினான். இதேவேளையில் பேதுரு கண்ட தரிசனத்திலிருந்து, யூதனாகிய பேதுருவின் மனதில் புறசாதியினர் தொடர்பாக இருந்த பிழையான கருத்து நீங்கிற்று. “தூய்மையானது என கடவுள் கருதுவதைத் தீட்டாகக் கருதாதே” என்ற சத்தம் பேதுருவுக்கு மும்முறை கேட்ட பின்னர், கொர்நேலியுவின் பணியாட்கள் அங்கு வந்தனர். அவ் வேளையில் இருவரும் ஒரே சமயத்தில் கண்ட தரிசனங்களின் தொடர்பை உணர்ந்து, பேதுரு கொர்நேலியுவின் இல்லம் நோக்கிச் சென்றார். அங்கு பேதுரு ஏற்றுக்கொள்ளப்பட்ட விதம் புறயினத்தவர் ஒருவரின் கீழ்ப்படிவை எடுத்துக்காட்டுகிறது. கொர்நேலியுவின் வீட்டில் பேதுருவின் பிரசங்கத்தைக் கேட்டுக்கொண்டிருந்த அனை வரும் இயேசுவை ஏற்றுக்கொண்டதோடு மட்டுமல்லாது, தூய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆவியானவரின் ஈவையும் பெற்றுக்கொண்டனர். இதனை அவதானித்த பேதுரு அம்மக்களுக்குத் திருமுழுக்குக் கொடுக்கும்படி உடனேயே தீர்மானித்தார்.

தூய ஆவியானவரின் செயலினால் எருசலேமில் ஆரம்பிக்கப்பட்ட திருச்சபை அதனைச் சுற்றியுள்ள பிரதேசங்களுக்கும், புறசாதியினருக்கும் மத்தியில் பரவியது இறைத்திட்டத்தின்படி நடந்ததென்பதை தாம் உணரக்கூடியதாயுள்ளது.

செயற்பாடு

1. "திருத்தொண்டன் பிலிப்புவின் நற்செய்திப் பணிகள்" என்ற தலைப்பில் கட்டுரை ஒன்று எழுதவும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடம் 37.

# இயேசுவின் உடலாகிய திருச்சபை

புவியில் இறையரசைக் கட்டுவதற்கும், எல்லா இனத்தவர் மத்தியிலும் இறையரசின் சத்தியத்தைப் (மெய்ப்பொருள்) பரப்புவதற்கும், கிறிஸ்துவால் அவரின் திருச்சபை இப்புவியில் நிறுத்தப்பட்டது. பல்வேறு இனங்களைச் சேர்ந்த, பல்வேறு தாலந்து களைக் கொண்ட அங்கத்தவர்களையும் இத்திருச்சபை உள்ளடக்கு கிறது. இம் மக்கள் கூட்டம் புவியில் விசேட பணியைச் செய்வதற்கு இறைவனாலே அழைக்கப்பட்டிருப்பதால் இத்திருச்சபை “எக்லீசியா” எனப்படுகிறது. சபை என பொருள்படும் கிரேக்க சொல் அழைக்கப் பட்ட ஒரு கூட்டத்தினரைக் குறிப்பதாகும். ஆரம்பத்தில் எருசலே மைச் சுற்றியுள்ள பகுதிகளில் சபைகளைக் குறிப்பதற்கும் பாவிக் கப்பட்டது. அவ்வாறே எல்லா எல்லைகளையும் தாண்டிய கிறிஸ்து வினால் ஆரம்பிக்கப்பட்ட முழுத் திருச்சபையையும் குறிக்க இது பாவிக்கப்படுகிறது.

பழைய ஏற்பாட்டுக் காலத்தில் இறைவனின் அழைப்பைப் பெற்ற இஸ்ரயேல் மக்கள் அவரின் சித்தத்தை அறிந்துகொண்டு அச்சேவையை நிறைவேற்றுவதைப் பொறுப்பாக ஏற்றுக்கொண்டனர். அப்பணி முற்றிலுமாக நிறைவு செய்யப்படாததால் புதிய இஸ்ரயேலாகிய இன்றைய திருச்சபைக்கு இப்பொறுப்பு கொடுக்கப் பட்டுள்ளது.

புனித பவுல் கிறிஸ்துவின் திருச்சபையை “கிறிஸ்துவின் உடல்” என்று அழைக்கிறார். ஒரு உடல் எவ்வாறு பலவிதமான தொழிற்பாடுகளைக் கொண்டுள்ளதோ அவ்வாறே திருச்சபையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல்வேறு வேலைகளைச் செய்யும் பல்வேறு மக்களை உள்ளடக்குகிறது. "அவரே சிலரைத் திருத்தூதுவர்களாகவும், ஆயர்களாகவும், போதகர்களாகவும் ஏற்படுத்தினார்." (எபேசியர் 4: 11 - 12). திருத்தொண்டாற்ற இறைமக்களை ஆயத்தப்படுத்தவும், கிறிஸ்துவின் உடலைக் கட்டி எழுப்பவும் இவர்களை அவர் ஏற்படுத்தினார். உடலில் பல்வேறு விதமான அவயவங்கள் இருப்பினும், அவை யாவும் முக்கியமானவைகளே. அதில் ஒரு சிறு அவயவமாவது ஒழுங்காகச் செயல்படாதுவிட்டால் முழுச் சரீரமும் பாதிப்படைகிறது. எமது உடலில் சிறு காயத்தினால் ஏற்படும் வேதனை முழு உடலையும் பாதிப்பதை நாம் அறிவோம். கிறிஸ்துவின் திருச்சபை சிறப்பாகச் செயல்பட்டு நல்ல கனியைத் தர வேண்டுமேயாகில், நல்ல தாலந்துளைக்கொண்ட அங்கத்தவரின் பங்களிப்பு அவசியமாகும். திருச்சபை நிறைவுடையதாய் இருப்பதற்கு ஒவ்வொரு அங்கத்தவரின் பங்களிப்பும் அத்தியாவசியமாகும்.

எபேசியர் 2:20ன்படி பவுல் திருச்சபையை ஒரு கட்டிடத்திற்கு ஒப்பிட்டுள்ளார். திருச்சபையை இன்னொரு கோணத்திலிருந்து நோக்குவதற்கு இது உதவுகிறது. ஒரு கட்டிடத்தைக் கட்டிமுடிப்பதற்கு கல், செங்கல், மணல், சீமெந்து ஆகியன தேவைப்படுவது போல் சபையின் நிறைவும் அதன் ஒவ்வொரு அங்கத்தவர்களின் ஒத்துழைப்பிலும் பங்களிப்பிலுமே தங்கியுள்ளது. இக்கட்டிடத்தின் மூலைக் கல் கிறிஸ்து ஆவார். எபேசியர் 4: 16 இல் "அவரால் தான் முழு உடலும் இசைவாய்ப் பொருந்தித் தன்னிடமுள்ள தசைநார்களால் இறுக்கிப் பிணைக்கப்பட்டுள்ளது."

பல அவயவங்களைக் கொண்டுள்ள உடலில் இசைவும் ஒருமைத்துவமும் இருக்கிறது. ஆண்டவர் இயேசு திருச்சபையிலும் பல் வேறுபாடுகளின் மத்தியிலும் ஒருங்கிசைவு காணப்படுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடலின் அவயவங்களிற்கிடையே பேதங்கள் இல்லாததுபோல், பல சபைகளாகச் செயல்படும் கிறிஸ்துவின் ஒரே திருச்சபையிலும் பேதங்கள், பொறாமைகள், சச்சரவுகள் ஆகியன ஏற்படக்கூடாது. உடலில் ஒரு அவயவம் இயங்க இன்னொரு அவயவத்தின் உதவி அவசியம். "கண் காதைப் பார்த்து உன்னில் பயன் ஏதும் இல்லை" என்று கூற முடியாது. அவயங்கள் ஒன்றோடொன்று இணைந்து செயற்படுவதுபோல், திருச்சபையிலும் இத் தொடர்பு அவசியப்படுகிறது. கிறிஸ்துவுக்கும் அவருடைய திருச்சபைக்கும் பிரிக்கமுடியாத தொடர்பு உண்டு. உடலின் செயல்கள் தலையால் ஆளப்படுவதுபோல், திருச்சபையும் ஆண்டவர் இயேசுவால் ஆளப்படுகிறது.

கிறிஸ்துவின் உடலாகிய திருச்சபையின் அங்கத்தவர்களாக அழைக்கப்பட்டிருக்கும் எமக்கும் விசேட பொறுப்புகள் உள்ளன என்பதை உணரவேண்டும். திருச்சபையில் எமது பங்களிப்பிலேயே இறுதியில் எமக்கான இறைத் தீர்ப்பும் தங்கியிருக்கும். இன்றைய திருச்சபையில் பல்வேறு குறைபாடுகள் இருப்பதை உணர்வோம். இவற்றில் முக்கியமானது பல்வேறு சபைகளுக்கிடையே உள்ள குரோதங்களாகும். திருச்சபை பல்வேறு சபைகளாகப் பிரிந்திருந் தாலும் அவை ஒற்றுமையாகச் செயல்படுவது அதிமுக்கியம். திருச்சபை வளர்ச்சிக்குத் தடையாயுள்ள சபைகளுக்கிடையே யுள்ள பேதங்களிலிருந்து விடுதலை பெறுவதற்கு திருச்சபை ஐக்கிய இயக்கங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. நாமும் இத்தகைய இயக்கங்களுக்கு எம்மாலான ஒத்துழைப்பைக் கொடுப்பது அவசியம். இன்றைய உலகில் கிறிஸ்துவின் பிரதிநிதியாக இருப்பது அவரின் உடலாகிய திருச்சபையாகும். அத் திருச்சபை யில் அங்கத்தவராயிருப்பது கிறிஸ்தவர்களாகிய நாமேயாவோம். ஒரு புனிதர் "கிறிஸ்துவுக்கு வேறு கைகள் இல்லை, இருப்பது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உங்கள் கைகளே!" என அறைகூவல் விடுத்துள்ளார். இதற்கு நாம் அளிக்கும் மாறுத்தரம் என்ன?

செயற்பாடு

1. திருச்சபையை இயேசுவின் உடல் என்று ஏற்று, அதில் அங்கத்துவம் வகிக்கும் எமக்கு புனித பவுல் தரும் விசேட செய்தி என்ன?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடம் 38.

# உலகெங்கும் பரவியுள்ள கிறிஸ்தவத் திருச்சபை

கிறிஸ்தவராகிய நீங்கள் உலகெங்கும் பரவியுள்ள "கிறிஸ்துவின் குடும்பத்தில்" ஒரு அங்கத்தவர் என்று அறிவீரா? நீர் கிறிஸ்துவின் உடல் என்னும் திருச்சபையின் அவயவமாக இருப்பதால் அந்த அங்கத்துவத்தைப் பெற்றுள்ளீர். புவியெங்கும் வாழும் கிறிஸ்தவர்கள் உலகக் கிறிஸ்தவக் குடும்பத்தவரின் அங்கத்தவராவர்.

ஆண்டவர் இயேசு இவ்வுலகில் ஆரம்பித்த திருத்தூதுப்பணி (நற்செய்தி) அவரின் சீடர்களினால் முன் கொண்டுசெல்லப்பட்ட போது திருச்சபை தோன்றியதென்பதை முன்னைய பாடங்களில் கற்றீர்கள். இச்சபையின் நோக்கு ஒவ்வொரு சந்ததிக்கும் நற்செய்தியை அறிவித்து, இறைமக்களின் மத்தியில் விசுவாசத்தைப் பாதுகாப்பதாகும். அறிவிக்கப்பட்ட நற்செய்தியை ஏற்றுக்கொண்டவர்கள் கிறிஸ்தவ விசுவாசிகள் ஆனார்கள். நற்செய்தி எங்கும் பரவியதால் திருச்சபையும் உலகெங்கும் வியாபித்தது. இதனால் கிறிஸ்தவ மக்கள் உலகளாவிய கிறிஸ்தவ சமுதாயத்தின் ஒரு பங்காயினர். இன்று உலகத்தில் உரோம ஆட்சியாளர்களின் நாட்களில் கிறிஸ்தவம் தீவிரமாகப் பரவிச் சென்றது. அவ் வேளையில், கிறிஸ்தவப் பக்தர்கள் பல துன்பங்களை எதிர்நோக்க வேண்டியிருந்தது. மேலும் அக்காலத்தில் சபை அங்கத்தவரிலே பலர் தம் உயிரைத் தியாகம் செய்யவேண்டி ஏற்பட்டது. அப்போது கிறிஸ்தவர்கள் ஏனைய கிறிஸ்தவர்களை அடையாளம் கண்டு கொள்வதற்காக "மீன் அடையாளம்" இரகசிய சின்னமாகப் பாவிக்கப்பட்டதென திருச்சபை வரலாறு கூறுகிறது. கிரேக்க மொழியில் மீன் "இக்துஸ்" **(ICHTHUS)** என்றழைக்கப்பட்டதே இதன் இரகசியமாகும். இச்சொல்லின் ஒவ்வொரு எழுத்தும் கிறிஸ்தவ விசுவாசத்தை அறிக்கையிடும் ஒரு வசனத்திலுள்ள சொற்களின் முதல் எழுத்தைக் குறிப்பிடுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயேசுஸ் - இயேசு

கிறிஸ்துஸ் - கிறிஸ்து

தியா - இறை

ஹுய்யொஸ் - மகன்

சோட்டேர் - இரட்சகர்




"இயேசு கிறிஸ்து, இறைமகன், இரட்சிப்பவர்"

இந்த மீன் சின்னத்தின் உதவியினால் கிறிஸ்தவர்கள் பிற கிறிஸ்தவர்களை அடையாளம் கண்டு அவர்களோடு ஐக்கியம் கொள்ளக்கூடியதாக இருந்தது. இன்றும் கிறிஸ்தவ ஐக்கியத்தின் சின்னமாக சிலுவை அடையாளம் இருக்கின்றது. கிறிஸ்துவான வர் சிலுவையின்மேல் தம் உயிரையே தியாகம் செய்து எமக்கு விடுதலையைப் பெற்றுக் கொடுத்தபடியால், இன்று அது எமக்கு வெற்றியின் சின்னமாயுள்ளது. உலகில் ஒரு மொழியைப் பேசுவோர், இன்னொரு மொழியைப் பேசுவோர் மத்தியில் சென்றாலும் சிலுவை யின் அடையாளத்தின் மூலமாக கிறிஸ்தவ சமுதாயத்தவரை இனங்கண்டு உலக சகோதரத்துவத்தில் பங்குகொள்ளக் கூடியதா யிருக்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆண்டவர் இயேசு தமது மரணத்திற்கு முன் திருப்பணி, சகோதரத்துவம், ஐக்கியம் என்பவற்றின் அடையாளமாக கடைசி இராப்போசனமாகிய திருவிருந்தை தம் சீடரோடு பகிர்ந்துகொண்டு அதன் மூலமாகத் தம்மை நினைவுகூரும்படி கட்டளையிட்டார். பரிசுத்த நற்கருணை என அழைக்கப்படும் திருவிருந்தின்போது, பக்தர்கள் விசுவாசத்தோடும் நன்றியறிதலோடும் ஒன்றாக தேசிய, இன, மொழி பேதமின்றி அப்பத்தையும் திராட்சரத்தையும் உட்கொள்கின்றார்கள். இந்த ஐக்கிய விருந்தின்போது கிறிஸ்துவுக்கும், மக்கள் ஒருவருக்கொருவர் இடையிலான உறவும் புதுப்பிக்கப்படுகிறது. இது கிறிஸ்துவின் உடலாகிய திருச்சபையில் உள்ள சகோதரத்துவத்தின் அடையாளமாகும். இவ்வழிபாட்டின்போது செபிக்கப்படும் "பரமண்டல செபம்" எந்த மொழியில் செபிக்கப்பட்டாலும் அது மக்கள் மத்தியிலே உள்ள ஐக்கியத்தை உணர்த்துகிறது. அதுபோன்றே வழிபாட்டின்போது நாம் ஒன்றாக விசுவாசத்தை அறிக்கையிடும்போது முழுக் கிறிஸ்தவ சமுதாயத்திற்கும் பொதுவான விசுவாசத்தை உறுதிப்படுத்தும் ஐக்கியத்தை ஏற்படுத்துகிறது. ஆதிகாலந்தொட்டே யாவராலும் உச்சரிக்கப்படும் "அல்லேலூயா", "ஆமென்" என்ற பதங்கள் இறைவழிபாட்டைக் கருத்துள்ளதாக்குகின்றன.

ஆரம்பகாலத்தில் இருந்தே, பழக்கவழக்கங்கள், வழிபாடு என்பவற்றோடு நின்றுவிடாது, ஒவ்வொருவரின் தேவைகளையும் பற்றி கிறிஸ்தவ மார்க்கம் கரிசனையாய் இருந்துள்ளதென திருத்தூதர் பணிநூல் கூறுகிறது. அக்காலத்தில் அப்போஸ்தலரின் தலைமைத்துவத்தின் கீழ் ஆரம்பிக்கப்பட்ட பொருளாதார திட்டத்தின் மூலம் கிறிஸ்தவ மக்கள் மத்தியில் இருந்த பொருளாதார ஏற்றத் தாழ்வுகளும் பெருமளவு தீர்க்கப்பட்டன. இப்பொழுதும் கூட கிறிஸ்தவ சமுதாயம் பல்வேறு அமைப்புகளுக் கூடாக பலருக்கு நிவாரணம் வழங்கிவருகின்றது. இடையிடையே நடைபெறும் இயற்கை அனர்த்தங்களின் போதும், அழிவின் போதும் இன, மத, குல பேதங்களைக் களைந்து உதவிசெய்வதற்கு கிறிஸ்தவ சமுதாயம் தயங்கியதில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருட்களைக் கொடுத்து உதவுவது மட்டுமல்லாது. விவசாயம், தொழில்நுட்பம், கல்வி, மருத்துவம் ஆகிய துறைகளிலும் தேவைகளைச் சந்தித்து உதவுவதில் உலகளாவிய திருச்சபை அளப்பரிய சேவைசெய்து வருகிறது. "உலகத் திருச்சபை மகாநாடு" இப்பணியில் முன்னின்று பல்வேளைகளிலும் மக்களுக்கு உதவிவந்துள்ளது. திருச்சபை முழு உலகிற்கும் தனது கரங்களை நீட்டும் ஐக்கியமாகும். கிறிஸ்தவ சமுதாயம் அன்பினை அடித்தளமாகக் கொண்டுள்ளது.

செயற்பாடு

1. ஆதித் திருச்சபையில் அடிக்கடி பாவிக்கப்பட்ட

(i) சொற்கள்

(ii) அடையாளங்கள் ஆகியனவற்றையும், அவற்றின் கருத்துக்களையும் விளக்குக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடம் 39.

# பௌத்த சமய விழாக்களும் பழக்கவழக்கங்களும்

இலங்கை வாழ் மக்களில் பெரும்பாலானோர் பௌத்தர் ஆவர். அவர்களின் சமயத் தலைவர் புத்தர் ஆவார். புத்தரின் வாழ்க்கை நிகழ்வுகள், பௌத்தம் இலங்கைக்கு வந்தமை ஆகியன தொடர்பாக பல பௌத்த சமய விழாக்கள் கொண்டாடப்படுகின்றன.

ஒவ்வொரு மாதமும் பூரண சந்திரன் தோன்றும் தினம் "போயா" அல்லது "நோன்மதி" தினமாகும். அன்றைய தினம் சமய நிகழ்ச்சிகள் பல நடைபெறுகின்றன. சில் எடுத்தல், சமய உரை கேட்டல், மலர்களைப் படைத்து விளக்கேற்றி வைத்தல், தானதருமம் செய்தல் ஆகியவற்றை மேற்கொள்வர். இச்செயல் களை இரு பிரிவுகளாகப் பிரிக்கலாம். அவை,

(1). பொருள்சார் வழிபாடு

(2). உளம்சார் வழிபாடு என்பனவாகும்.

மலர் படைத்தல், விளக்கேற்றல், தானம் செய்தல், ஒளிப்பந்தல் (தோரண) அமைத்தல், ஒளிக்கூடு செய்தல் என்பன வற்றின் மூலமாக புத்தபெருமானுக்கு மரியாதை செலுத்தல் பொருள்சார் வழிபாடாகும்.

புத்தபெருமானின் போதனைகளைத் தியானித்தல், அதன்படி ஒழுகுதல் என்பன உளம்சார் வழிபாடு ஆகும். சில்லெடுத்தல், தியானம் செய்தல், வேதம் ஓதலைக் கேட்டல் (பண) என்பன இவ்வித வழிபாட்டுடன் சேர்ந்த செயல்களாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும் பௌத்தர் எளிய வாழ்க்கையை மேற்கொள்ளக் கடமைப்பட்டுள்ளனர். அளவற்ற ஆசை, பிணைப்பு என்பன துக்கத் திற்கு அடிப்படை காரணமென்பர். வழிபாட்டிற்குச் செல்லும்போது வெள்ளை அல்லது மென்னிற ஆடை அணிவர். வழிபாட்டுத்தளத் திற்குப் பாதணிகளைக் கழற்றிவிட்டு செல்வர். “சில்” எடுப்பவர்கள் ஒழுங்காக நடந்து செல்வர். மென்மையாகப் பேசி அமைதியாக அமர்ந்திருப்பர். இரவுணவைத் தவிர்ப்பர்.

போயா தினங்கள் விசேட தினங்களாகக் கருதப்பட்டு அத் தினம் பல விசேட நிகழ்வுகள் நடைபெறுவதால் அது முக்கிய தினமாக இலங்கை வாழ் பௌத்தர் மத்தியில் கடைப்பிடிக்கப் படுகிறது.

## வெசக் தினம்

புத்தரின் பிறப்பு, ஞானம் பெறல், பரிநிர்வாணமடைதல் (மரணம்) என்பனவற்றை நினைவுகூரும் தினமாக வெசாக் கொண்டா டப்படுகிறது. மே மாதம் நோன்மதி தினம், “வெசக் நோன்மதி” தினமாகிறது. அன்று சில்லெடுத்தல், வேதம் ஓதுதலுக்குச் செவி மடுத்தல், தியானத்தில் ஈடுபடல், போன்ற உளம்சார் வழிபாடு நடைபெறுகின்றது. மலர் படைத்தல், விளக்கேற்றுதல், தூபம் காட்டுதல், ஒளிப்பந்தல் (தோரண) அமைத்தல், என்பன பொருள்சார் வழிபாடு சேர்ந்தவையாகும். இதுவே பௌத்தர்களின் முக்கிய சமய விழாவாகும்.

## பொசன் தின விழா

ஆனி மாத நோன்மதி தினமன்று இலங்கையில் இவ்விழா கொண்டாடப்படுகிறது. இது மஹிந்த அடிகளார் பௌத்த மதத்தை இலங்கைக்குக் கொண்டு வந்ததைக் கொண்டாடும் நாளாகும். அவர் மிஹிந்தலை என்னுமிடத்தில் இரண்டாம் பேதிஸ் (பியதிஸ்ஸ)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசனைச் சந்தித்தார். அந்த இடமே பொசன் என்று முக்கியத்துவம் பெறுகிறது. அத்தினம் பல்லாயிரக்கணக்கானோர் அங்கு வழிபாடு செய்வதற்குச் செல்கின்றனர்.

## எசல தின விழா

ஆடி மாத நோன்மதி தினத்தன்று இந்நாள் கொண்டாடப்படு கிறது. அன்றைய தினம் புத்தர் தாயின் கர்ப்பத்தில் குழந்தையாகப் பிரவேசித்தார். இதே தினம் முதல் பிரசங்கம் ஆற்றியமை என்பன நினைவுகூறப்படுகின்றன. கண்டி தலதா மாளிகையின் எசல பெரஹர இதனை ஒட்டியே நடைபெறுகின்றது. எசல பெரஹர சமயரீதியில் மட்டுமல்லாது கலாச்சார ரீதியிலும் முக்கியம் வாய்ந்த ஊர்வலமாக அமைகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடம் 40.

# இந்து சமய விழாக்களும் பழக்கவழக்கங்களும்

நாம் இவ்வுலகில் சீரிய வாழ்க்கை வாழ்ந்து மோட்ச வாழ்வை நோக்கிச் செல்லவேண்டும் என்பது இந்து சமய வல்லுனர்களின் கருத்தாகும். இதன் அடிப்படையில் இந்து சமய விழாக்கள் பல ஆரம்பிக்கப்பட்ட வருடத்தில் வெவ்வேறு நாட்களில் கொண்டாடப்படுகின்றன.

## தைப்பொங்கல்

தமிழ் பண்பாட்டின்படி தை (ஜனவரி) மாதம் முதலாம் திகதி நடைபெறும் அறுவடைசார்ந்த விழாவாகும். சூரியக்கதிரின் மூலம் எல்லா உயிரினங்களும் பெற்றுக்கொள்ளும் வளர்ச்சிக்காக நன்றிசெய்து கதிரவனுக்குப் படைப்பர்.

அன்றைய தினம் அதிகாலையில் குளித்து வீட்டையும் முற்றத்தையும் சுத்தமாக்கி கோலமிடுவர். கோலத்தின் நடுவில் விளக்கு எரித்து புதிய பானையில் பொங்கல் சமைப்பர். சூரியன் தோன்றியதும் பொங்கல், பழவகைகள், கரும்பு, இளநீர், பாசிப்பயறு ஆகியவைகள் படைக்கப்படுகின்றன. பின்னர் குடும்பத்தார், இனத்தவர், நண்பர்கள் சேர்ந்து பொங்கல் மற்றும் இனிப்புப்பண்டங்கள் உண்ணுவர்.

பசுக்களும் எருதுக்களும் அலங்கரிக்கப்பட்டு, தொழுவத்தில் பொங்கல் செய்து கதிரவனுக்குப் படைத்து பின்னர் அம்மிருகங்களுக்கும் கொடுக்கப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புதுவருடம்

வசந்தகாலம் மக்களுக்கு நலமான காலமாகும். போதிய உணவு கிடைக்கும் காலமாகும். பூமி மீன இராசியிலிருந்து மேக இராசியை அடையும் காலம். சித்திரை முதலாம் திகதியான அத்தினம் ஏப்ரல் மாதம் நடுப்பகுதியில் கொண்டாடப்படுகிறது. சூரிய லக்ணம் (நிலை) மாறும் வேளையில் புதுவருடம் பிறக்கிறது. இந்நாட்களில் இந்தியாவில் வடதிசை நோக்கி செல்வதாகத் தோன்றும் சூரியன் மதுரை மீனாட்சி அம்மன் கோவிலில் நேர் மேலாகத் தோன்றுகிறது. இந்நிகழ்வு சமயத்துக்கும் கிரகங்களுக்கு மிடையே உள்ள தொடர்பை எடுத்துக்காட்டுகிறது. இந்து சமயத்த வர் காலையில் குளித்து புத்தாடை அணிந்து நல்ல நேரத்தில் பால்சோறு சமைப்பர். கோவிலுக்குச் சென்று தெய்வத்தை வணங்கி வீடு வந்து உறவினர்களுடனும், நண்பர்களுடனும் உணவைப் பகிர்ந்து உண்பர். முதியவர்களையும், அன்புக்குரியவர்களையும் வணங்கி ஆசி பெற்றுக்கொள்வர். இக்காலத்தில் புதுவருட கொண் டாட்ட விளையாட்டு நிகழ்வுகளும் நடைபெறுகின்றன.

## தீபாவளி

தீபாவளி ஐப்பசி (ஒக்டோபர் / நவம்பர்) மாதத்தில் வரும் அமாவாசை தினத்தில் கொண்டாடப்படுகிறது. அதிகாலையில் தீபம் ஏற்றப்படுகிறது. வரிசையாக தீபமேற்றி வைத்து தீப வழிபாடு இந்தியாவிலும், இலங்கையிலும் நடைபெறுகின்றது. மனதில் உள்ள இருளை அகற்றி ஒளியேற்றிவைப்பதே இதன் நோக்கமாகும். அதிகாலையில் எழுந்து தலையில் எண்ணெய் வைத்து புத்தாடை அணிந்து பாதுகாப்பின் தெய்வமாகிய விஷ்ணுவை வணங்குவர். தீபாவளி இந்து மக்களுக்கு மகிழ்ச்சிகரமானதொரு தினமாகும்.

இப் பெருநாள் ஆரம்பமானதற்கான காரணத்தை விளக்கும் கதை ஒன்றுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நாகாசுரன்" என்ற பலசாலியான ஒரு தீய மனிதன் இருந்தான். அவன் இவ்வுலகில் தனக்கு நிகர் யாருமில்லை என எண்ணினான். எனவே இவன் நல்லவர்களைத் துன்பப்படுத்தி வந்தான். துன்பத்துக்காளானோர் விஷ்ணு தெய்வத்தை நோக்கி வேண்டுதல் செய்தனர். விஷ்ணு தானே அவதாரமாகப் புவியில் தோன்றி நாகாசுரனை அழிக்க முன்வந்தார். நாகசுரன் இறக்கும் தறுவாயில் தீயவழிகளைவிட்டு நல்லவனானான். இதனால் விஷ்ணு அவனின் இறுதி வேண்டுகோலுக்கு இணங்கினார். இந்நிகழ்வைக் கொண்டாடுவதே தீபாவளித் திருநாளாகும். நல்லவர்கள் வாழும் பொருட்டு தீயவர்களைத் தண்டிக்க முன்வந்தமையை இந்நாள் குறிக்கிறது.

## நவராத்திரி

யாவற்றையும் படைக்கும் திறன் இறைவனுக்கும் உண்டு. அத்திறன் அல்லது சக்தி இப்புவியின் தாய்க்கே உண்டென எண்ணினார். புரட்டாதி மாதத்தில் (செப்டெம்பர், ஒக்டோபர்) அமாவாசைக்கு அடுத்த இரவில் ஆரம்பித்து அடுத்து ஒன்பது நாட்களுக்கு இவ்வழிபாட்டு பூசை நடைபெறும். இல்லங்கள், கோவில்கள், பாடசாலைகள் ஆகிய மற்றும் பொது இடங்களில் உலகத் தாயின் படம் வைக்கப்பட்டு வழிபாடு செய்யப்படுகிறது. முதல் மூன்று இரவுகளும் பயமகற்றும் துர்கா என்ற பெண்தெய்வத்துக்கும், அடுத்த மூன்று இரவுகள் அறிவுக்கும் கலைகளுக்கும் தெய்வமாகிய சரஸ்வதிக்கும் வழிபாடு செய்தவற்காக ஒதுக்கப்பட்டுள்ளன. ஒன்பதாவது இரவில் அவர்கள் தம் தொழில் தொடர்பான ஆயுதங்கள், புத்தகங்கள் என்பவற்றை இறைவன் பாதத்தில் சமர்ப்பித்து பூசை செய்வர். பத்தாவது இரவு "விஜயதசம்" எனப்படுகிறது. பத்தாவது தினத்திலேயே திரும்பவும் தொழில், மற்றும் செயல்களை ஆரம்பிக்கின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மகா சிவராத்திரி

சிவன் கடவுளை வழிபடும் இவ்விசேட தினம் பெப்ரவரி மாதத்தில் இடம் பெறுகிறது. அன்று இரவு முழுவதும் வீடுகளிலும் கோவில்களிலும் சிவனுக்கு அர்ச்சனை செய்யப்படுகிறது.

இந்து சமயம் பலதெய்வ வழிபாட்டை ஏற்கின்றது. அவர்கள் பல்வேறு கடவுளை வழிபடுவதால் பல்வேறு விழாக்களையும் கொண்டாடுகின்றனர். இவ்விழாக்கள் அவர்களின் சமய வாழ்க்கை யை வளர்க்கிறது. உலகில் தாம் அனுபவிக்கும் நன்மைகளை எல்லா மக்களும் அனுபவிக்க இறை ஆசி வேண்டும் என்பது அவர்களின் பரந்த நோக்காக அமைகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடம் 41.

# இஸ்லாம் சமய விழாக்களும் பழக்கவழக்கங்களும்

இலங்கை வாழ் முஸ்லிம் மக்கள் மூன்று முக்கிய விழாக் களை கொண்டாடுகிறார்கள்.

## ரமசான் (ஈதுல் – பித்ர்)

இவ்விழாவை இஸ்லாமியர் ஒரு மாத கால நோன்பு அல்லது உபவாசத்தின்பின் கொண்டாடுகின்றனர். காலை ஆறு மணியளவில் ஆரம்பமாகும் உபவாசம் மாலை ஆறு மணியளவில் முடிவுறும். குறிக்கப்பட்ட நேரங்களில் இறைவனுக்கு செபம் (அல்லாஹ் தஆலா) ஏறெடுக்கப் படுகின்றது. நோயாளிகள், சிறுவர் தவிர ஏனைய மக்கள் அனைவரும் நோன்பில் கட்டாயமாகப் பங்குபற்று கின்றனர்.

இம்மாதத்தில் அவசியமற்ற களியாட்டங்களைத் தவிர்க் கின்றனர். இந்நாட்களில் கீழான காரியங்களைவிட்டு ஆன்மீக செயல்களை விருத்தி செய்யும் வண்ணமாக ஏழை மக்களுக்கு அன்பும் இரக்கமும் காட்டிச் செயல்படுகின்றனர். வாழ்க்கையில் ஏழை மக்களின் துன்பமான அனுபவங்களை அறிந்து ஏற்றுக்கொள் ளவும் இது உதவுகின்றது. இறுதியில் ஏழை மக்களுக்கு உணவு, உடை ஆகியன அளித்து விழாவை நிறைவு செய்கின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்வமிக்க இஸ்லாமியர் "ஸக்காத்" என்னும் வரியை ஏழை மக்களுக்கு உதவுவதற்காகச் செலுத்துகின்றனர். அதிலிருந்து வறிய மக்களுக்கு பல உதவிகள் வழங்கப்படுகின்றன. இறைவனின் தியாக அன்பிற்காக நன்றி கூறுவதற்காக மஸ்ஜித் திற்குச் செல்வதோடு உறவினர் நண்பர்களை சந்தித்து மகிழ்வுறுவ துடன் இவ்விழாக் காலம் நிறைவு பெறுகின்றது. மார்ச் மாதத்தில் (ரமழான் மாதத்தில்) இப்பெருநாள் கொண்டாடப்படுகிறது.

## ஹஜ்ஜிப் பெருநாள் (ஈதுல் – அல்ஹா)

4500 ஆண்டுகளுக்கு முன், அல்லாஹ்வின் ஆணைகளுக்குக் கீழ்ப்படிந்த இஸ்மாயில் நபி அவர்களை அவரது தந்தை இப்ராஹீம் நபி அவர்கள் பலிகொடுக்க எண்ணியதை நினைவு கூறுமுகமாக துல்ஹஜ் என்னும் அராபிய மாதத்தில் பத்தாம் திகதி இவ்விழா இடம்பெறுகின்றது. இப்ராஹீம் நபி அவர்களுக்கு 85 வயதாயிருந்த போது இஸ்மாயில் நபி அவர்கள் பிறந்தார்கள். கடவுளின் ஆணைப்படி இக்குமாரனைப் பலியிடுவதற்கான ஆயத்தங்கள் செய்யப்பட்டன. இப்பலியின் மூலம் இறைவனிடத்தில் இப்ராஹீம் வைத்திருந்த நம்பிக்கை, அன்பு, கீழ்ப்படிவு என்பது தெளிவாகின. இறுதியில் இறைவன் இஸ்மாயிலைத் தப்புவித்து, பதிலாக ஒரு மிருகத்தை பலியிட உதவினார். இந்நிகழ்வை நினைவு கூறுமுகமாக ஒருவர் தமது வாழ்வில் ஒரு முறையாவது ஹஜ்ஜி யாத்திரை செய்யவேண்டுமென்ற நியதி இப்போது இஸ்லாமியர் மத்தியில் உள்ளது. மனிதர்களின் தீய குணங்களைக்களையும்படி அடையாளச் செயலாக அவர்கள் உணவை நண்பர்களோடும், ஏழைகளோடும் பகிர்ந்து உண்பர். அன்றைய தின உணவானது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இனத்தவர்களின் மத்தியில் ஐக்கிய உணவாக்வும் கொண்டாடப் படுகிறது.

## மீலாத் – உன் – நபி

இவ்விழா சமயம் சாராத, ஒரு பிறந்த தின விழாவாகும். முஹம்மத் நபி (ஸல்) அவர்களின் பிறந்த நாளை இவ்விழா ஞாபகப்படுத்துகிறது. முன்னர் வாழ்ந்த அனைத்து நபிகளின் வாக்குப்படி இறுதியாகத் தோன்றியவர் முஹம்மத் (ஸல்) நபிகளாவர். இவர் சமாதானம். சகோதரத்துவம், இறைவனோடு சமாதானம், இறைபடைப்புகளோடு நல்லுறவு ஆகிய செய்திகளை உலகுக்கு அருளினார். அவரை மனித குலத்தின் நபியென இஸ்லாமியர் கருதுகின்றனர்.

இவ்விழா ஒரு முழு மாதமாக நடைபெறும். அதன் முக்கிய பகுதிகளாவன.

1. முஹம்மத் நபியின் வாழ்க்கை, பணி என்பன பற்றி பிரசங்கங்கள் மஸ்ஜித் என்று அழைக்கப்படும் பள்ளிகளிலும், பொது இடங்களிலும் நடைபெறும்.

2. இஸ்லாமிய, மற்றும் வேறு தலைவர்கள் பங்குகொள்ளும் பொதுக் கூட்டங்கள் நடைபெறும்.

3. ஏழைகளுக்கு உணவு வழங்கப்படல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

றபி - உல் - அவ்வல் என்னும் அறபிய மாதம் 12ம் திகதி இவ்விழாவிற்காக ஒதுக்கப்பட்டுள்ளது.

இந்நாட்களில் இறைவனின் படைப்பு மதிக்கப்பட்டு, ஏழைகளுக்கு முக்கிய இடம் அளிக்கப்படுகிறது. இது இவ்விழாவின் சிறப்பம்சமாகும். இவ்விழாவின்போது அவசியமற்ற களியாட்டங்கள் சேர்க்கப்படுவதில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடம் 42.

# இலங்கைக் கிறிஸ்தவன்

இன்று இலங்கை பல்லின, பல்சமய சமுதாயமாயுள்ளது. இவற்றினதும், மற்றும் குல அடிப்படையிலும் இலங்கை மக்கள் பிரிந்துள்ளார்கள். குல பேதம் ஓரளவு குறைந்து கொண்டு போனாலும், இன, மத வேறுபாடுகள் வளர்ந்து காணப்படுகின்றன.

இலங்கையில், தமிழர், சிங்களவர், பறங்கியர், முஸ்லிம் மக்கள் வாழ்கின்றனர். இவர்களின் பழக்கவழக்கங்களும் பண்பாடு களும் வேறாகும். பௌத்தர், கிறிஸ்தவர், இந்துக்கள், இஸ்லாமியர் என்போர் இலங்கையில் காணப்படும் பல்வேறு சமயத்தவராவர். இவர்களின் சமய நம்பிக்கைகளும், திருவிழாக்களும், வேறான தாகும்.

இவ்வாறான சமுதாயத்தில் வாழும் கிறிஸ்தவன் பொறுப்பு மிக்கவனாக எல்லா மக்களுடனும் சமாதானத்தோடு வாழ்வது அவசியமானதாகும். சில வேளைகளில் சமுதாய நலன் கருதி ஒன்றாகச் சேர்ந்து செயல்படுவது அவசியமாகின்றது. பிறரின் சமயக் கொள்கைகளை நாம் ஏற்காது விட்டாலும், அவர்களோடு நட்புடன் வாழ்வது நலமாகும். வெவ்வேறு இன, சமய மக்களிடை யே நல்லெண்ணம் வளரவேண்டும்.

இவ்வாறான சூழ்நிலையை வளர்ப்பதில் கிறிஸ்தவர்களுக்கு விசேட பொறுப்புள்ளது. யாவரோடும் நட்புடன் வாழ்வது கிறிஸ்து வின் அன்பின் செயலாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொரிந்தியர் 13ம் அதிகாரத்தில் பின்வருமாறு காண்கிறோம்.

"அன்பு பொறுமையுள்ளது; நன்மை செய்யும்; பொறாமைப் படாது; தற்புகழ்ச்சி கொள்ளாது; இறுமாப்பு அடையாது.

அன்பு இழிவானதைச் செய்யாது; தன்னலம் நாடாது; எரிச்சலுக்கு இடம் கொடாது; தீங்கு நினையாது; அன்பு தீவினையில் மகிழ்வுறாது; மாறாக உண்மையில் அது மகிழும்.

அன்பு அனைத்தையும் பொறுத்துக் கொள்ளும்; அனைத்தை யும் நம்பும்; அனைத்தையும் எதிர்நோக்கி இருக்கும்; அனைத்திலும் மன உறுதியாய் இருக்கும்."

இவ்வாறு அந்நியரை புரிந்துணர்வோடு நடத்துதல் கிறிஸ்தவர் களின் கடமையாகும். பிறசமயத்தவரின் பழக்கவழக்கங்கள் நம்பிக் கைகளைப் பற்றி நாம் விவாதிக்க வேண்டியதில்லை. எமது சமயமே மேலானது பிழையற்றதென்று அகங்காரம் கொள்ளாது பிறரின் நிலையை நாம் புரிந்துகொள்ள முயற்சிசெய்ய வேண்டும்.

அவர்களின் சமய, கலாச்சார நிகழ்ச்சிகளுக்கு நாம் உதவி என்ற நினைவோடு அனைவரையும் சகோதரரென மதித்து நடக்க வேண்டும். எமது கிறிஸ்தவ நற்குணங்கள் விளங்கும் படி நாம் செயல்படல் வேண்டும்.

ஏனைய சமயங்கள் இங்கு ஏற்கனவே நிலைபெற்றிருந்த வேளையிலேயே கிறிஸ்தவம் ஐரோப்பிய நாடுகளிலிருந்து இலங்கைக்கு அறிமுகம் செய்யப்பட்டது. எனவே ஐரோப்பிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பண்பாடுகள் பலவும் கிறிஸ்தவ மக்களைக் கவர்ந்தமை புதுமை யல்ல. கிறிஸ்தவ மக்கள் தம்மை பிறரிடமிருந்து பிரித்துக்கொள்வ தற்கும் இது வழிகோலியது. காலப்போக்கில் இவ்வாறான மேற்கத் திய மோகம் குறைந்துபோகும் என்று எதிர்பார்க்கப்படுகிறோம். இப்பிழையை உணர்ந்த கிறிஸ்தவர் பலரும் தற்போது கிறிஸ்தவ விழாக்களின் இலங்கை கலாசாரத்தை ஒட்டிய பல பழக்கவழக் கங்களை அதிகமாகச் சேர்த்து வருகின்றனர். எமது கலாச்சாரம் எமது சொத்தாகும் என்ற உணர்வோடு செயல்படல் அத்தியாவசிய மாகும்.

தமிழ், சிங்களப் புத்தாண்டு போன்ற தேசிய விழாக்களின் போது நாம் யாவரும் ஒன்றிணைந்த இவ்விழாக்கள் எமது கலாச்சா ரத்தின் கூறுகள் என்ற உணர்வோடு அவற்றைக் கொண்டாடல் வேண்டும்.

பிறசமயத்தவரின் நம்பிக்கைகள், எதிர்பார்ப்புக்கள், எண்ணங் கள், சமய முறைகள் ஆகியவற்றை மதித்து அவர்களின் தனித்து வத்தை ஏற்கும் அதே வேளையில் எமது கிறிஸ்தவ தனித்துவத் தையும், நம்பிக்கைகளையும் உறுதிப் படுத்திக்கொள்ள வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அட்டவணை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அட்டவணை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நம் நாட்டு இளஞ் சந்ததியினரின் நலன் கருதி நம் அரசு உங்களுக்கு வழங்கும் இந்நூலை அடுத்த ஆண்டும் உங்கள் சகோதர்களுக்கு வழங்கத்தக்கமுறையிற் கவனமாக வைத்துப்படிக்க.

பாடசாலையின் பெயர்.........................................

| | மாணவர் பெயர் | ஆண்டு | வகுப்பு ஆசிரியரின் கையொப்பம் |
|---|---|---|---|
| 1999 | [illegible]........ | [illegible]...... | [illegible]........... |
| 2000 | ........................ | ........ | ........................ |
| 2001 | ........................ | ........ | ........................ |
| 2002 | ........................ | ........ | ........................ |
| 2003 | ........................ | ........ | ........................ |
| 2004 | ........................ | ........ | ........................ |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org